# இணையற்ற இந்தியர்கள்

## (தொகுதி–I)






படைப்புச் செம்மல்
பாபநாசம் குறள்பித்தன்

# இணையற்ற இந்தியர்கள்

## (தொகுதி-1)

படைப்புச் செம்மல்
**பாபநாசம் குறள்பித்தன்**

**தமிழன் பதிப்பகம்**
தமிழன் கலைக்கூடம்,
3, ஐந்தாவது தெரு,
அவ்வை திருநகர், விருகம்பாக்கம்,
சென்னை - 600 092.

# நூல் விவரக் குறிப்பு


| | |
|---|---|
| நூலின் பெயர் | இணையற்ற இந்தியர்கள் தொகுதி-1 |
| நூலாசிரியர் | பாபநாசம் குறள்பித்தன் |
| உரிமை | ஆசிரியருக்கு |
| பதிப்பு | முதற்பதிப்பு - 2009 |
| நூலின் வகை | வரலாறு |
| பக்கங்கள் | 176 பக்கங்கள் |
| நூல் அளவு | கிரவுன் |
| எழுத்து | 12 புள்ளிகள் |
| தாள் | வெள்ளைத்தாள் |
| ஒளி அச்சுக்கோவை: | குகன் கம்ப்யூட்டர்ஸ், சென்னை-8. (94442 92899) |
| அச்சிட்டோர் | |
| **விலை** | **ரூ.60.00** |
| வெளியீடு | **தமிழன் பதிப்பகம்**<br>தமிழன் கலைக்கூடம்,<br>3, ஐந்தாவது தெரு,<br>அவ்வை திருநகர்,<br>விருகம்பாக்கம்,<br>சென்னை - 600 092. |



**தங்க கண்ணதாசன், எம்.ஏ.,**
செயலர்,
விவேகானந்தர் சமூகத் தொண்டு நிறுவனம்,
பாபநாசம் - 614 205,
தஞ்சை மாவட்டம்.
அலைபேசி: 94437 88766

# நட்புரை

அன்புடையீர் வணக்கம்!

எங்களூர்க்காரராக இருந்தவர், இன்று எழுத்துலகிற்குச் சொந்தக்காரராக ஆனவர், தோழர் கவிஞர் பாபநாசம் குறள்பித்தன் அவர்கள்.

பள்ளி நாளிலிருந்தே நல்ல நூல்களைத் தேடிப் படிப்பதிலும், எழுதுவதிலும் இதயம் பதித்தவர்.

அதனால் இளமை தொட்டே அவரது எழுத்துக்களைப் படித்தும், பேச்சுக்களைக் கேட்டும் வருபவன் என்பதிலே எனக்குள் என்றுமே பெருமையுண்டு.

எங்களூரில் முதன்முதலாக கவியங்கம் செய்தவரே இவர்தான். இத்தகு ஆற்றலைப் பெற்றதனால்தான், இன்று இவர் 80 நூல்களுக்கும் மேல் எழுதியிருக்கிறார்.

பல்வேறு விருதுகளைப் பெற்றிருக்கிறார் என்பதையும் அறிய முடிகிறது. இந்நூலில், இந்தியாவில் பிறந்த இணையற்றத் தலைவர்களைப் பற்றி எழுதி வரலாறு படைத்திருக்கிறார்.

இந்நூல், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பயன்படும் நூல் மட்டுமல்ல - நாட்.டுக்காகவும், மொழிக்காகவும் பாடுபட்ட பெருமக்களின் வாழ்க்கையை அறிந்துகொள்ள விரும்புகின்ற யாவருமே படித்தறியலாம்.

உள்ளத்தில் பதியன்போட்டு மகிழலாம்.

அன்புத் தோழருக்கு என் இதயம் கனிந்த வணக்கமும், பாராட்டும்.

*தோழமையுடன்,*
**தங்க கண்ணதாசன்**



## என்னுரையாக...

## *வாழ்க்கையைப் படிப்போம்!*

இனிய வணக்கம். தமிழுக்காக உழைத்தவர்களையும், தமிழ்நாட்டிற்காக உழைத்தவர்களையும் நாம் அவர்கள் பிறந்த நாளிலும், மறைந்த நாளிலும் நினைக்காமல், என்றென்றும் நினைக்க வேண்டும்; நெஞ்சில் பதிக்க வேண்டும்; வாயார வாழ்த்த வேண்டும் என்பது என் எண்ணம்.

நான் பல ஆண்டுகளாக நல்லோர்களின் வாழ்க்கை வரலாறுகளையே படித்து வருகிறேன். ஒவ்வொரு வாழ்க்கையும் ஒவ்வொரு கோணத்தில்...

சிலரது வாழ்க்கை புதிராகவும், பலரது வாழ்க்கை புனிதமாகவும், வேறு சிலர் வாழ்க்கை தியாகமாகவும், போராட்டமாகவும் இருப்பதை அறிந்தேன்.

ஒவ்வொருவரைப் பற்றியும் நிறையவே படித்தேன். அதில் பயனுள்ளவைகளை மட்டுமே என் மனதில் பதித்தேன். அவைகளையே தொகுத்தேன்; அத்தொகுப்பே இந்நூல்.

இந்நூலினை எழுதுகின்ற நல்வாய்ப்பினை நல்கிய தமிழன் தொலைக்காட்சி நிர்வாக இயக்குநர் திருமிகு. கா.கலைக்கோட்டுதயம் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியும் வணக்கமும்.

நல்லதொரு நட்புரையை வழங்கி சிறப்பித்துள்ள விவேகானந்தர் சமூகத் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் திருமிகு.தங்க.கண்ணதாசன் அவர்களுக்கு என் நன்றி.

எப்போதும்போல் என் எழுத்திற்கும் இதயத்திற்கும் துணை நிற்கின்ற உயிர்த் துணைவியார் நீலா கண்ணன் அவர்களுக்கு என் வணக்கமும் பாராட்டும்.



**பாபநாசம் குறள்பித்தன்,**
13/1, இரண்டாவது குறுக்குத்தெரு,
வெள்ளாளர் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-24.
அலைபேசி: 94444 54335

# பதிப்புரை

**'பூமிப்பந்தில் உருவான நாடுகளில்
இந்தியா ஒரு உன்னதமான பூமி!'**

இயற்கை எவ்வளவுக்கு எவ்வளவு வளம் வழங்கியிருக்கிறதோ அந்த அளவிற்கு மனித நேயமும், இறையாண்மையும் நிறைந்த நாடு.

ஆன்மீகவழி நடத்துதலிலும்சரி, அரசோச்சும் ஆற்றலிலும்சரி எண்ணற்ற தலைவர்களை ஈன்றெடுத்து தந்த நாடு.

அன்பும், அகிம்சையும் உலகை வெல்லும் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கிய மண் நமது பாரதமண். இந்த அடிப்படையில்தான் "இணையற்ற இந்தியர்கள்" என்ற தலைப்பில் ஆசிரியர் இந்நூலை யாத்திருக்கிறார்.

நூலுக்குள் நுழைந்து அதன் சிறப்பை உணர்ந்து கொள்ளப் போகிறீர்கள். இது போன்ற சிறந்த நூல்களைப் தேர்ந்தெடுத்துப் படித்து அறிவை விசாலமாக்கிக் கொள்வது நல்லது. 'தமிழன் பதிப்பகம்' அந்தப்பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

வழக்கம்போல் நூலுக்கு முகப்பும், ஓவியமும், அச்சுப் பிழைகள் நீக்கவும் உதவிய அலுவலக ஊழியர்களுக்கும், நூலை மின் அச்சுக்களால் கோர்த்து தந்த குகன் கம்ப்யூட்டர்ஸ்க்கும், நூலை அச்சிட்டு தந்த ஜெம் ஆப் செட் கண்ணப்பன் அவர்களுக்கும் பதிப்பகத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

பதிப்பகத்தார்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தென்னாட்டு சர்தார்! | 7 |
| 2. | சாதித் தீயிக்கு சமாதி கட்டியவர்! | 38 |
| 3. | 'தமிழ்நாடு' கண்ட தலைமகன் | 57 |
| 4. | தென்னகத்து முதல் விடுதலைப் புலி! | 72 |
| 5. | அன்பு என்றால் அன்னை! | 86 |
| 6. | கீதாஞ்சலி நாயகன் | 102 |
| 7. | ஒளிச் சிதறல்! | 110 |
| 8. | வீரத் துறவி | 114 |
| 9. | வந்தே மாதரம் | 123 |
| 10. | தமிழே உயிராய்...! | 133 |
| 11. | கணித மேதை | 142 |
| 12. | அறிவியல் அறிஞர் | 150 |
| 13. | கல்விக் கண் தந்தவர்...! | 155 |

## 1. தென்னாட்டு சர்தார்!

அவர் சுதந்திரப் போராட்ட வீரர். அவர், வேலூர் சிறையில் இருந்தபோது ஒரு நிகழ்ச்சி நடந்தது.

கடுங்காவல் தண்டனை விதிக்கப்பெற்ற அரசியல் கைதிகளும் சிறைக்குள் வேலை செய்ய வேண்டும் என்னும் விதி அப்போது இருந்தது.

வேலூர் சிறையில் இந்த விதிகளின்படி அரசியல் கைதிகளுக்கு வேலைகள் கொடுக்கப்பட்டன.

ஆனால், எந்த வேலையாக இருந்தாலும், அதைச் செய்யத் தெரிந்தவர்களால்தான் அதைச் செம்மையாக செய்ய முடியும் அல்லவா?

பெரும்பாலான அரசியல் கைதிகள், தொழிலாளி யாக இல்லாத காரணத்தால், கொடுத்த வேலையைச் செய்ய அவர்களுக்குத் தெரியவில்லை. இதனால், அவர்களிடம் வேலை செய்வதற்காகக் கொடுக்கப் பட்ட மூலப் பொருள்கள் மிகுதியாக வீணாகின.

இது, சிறை அதிகாரிகளின் கவனத்திற்குப் போயிற்று. கைதிகளைக் கூப்பிட்டு, அவர்களுக்கு என்ன வேலை செய்யத் தெரியும் என்று கேட்டு, அதன்பின் அவர் களுக்குத் தெரிந்த வேலைகளை மட்டுமே கொடுப்பது என்று முடிவாயிற்று.

இதையறிந்த அந்தப் போராட்ட வீரருக்கு, அரசியல் காரணமாகச் சிறைக்கு வந்தவர்களை கடுங்காவல் கைதிகளைப் போல நடத்துவது பிடிக்கவில்லை.

அவர், மறுநாள் விசாரிக்கப்படவிருந்த சிறைக் கைதிகள் சிலரிடம் பேசினார். அவர்களுள் மூவர் அவருக்கு நண்பர்கள். அவர் ஊர்க்காரர்கள்.

அவர், அவர்களுக்கு இரகசியமாய் சில யோசனைகள் சொல்லிவிட்டு வந்துவிட்டார்.

மறுநாள் அவர்கள், அதிகாரிகள் ஆபீசுக்குக் கொண்டுபோய் வெள்ளை சிறை அதிகாரி முன் நிறுத்தினார்கள். சுதந்திரப் போராட்ட வீரரின் நண்பர்களான மூவரும் முன்னால் நின்றார்கள்.

வெள்ளைக்கார துரை, முதல் இரு கைதிகளிடம் கேட்டார்: ''உங்களுக்கு என்ன வேலை செய்யத் தெரியும்?''

''எனக்குக் கூட்டங்களில் சொற்பொழிவு ஆற்றத் தெரியும்'' என்றார் முதல் ஆள்.

''எனக்குச் சத்தியாக்கிரகம் செய்யத் தெரியும்!'' என்றார் இரண்டாம் நபர்.

துரையின் முகம் கோபத்தால் சிவந்தது. இந்த வேலைகளையெல்லாம் சிறையில் செய்ய முடியுமா?

மூன்றாவது நபரை நோக்கிய துரை, ''உமக்கு என்ன வேலை தெரியும்?'' என்று கோபமாகக் கேட்டார்.

''ஐயா! நான் பண்டாரம். இறந்து போனவர்களுக்கு கருமாதி முதலிய சடங்குகள் செய்ய எனக்குத் தெரியும்'' என்றார், மூன்றாவது நபர்.

இதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து துரையிடம் சொன்னவுடன், துரை தன் இருக்கையைவிட்டே எழுந்துவிட்டார்.

''இனியும் மற்றவர்களை நான் விசாரிக்க விரும்பவில்லை. அரசியல் கைதிகளுக்கு இனிமேல் சிறையில் எந்த வேலையும் கொடுக்க வேண்டாம். கடுங்காவல் பெற்ற கைதிகளையும், வெறுங்காவல் கைதிகளைப் போலவே நடத்துங்கள்...'' என்று உத்தரவிட்டுப் போய்விட்டார்.

இப்படி வெள்ளை அதிகாரிகளையே தம் விவேகத்தால் விழிபிதுங்க வைத்த அந்தச் சுதந்திரப் போராட்ட வீரர் யார்?

சர்தார் வேதரத்தினம்தான் அவர்...!

நமது இந்திய நாட்டின் விடுதலை வரலாற்றில் அஞ்சா நெஞ்சமும், அழியா ஆற்றலும், துவழாத துணிவும் சர்தார் வேதரத்தினம் அவர்களின் பெயர் அழுத்தமாகவே பதிந்துள்ளது.

வீரத்தின் விளைநிலமாகவும், ஈரத்தின் சாரமாகவும் அவர் வாழ்வு நிலைத்திருக்கிறது.

தர்மத்தின் தலைமகனாய் வாழ்ந்த காந்திஜியின் நேர்மையான வீரர்களில், சர்தார் வேதரத்தினம் முதல் வீரர் ஆவார்.

ஒழுக்கத்தாலும், மனித நேயத்தாலும் மக்கள் இதயங்களில் சிம்மாசனம் போட்டவர்.

பிரிட்டிஷ்காரர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருந்து, அவர்களது அறிவுத்திறனைக் கலக்கி வந்தவர்.

தேசபக்தியிலும், தெய்வ பக்தியிலும் நேசமாய் நெஞ்சைப் பதித்தவர், நிமிர்ந்து நின்றவர்.

இப்படி பல்வகை சிறப்புகள் பெற்றிருந்தமை யால் தான் நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை இதயம் திறந்து சர்தாரை இப்படிச் சிறப்பித்திருக்கிறார்.

*உத்தமருள் உத்தமனாம் காந்தியண்ணல்*
*உவந்து கொள்ளும்படி வாழ்ந்த உயர் சீடன்*
*சத்தியத்தைக் கடைபிடித்த சாந்தசீலன்*
*சன்மார்க்க நெறி தவறாச் சமூகத் தொண்டன்*
*நித்தியமாம் பரம்பொருளே நிறைந்த நெஞ்சன்*
*நிலவொளிபோல் சிரித்த முகம் நீங்கா நேயன்*
*வித்தகனாம் வேதரத்னம்பிள்ளை நாமம்*
*விளங்கிநிற்கும் அறிவறிந்தோர் வீடுதோறும்.*

தென்னகத்தின் சர்தார் என்று போற்றப்பட்ட சர்தார் வேதரத்தினம் அவர்களின் குடும்பமே தேசப்பற்று கொண்டது என்று கூறலாம்.

அதற்கு சாட்சியாக அவர் மகன் திரு.வே.அப்பாக் குட்டி அவர்கள் கூறியதிலிருந்து அறியலாம்.

''நான் சிறுவனாக இருக்கும்போது பம்பா யிலிருந்து மிக முரடாக இருந்த கதர்ப் புடவையைக் கொண்டு வந்து எனது தாயாருக்குக் கொடுத்தார்கள். அன்று முதல் அனைவரும் கதர்தான் உடுத்து கின்றோம்.

முதன்முறை சிறையிலிருந்து வந்ததும், பலரும் தந்தையைக் காண வந்தார்கள்.

நான் அக்காலத்தில் சிறப்பாக இருந்த மயில் கண் வேட்டியை உடுத்திக்கொண்டு எதிரே போய் நின்றேன்.

என்னை அருகில் அழைத்து, என் வேட்டியைப் பிடித்து அவிழ்த்து, கிழித்துவிட்டு, தான் போட்டிருந்த பூப்போட்ட கதர்த் துண்டைக் கொடுத்தார்கள்.

*1930* ஆம் ஆண்டில் உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது சொத்துக்கள் பறிமுதலானதுடன், வேதாரண் யத்தில் நடத்தி வந்த பெரிய ஜவுளிக்கடையும், அந்நியத்துணி மறுப்புப் போராட்டத்தின் மூலம் மூடப்பட்டு, ஏலமிடப்பட்டது.

இதனால், குடும்ப வருவாய் ஒன்றும் இல்லாமல் போனதுடன், தந்தையும் சிறைப்பட்டதால், குடும்பப் பொருளாதாரம் வெகுவாகப் பாதித்தது.

அன்றன்று சாப்பாட்டு நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்பது தெரியாத நிலை.

*1930* இல் எனது தாத்தா அப்பாக்குட்டிப்பிள்ளை அவர்களுக்கு வயது *92* இருக்கலாம். *1933* இல் காலமான பொழுது *95* வயது.

தாத்தா அவர்களிடம் அடக்குமுறைக்குப் பெயர் பெற்ற டெபுடி கலெக்டர் பொன்னுசாமி பிள்ளை அவர்கள், எனது தந்தையவர்களை மன்னிப்பு வாங்கிக் கொள்ளும்படியும், மன்னிப்பு வாங்கினால் சிறையில் இருந்து விடுவிப்பதுடன், பறிமுதல் செய்த சொத்துக்கள் அனைத்தையும் கொடுத்து, மேற் கொண்டு அரசாங்க சலுகைகளையும் பெற்றுத் தருவதாகக் கூறினார்.

தாத்தா அவர்கள், “பையன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடுதலை பெறுவதைவிட சிறையிலேயே இருக்கட்டும்...” என்று கூறிவிட்டார்கள்.

அந்தக் காலத்தில் திருமறைக்காடு, வடமொழியில் வேதாரண்யம் என்று அழைப்பார்கள்.

‘வேதாரண்யம் என்ற திருமறைக்காடு, ஒரு ஞான பூமி. வேதநாயகனாக, வேதநாயகியாக, வேத தீர்த்தமாக எல்லாம் வேதமயமாக விளங்கும் திருத்தலம் வேதாரண்யம்.’

பாண்டிய நாட்டிலே தலைதூக்கி இருந்த சமண சமயத்தை அடக்கி, அங்கே சைவத்தை வளர்ப்பதற்கு ஞானசம்பந்தர் மதுரைக்குப் புறப்பட்டது இந்த ஊரிலிருந்துதான்.

சப்தவிடங்கத் தலங்களுள் திருமறைக்காடு புவனவிடங்களுக்கு உரிய தலமாக சிறப்புப் பெற்றிருக்கிறது.

இங்கே இறைவன் ஆடுவது ஹம்ஸபாத நடனம். தலைசிறந்த சக்திபீடங்களுள் ஒன்றாகவும் இத்தலம் போற்றப்படுகிறது.

மனிதன் மரணத்திற்குப்பின் என்னவாகிறான்? என்கிற ஆய்வில் ஈடுபட்ட கடோபநிஷத்தில் வரும் நசிகேத ரிஷி இந்த ஊர்க் கோயிலிலேதான் தவம் செய்தாராம். அவர் சிலை இவ்வூர் கோயிலில் இருக்கிறது.

பரஞ்சோதி முனிவர், அகோர தேவர், தாயுமானவர் என்று பல சான்றோர்கள் இத்திருமறைக்காட்டிலே தோன்றியிருக்கிறார்கள்.

15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பரஞ்சோதி முனிவர் இவ்வூரிலேதான் பிறந்திருக்கிறார்.

இப்படி ஆன்மிகத் திருத்தலமானஇவ்வூரில்தான் சர்தார் வேதரத்தினம் பிறந்தார்.

திருமறைக்காட்டுக் கோயிலின் தொண்டில் இரண்டறக் கலந்துவிட்ட குடும்பம், அப்பாக்குட்டி பிள்ளை அவர்களின் குடும்பம்.

அப்பாக்குட்டி பிள்ளை அவர்களுக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்தவர் தங்கம்மாள் என்ற பெண்மணி.

இவர்களின் இல்லற வாழ்வில் முதல் ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால், உடனே இறந்துவிட்டது.

1885 ஆம் ஆண்டில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு சோமசுந்தரம் என்று பெயர் சூட்டினார்.

சோமசுந்தரம் பிறந்த எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு இன்னொரு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைதான் பிற்காலத்தில் 'சர்தார்' என்று புகழ்பெற்ற வேதரத்தினம்.

அப்பாக்குட்டி பிள்ளை அவர்களுக்கு வேதாரண்யம் கோயிலில் ஹெட்கிளார்க் வேலை.

இந்த ஹெட்கிளார்க் வேலை அந்தக் காலத்தில் மானேஜர் மாதிரி உயர்ந்த மதிப்பில் கருதப்பட்டது.

தேவஸ்தான அலுவலகத்தில் அவர் சொல்படி தான் எதுவும் நடக்கும். அதுவே எழுதப்படாத சட்டம்.

'ஹெட்கிளார்க் ஐயா' என்றால் அந்த ஊரில் தெரியாதவர்களே இருக்க மாட்டார்கள்.

வீட்டிலோ பரம சாது, ஆன்மிகவாதி. காலையில் குளித்து, தூய ஆடை உடுத்தி, திருநீறு அணிந்து அவர் பூஜை செய்யத் தொடங்கினால், வீடே கோயில் போல் ஆகிவிடும்...

வாழையடி வாழையாக தமிழையும், பக்தியையும் வளர்த்து வந்த குடும்பத்தில் பிறந்த வேதரத்தினம் அவர்களுக்கு, அந்த உணர்வு இருப்பதில் என்ன வியப்பு இருக்க முடியும்...?

மாசி மாதத்தில் வரும் மகம் ஒரு சிறப்பு விழாவாக திருமறைக்காட்டுக் கோயிலில் கொண்டாடப்படும். அப்போது தியாகராசர் திருவுருவம் சப்பரத்தில் பவனி வரும். சப்பரத்தில் அவரைத் தூக்கி வைக்கும் உரிமை இவர்கள் குடும்பத்திற்கே உண்டு.

இந்த நிகழ்ச்சியில் எப்போதும் முன் நிற்பார் இளைஞரான, வேதரத்தினம்.

மாசி மகம் வந்துவிட்டால், அவருக்கு ஒரே கொண்டாட்டம்தான், குதூகலம்தான்.

சுவாமி வீதி உலா வர வேண்டிய ஏற்பாட்டில் இளைஞர்களை சேர்த்துக் கொண்டு இறங்கி விடுவார். சப்பரத்தின் முன் ஆளாக இவரே நின்று செயல் படுவார்.

சிறு வயதிலேயே 'செய்வன திருந்தச் செய்' என்பதற்கு ஏற்ப எதைச் செய்தாலும் சிறப்பாகச் செய்து முடிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார், வேதரத்தினம்.

வேதாரண்யத்திலிருந்த பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரைதான் படித்தார். உயர்நிலைப் பள்ளி அவ்வூரில் இல்லை.

மேல் படிப்பு படிக்க வேண்டுமானால், நாகப் பட்டினம்தான் செல்ல வேண்டும். அக்காலகட்டத்தில் நாகப்பட்டினத்திற்குச் செல்ல நல்ல சாலை வசதியும் கிடையாது, பேருந்து போக்குவரத்தும் இல்லை.

'உப்போடை' என்கிற ஓடையின் வழியாக சிறிய படகுகளின் வழியேதான் போக வேண்டும்.

அந்த வழியேதான் வேதரத்தினமும் அவரது சகோதரரும் சென்று படித்து வந்தார்கள்.

இவர்கள் ஓடக்கரை போவதற்குள், வேறு சில சிறுவர்களும் அவர்களோடு சேர்ந்து கொள்வார்கள்.

வேதரத்தினத்திற்கு ஏனோ கல்வியில் கருத்து செல்லவில்லை. அதனால், மூன்று ஆண்டுகளோடு அவர் பள்ளிக்குச் செல்வதையே நிறுத்திக்கொண்டார்.

பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்திக் கொண்டாலும், தன் முயற்சியால் பல நூல்களைத் தேடிப் படித்து உலக அறிவினைப் பெற்றுக் கொண்டார்.

தெலுங்கு, மலையாளம், இந்தி, ஆங்கிலம் என்று பலமொழிகளைக் கற்றதோடு, அம்மொழிகளில் உள்ள நல்ல நூல்களையும் நாடிப் படித்தார்.

பள்ளிப்படிப்பை முடித்துக் கொண்டதும், அவர் பொழுதை வீணில் ஊரில் கழிக்க முடியாதே!

அதனால், உறவுக்காரர் ஒருவரின் உப்பளத்திற்குச் சென்று வேலை செய்துவர ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த வேளையில் அவருக்கு திருமணம் செய்ய வீட்டார் எண்ணினார்கள்.

அதன்படியே நல்ல குணமும், சிறந்த அறிவும் கொண்ட அவரது மாமன் மகளையே திருமணம் செய்து வைத்தார்கள்.

தன் மாமன் மகளான கமலாம்பாளை அவர் மணந்து கொண்டபோது, வயது பதினெட்டுதான். மணமகளுக்கு வயது பதின்மூன்று.

உப்பளத்தில் வேலையை முடித்துக்கொண்டு, வீடு திரும்பும்போது கோயிலுக்குச் செல்லத் தவற மாட்டார்.

தாயுமானவர் பாடல்களையும், இராமாயணத்தையும், கீதையையும் படிக்கத் தினம் அவர் தவறியதே இல்லை.

இருபது வயதில் குறளிலும், காந்திஜி நூல்களிலும் அவர் இதயம் பதிந்து போனது என்பதைவிட புதைந்து போனது என்று சொல்லலாம்.

இப்படி ஆழ்ந்து படித்த அவரது வாழ்விலே மாற்றமும் ஏற்படத் தொடங்கியது. அந்த மாற்றம் தேசத் தொண்டிலே அவரை ஈடுபட வைத்தது.

உப்பள வேலையில் ஒப்பவில்லை மனம். வியாபாரத் திறமையோடு அங்கே அவர் பணி செய்ய இயலவில்லை.

அதனால், தெய்வநாயகம் பிள்ளையோடு இணைந்து செயல்பட முடியவில்லை. அவரும் இவரை ஒரு வேலைக்காரரைப் போல நடத்தத் தொடங்கினார். பிறகு என்ன...?

தன்மானச் சிங்கம் வேதரத்தினம் அங்கிருந்து வெளியேறினார்.

ஒருநாள் - பெற்றோர்களிடமும், மனைவியிடமும் கூட சொல்லாது, சென்னையை நோக்கி இரயிலில் பயணமானார்.

அங்கே ஒருகடையில் இரண்டு நாள் தங்கியிருந்தார். இருந்தும் அவருக்கு மனம் நிம்மதியற்று தவித்தது.

வடக்கே யாத்திரை சென்றாலென்ன...? உடனே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்.

சென்னையிலிருந்து முதலில் காசிக்குச் சென்றார் வேதரத்தினம்.

புனித கங்கையில் நீராடினார். மனம் குளிர காசி விசுவநாதரையும், விசாலாட்சியையும் பாடி வழிபட்டார். ஊரெல்லாம் காலாற நடந்து சுற்றிப் பார்த்தார்.

பின்னர், காசியிலிருந்து மும்பைக்குச் சென்றார். அங்கு தங்கியிருந்தபோதுதான் காந்திஜி தலைமையில் நடைபெற்று வந்த 'சுதந்திர இயக்கம்' பற்றி தெளிவாகவும், முழுமையாகவும் வேதரத்தினம் அறிந்து கொண்டார்.

அவர் உள்ளத்தில் புத்துணர்வும், விழிகளுக்கு புது உலகமும் தென்பட்டது.

நாமும் சுதந்திரப் போரில் ஈடுபட வேண்டும் என்கிற ஆசை மனதில் தோன்றியது.

அவ்வளவுதான். தான் அணிந்திருந்த அன்னிய துணிகளைக் களைந்தார். கதர் வேட்டியையும், கதர் சட்டையையும் அணிந்து கொண்டார்.

தட்பவெட்ப நிலையும், புறப்படும்போது தேவையான பொருளும் கொண்டு வராததால், உணவு முறை மாற்றமும் அவர் உடல்நலனைக் கெட வைத்தது.

கையிலிருந்த தங்கக் காப்பும் முன்பே விலை போன நிலையில், செலவுக்குப் பணமில்லாத நிலைக்குத் தள்ளப்பட்டார் வேதரத்தினம்.

மும்பை போன்ற பெருநகரில் பணமின்றி எத்தனை நாள்களைத் தள்ள முடியும்...?

அப்போது அவர் ஓர் உணவு விடுதியில் தங்கியிருந்தார். கையில் காசு இல்லாத நிலை.

உடனே தந்தையாருக்கு தந்தி கொடுத்து, பணம் அனுப்பும்படி வேண்டிக் கொண்டார்.

இத்தனை நாள் வேதரத்தினத்தைக் காணாது வேதனை வெய்யிலில் தவித்துக் கொண்டிருந்த வீட்டாருக்கு நிம்மதியாயிற்று. உடனே அவர் தந்தை பணத்தை அனுப்பியதோடு, உடனே வீட்டுக்கு திரும்பும்படி எழுதியிருந்தார்.

ஃ ஃ ஃ

**வே**தாரண்யத்திற்கு வேதரத்தினம் மும்பையில் இருந்து திரும்பி வந்திருந்தபோது, அவருடைய உடல்நிலை பிறர் பார்த்து வேதனைப்படும் நிலையிலிருந்தது.

தன் மகன் சொல்லாமல் வெளிநாடு சென்றது ஒரு புறம் கோபத்தைக் கொடுத்தபோதும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், அவரை ஏதும் கடிந்து கொள்ளாமல் அமைதி காத்தார்.

அவர்கள் குடும்ப மருத்துவரை அழைத்து வரச்சொல்லி, வேதரத்தினத்தின் உடல்நிலையைப் பரிசோதித்து, மருந்து கொடுக்க ஏற்பாடு செய்தார்.

வந்த மருத்துவர், வேதரத்தினத்திற்கும் தெரிந்தவர் தானே... அதனால், அவர், ''ஆறு மாத காலத்திற்கு நீ வீட்டைவிட்டு எங்கும் செல்லக்கூடாது. இந்த என் பேச்சுக்குக் கட்டுப்பட்டால் நான் உமக்கு மருத்துவம் செய்கிறேன்...'' என்றார்.

அவர் சொல்வதை அப்போதைக்கு ஏற்பதுதான் நல்லது என்பதை உணர்ந்த வேதரத்தினம், ''சரி'' என்று ஒப்புக் கொண்டார்.

வீரப்புலியாய் ஊரை எல்லாம் சுற்ற வேண்டிய அவர், பூனையைப் போல் வீட்டையே சுற்றிச் சுற்றி வந்தார்.

அவர் மனைவி கமலாம்பாளிடம் மாறாத அன்பும், பெரும் மதிப்பும் வைத்திருந்தார். இல்வாழ்க்கையில் அவருக்கு எந்தவித குறையும், வேதரத்தினம் வைக்க வில்லை. வெளியில் என்ன வேலையிருந்தாலும் வீட்டிற்கு வந்து மனைவியின் கையால்தான் சாப்பிடும் பழக்கமுள்ளவர்.

'மனைவி வெறும் சிற்றின்பத்தைக் கொடுக்கும் புலன் உணர்வுக் கருவியல்ல. அவள் வாழ்க்கைத் துணைவி. தமக்குப்பின் தம் குடும்பத்துக்கு வாரிசு வேண்டும் என்று விரும்பினால்தான் ஒருவர் மனைவியுடன் இணைய வேண்டும். இல்லையேல் மனைவியைத் தன் வாழ்க்கைத் துணையாகத்தான் கொள்ள வேண்டும்'' என்கிற நன்மொழி அவர் உள்ளத்தில் ஆழப் பதிந்திருந்தது.

காந்தியின் கருத்துப்படி வாழ்ந்த அவர் மனைவிக்கு, ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அப்போது வேதரத்தினத்திற்கு 25 வயது.

மகன் அப்பாக்குட்டி பிறந்த நாளிலிருந்து, அவர் தம் வாழ்நாள் முழுவதும் நல்ல பிரம்மச்சாரியாகவே வாழ்ந்தார்.

மும்பையிலிருந்து திரும்பிய பிறகு நான்காண்டு காலம் வேதாரண்யத்திலேயே இருந்தார் வேதரத்தினம்.

அக்காலங்களில் அண்ணன் அ.சோமசுந்தரத்துடன் சேர்ந்து தன் மேற்பார்வையில் உப்பு வியாபாரத்தில் ஈடுபட்டார்.

ஒரு துணிக்கடையையும் இருவரும் சேர்ந்து நடத்தினார்கள்.

அவர் வியாபாரத்தில் ஈடுபட்டு இருந்தாலும், மனம் என்னவோ சுதந்திர சிந்தனையிலேயே சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது.

இந்த நிலையில்தான் 1920இல் பெல்காமில் காந்திஜி தலைமையில் காங்கிரஸ் மகாசபை கூட்டம் நடைபெற்றது.

அந்த மாநாட்டிற்குச் செல்ல வேண்டும், காந்திஜியை கண் குளிரக் காண வேண்டும் என்ற ஆவல் உண்டாகி விட்டது...

கடையையும் தன் கடமையையும் தன் அண்ணனிடம் ஒப்படைத்துவிட்டு, பெல்காம் நோக்கிப் புறப்பட்டுவிட்டார்.

பெல்காமில் சத்தியமாய் ஒளி வீசி நின்ற காந்தியைக் கண்டார். தன்னலமற்ற அவரது தேசத் தொண்டில் தம்மை மறந்தார்.

கூட்டத்தில் அவர் பேச்சைக் கேட்ட வேத ரத்தினத்தின் இதயம், இப்படி முடிவெடுத்தது.

'இனி என் தலைவர் இவர்தான், என் சுகம், துக்கம் எல்லாம் தேசம்தான்' என்று.

இந்த சத்திய வார்த்தைகளின்படியே தன் வாழ்வின் இறுதி நாள்வரை உறுதியாய் இருந்தார், வேதரத்தினம்.

இந்த தேசிய உணர்வுடனேயே வேதாரண்யம் திரும்பினார்.

ஊருக்கு வந்தது முதல் பட்டி தொட்டிகளி ளெல்லாம் நடக்கும் காங்கிரஸ் கூட்டங்களிலே கம்பீரமாக இவர் குரல் ஒலித்தது. மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்தியாவை பிரிட்டிஷ் வியாபாரிகள் கொள்ளை யடிக்கும் இடமாகவே கருதினார்கள்.

அதனால், பிரிட்டிஷ் வர்த்தகக் கப்பல்களில் இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட பல்வேறு பொருள் களை இங்கே சந்தைப்படுத்தினார்கள். அதில் உப்பும் ஒன்று. இந்த உப்பு எப்படி கப்பலில் வந்தது...?

அந்தக் காலத்தில் வர்த்தக கப்பல்களின் அடியில் சமநிலைக்காக மணல் மூட்டைகளை ஏற்றி வருவார்கள்.

இப்படி மண்ணை ஏற்றி வருவதால் யாருக்கு இலாபம்...? இதில் பணம் பார்க்க முடியுமா?

வியாபாரிகளைப் போல் இந்தியா வந்துநுழைந்த நயவஞ்சக நரிகளல்லவா வெள்ளையர்கள்?

சிறுமதி கொண்டவர்கள் சிந்தித்தார்கள். இன்னும் எப்படி இந்தியர்களை ஏழைகளாக்கலாம் என்று சிலந்தி வலை பின்னினார்கள்.

கப்பல்களின் அடியில், சமநிலைக்காக மணல் மூட்டைகளுக்குப் பதிலாக உப்பு மூட்டைகள் இடம் பெற்றன.

அப்படி ஏற்றி வந்த உப்புகளை இந்தியாவில் சந்தைப் படுத்தினர், சதிகார சண்டாளர்கள்.

நம்நாட்டு சந்தைக்கு அவர்கள் கொண்டு வந்த உப்பு அதிக விலையில் இருந்தது.

இங்கே நம் நாட்டில் விளையும் உப்பு, அவர்கள் உப்பு விலையைவிட குறைவாக இருந்தது.

அதனால், அவர்கள் உப்பு விற்காமல் தேங்கிப் போனது.

அதனால், அப்போது நம் நாட்டை அடிமை யாக்கிக் கொண்டிருந்த பிரிட்டிஷ்காரர்களிடம் வியாபாரிகள் முறையிட்டனர்.

ஆட்சியாளர்களும் உடனே அவர்களுக்கு உதவ முன்வந்தனர். இந்திய உப்பிற்கு அதிக விலை போட்டது. அதன் விலையை உயர்த்தச் செய்தது.

அதைவிட மலிவாக பிரிட்டிஷ் உப்பு விற்க வழிவகுத்துக் கொடுத்தது.

சாப்பாட்டு உப்பிலேயே தப்பு செய்த அநீதியைக் கண்டு வெகுண்டெழுந்த காந்தி, அந்த உப்புச் சட்டத்தை எதிர்த்து, அறப்போர்க் கொடி ஏந்தினார்.

வரி கொடாமல் உப்பை அள்ளும் போராட்டம் ஒன்றை அவர் அறிவித்ததுடன், தண்டி கடற்கரையில் உப்பையும் அள்ளினார். உடனே கைது செய்யப் பட்டு சிறையிலும் அடைக்கப்பட்டார்.

காந்தியடிகளின் அன்பிற்குரித்தான இராஜாஜியும், தொண்டர்களும் தமிழ்நாட்டில் உப்பு சத்தியாக்கிரகம் நடத்த முடிவு செய்தார்கள். அதன்படியே, இயற்கை யாகவே உப்பின் தாயகமான வேதாரண்யத்தில் நடத்துவது என்று முடிவானது.

வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரகம் பெரும் வெற்றி பெற்றமைக்கு, தஞ்சை மாவட்டம் முழுவதும் தளபதி வேதரத்தினத்தின் ஒத்துழைப்பு முக்கிய காரணமாகும்.

காந்திஜியின் தளபதி வல்லபாயைப் போலவே, இராஜாஜியின் தளபதியாக இருந்த வேதரத்தினமும் இந்தியா அளவில் புகழ்பெற்றுவிட்டார்.

இப்போராட்டத்தில் வீரத்தோடும், விவேகத் தோடும் செயல்பட்டு, பல அரிய செயல்களைச் செய்த தளபதி வேதரத்தினத்திற்கு, 'சர்தார்' என்ற பட்டமளித்துச் சிறப்பித்தது.

'அரசியல் என்பது என்ன?' என்பதற்கு அவரின் விளக்கம் இதுதான்...

'உலகில் அழகான கடலும், புனிதமான பல ஆறுகளும், அருவிகளும் உள்ளன. சாக்கடை யுமிருக்கிறது. ஆற்று நீரும், அருவி நீரும் போய் விழுந்து கலந்துவிடும் இடம் கடல்தான். சாக்கடை நீரும் கலந்து விடுகிறது. அதற்காகக் கடல் தன்னுடைய இயல்பை இழப்பதில்லை.

அரசியல் கடலிலும் சாக்கடை நீர் போன்ற சுயநலமிகளும், சுரண்டல் பேர்வழிகளும் எப்படியோ வந்து கலந்துவிடுகிறார்கள். இதற்காக அரசியலைக் குறை கூறுவதும், அதை விட்டு விலகுவதும் தவறு.

சர்தார், அரசியலைப் புனிதப்படுத்தும் தூய நீராக இருந்தார்.

∴ ∴ ∴

**நா**ற்பத்தைந்து ஆண்டு காலம் சர்தார் தென்னக அரசியலில் தென்றலாய், புயலாய், எரிமலையாய் நாடெங்கும் சுற்றி வந்தார். மக்களைச் சந்தித்து தேசப் பற்றை ஊட்டி வந்தார்; ஒன்பது முறை சிறைக் கொட்டிலில் அடைந்து கிடந்தார்.

'இந்தியாவிலேயே தஞ்சை மாவட்டத்தைப் போல காங்கிரஸ் இயக்கம் இவ்வளவு திறமையோடு செயல்படவில்லை' என்று, தமிழ்நாட்டிற்கு சுற்றுப் பயணம் வந்தபோது காந்தியும், நேருவும், சர்தார் வல்லபாய் படேலும் புகழாரம் இவருக்குச் சூட்டி மகிழ்ந்ததோடு, நேரு தன் கைப்பட சான்றிதழே வழங்கினார்.

வேதரத்தினம் காங்கிரஸின் வளர்ச்சிக்காக ஓய்வு இல்லாது பயணம் சென்று கொண்டிருந்தார்.

எப்பேற்பட்டச் சூழ்நிலையிலும் ஒப்புக் கொண்ட கூட்டங்களுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் சென்று விடுவார்.

சர்தாரிடம் பல சிறப்புகள் உண்டு. அதில் இதுவும் ஒன்று...

தான் ஒப்புக்கொண்ட பொதுக் கூட்டங்களில் பேசுவதற்கோ, பயணச் செலவிற்கோ, கட்சியிட மிருந்தோ, குழுவிடமிருந்தோ ஒரு காசுகூட வாங்கியது இல்லை. அவர்கள் கொடுக்க வந்தாலும் தடுத்து விடுவார். அரசியல் வாழ்வு முழுதும் சொந்தப் பணத்தையே செலவு செய்தார்.

'மயில் ஆடுவதைக் கண்டு வான்கோழியும் ஆட' நினைத்ததைப் போல, சிலர் காங்கிரஸிற்கு எதிராக சிலர் பாத யாத்திரைகள் செய்தார்கள்.

அந்த 'யாத்திரை'களைப் பற்றி ஒரு முறை சர்தாரிடம் சொன்னபோது, அவர் சொன்ன சுவையான செய்தி...

"இது கால்நடை யாத்திரைதான். ஆனால், பாத யாத்திரை அன்று" என்றார்.

"ஐயா, நீங்க என்ன சொல்றீங்க? புரியலேயே?" என்று சிலர் கேட்பார்கள்.

"அவர்கள் 'கால்நடை'. நாலு கால் பிராணிகள் பயணிகள்; காங்கிரஸ்காரர்களாகிய நாமோ பாத யாத்திரிகர்கள்" என்று சர்தார் சொன்னதும், அனைவர்க்கும் 'ஆகா' என்று இந்த சிலேடையின் நயமான உட்பொருள் புரிந்தது.

சர்தார் கூட்டங்களில் பேசுவதே தனிச் சிறப்பாக இருக்கும். 'மெய்யன்பர்களே' என்றுதான் கூட்டத் தினரை விளிப்பார்.

❖ ❖ ❖

**கா**ந்திஜி சொல்வார், "சிறை ஒரு தவச்சாலை" என்று.

சர்தார் பலமுறை சென்றிருக்கிறார். வேலூர் சிறையில் சர்தார் இருந்த போதுதான் அங்கே, இவரின் முனை முறியா முயற்சியால் சிறையிலுள்ள கைதிகளுக்கு காலை உணவாக உப்புமாவும், அரிசி கஞ்சியும், பகல், இரவு உணவுக்கு அரிசியும், நல்ல துவரம் பருப்பும், மோரும் கிடைத்தன.

சர்தாரின் சிறை வாழ்க்கையைப் பற்றி, சிறை யிலேயே அப்போது நடந்த ஒரு விசயத்தை பின்வருமாறு சொல்கிறார், 'கல்கி'.

'ஸ்ரீவேதரத்தினம் ஆழமான மனிதர்' என்று யாரோ சொல்லக் கேட்டிருக்கிறேன். அது உண்மை என்று சிறைக்குள்ளேதான் தெரிந்தது.

'பன்னிரண்டு வருடத்திற்கு மேலாக ஸ்ரீவேத ரத்தினத்தை எனக்குத்தெரியும். தெரிந்து என்ன பிரயோசனம்? அவருக்கு சங்கீதத்தில் இவ்வளவு கிறுக்கு உண்டு என்றும், அவரே கொன்னக்கோல் வாசிப்பார் என்றும் சிறையிலேதான் தெரிய வந்தது.

ஒரு நாள் மத்தியானம், திருப்பதி கே.வரதாச் சாரியார் பாட, வேதரத்தினம் கொன்னக்கோல் வாசிக்க, இராஜாஜி தாளம் போட, நாங்கள் தலையாட்ட, ஏக தடபுடலாகப் போய்விட்டது.

ஸ்ரீவேதரத்தினம் அதிகாலையில் ஓட ஆரம் பிக்கிறவர். இராத்திரி வரையில் ஓடி ஓடி வேலை செய்பவர். ஒரு நிமிஷம் அவருக்கு ஓய்வு கிடையாது. வால்மீகி இராமாயணம் கேட்பார். திருக்குறள் படிப்பார். சாப்பாடு பரிமாறுவார். யாராவது இந்தி கற்றுக் கொள்ள விரும்பினால் அவர்களுடைய அறையைத் தேடிச் சென்று சொல்லிக் கொடுப்பார்.

சிறையில் இலட்சிய வாழ்க்கை நடத்தியவர்களில் ஸ்ரீ வேதரத்தினமும் ஒருவர்.

ஒரு தடவை, 'சமஸ்கிருதம் கற்றுக் கொடுக்கிறேன்' என்று கே.சந்தானம் ஆரம்பித்தார். இந்த சமஸ்கிருத வகுப்புக்கு முக்கியமாக வந்தவர்களில் ஸ்ரீ ஏ.வேத ரத்தினமும் ஒருவர்.

திருச்சி சிறையில் இராஜாஜி, வால்மீகி இராமாயண வகுப்புகள் நடத்திக் கொண்டிருந்தார். பத்துப் பதினைந்து பேர் வந்து இராமாயணம் கேட்டார்கள். அவர்களிலே சர்தார் வேதரத்தினமும் ஒருவர்.

∴ ∴ ∴

சர்தார், சிறையில் தண்டனைக் கைதியாக இருந்த போதெல்லாம், புதிய புதிய புத்தகங்களைத் தருவித்துப் படிப்பதே அவரது வேலையாக இருந்தது.

இவரது புத்தகப் பித்தை அறிந்த நண்பர்கள், புத்தகங்களோடு சென்று பார்ப்பார்களாம். மலேசியா போன்ற வெளிநாடுகளில் இருந்து அவரைக் காண வரும் நண்பர்களும், புதுப்புது புத்தகங்களோடு வருவார்களாம்.

இரவுக் காலங்களில் இவர் திருக்குறளில் அறத்துப் பால், பொருள் பாலையும் மனப்பாடம் செய்ததோடு, கீதை முழுவதையும் மனனம் செய்திருக்கிறார்.

∴ ∴ ∴

சர்தாருக்கு பன்மொழி ஆற்றல் உண்டு. அதன் காரணமாகவே, தமிழின் இனிமையையும், அதன் சிறப்பையும் எண்ணி...

தமிழைப் போல் ஒரு மொழி உண்டா? என்று மகிழ்ச்சியோடு நண்பர்களிடம் கேட்பார்.

சர்தாரின் சந்ததியினர் எல்லாம் தாய்மொழியில் - தமிழ்மொழியில் ஆழ்ந்த புலமையும், சிறந்த அறிவும் பெற்றிருந்தனர்.

சர்தாரின் முன்னோர்களில் ஒருவர்தான், தமிழ் ஞானியாகப் போற்றப்படும் தாயுமான சுவாமிகள்.

அறிஞர் கேடிலியப்பிள்ளை எழுதிய 'அகோர வசிஷ்டம்' என்ற தமிழ் நூலை 19 ஆம் நூற்றாண்டி லேயே, சர்தாரின் தந்தையார் பதிப்பித்து வெளி யிட்டிருக்கிறார்.

சர்தார் சிறையிலிருந்த பொழுதுகளில்தான், உருது, வங்காளம் போன்ற மொழிகளைக் கற்றார் என்பதோடு சமஸ்கிருதமும் கற்றுக்கொண்டார்.

ஆங்கிலேயர்களுக்கு நிகராக ஆங்கிலம் பேசும் ஆற்றலும், இந்திக்காரர்களுக்கு இணையாக இந்தி பேசவும் செய்வார்.

எந்த மாநிலத்திற்குச் சென்றாலும் அம்மாநில மொழிகளில் சிலவற்றையாவது கற்றுக் கொண்டு விடுவார்.

அவரது நாட்குறிப்பை தமிழிலேயே எழுதி வந்தார். அவரது தமிழ்நடை மிகவும் அழகாகவும், நறுக்கென்று மிருக்கும்.

இவரது மேடைப் பேச்சுகளில் உவமைகள் நிறையவே இருக்கும். நகைச்சுவை நர்த்தனமாடும். எப்போதும் தம்முடைய தமிழ்ப் புலமையையும்,

இலக்கிய ஆற்றலையும், பொது மேடைகளில் பேசவும் மாட்டார்.

எப்போதும் அவர், சட்டைப் பையில் வைத்துக் கொள்ளக்கூடிய அளவில் திருக்குறள் புத்தகம் ஒன்றை வைத்திருப்பார்.

*1947* இல் தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை அரசின் ஆதரவோடு அமையக் காரணமாக இருந்தவர்களுள் சர்தாரும் ஒருவர்.

சர்தார், தமிழ்க் களஞ்சிய ஆலோசனைக் குழு விலிருந்தார்.

பாரதி மீதும் அவரது கவிதைகள் மீதும், காதல் கொண்டிருந்த சர்தார், அவர் உயிரோடு இருக்கும் போதே, 'பாரதி சங்கம்' என்று ஒன்றை வேதாரண்யத்தில் தோற்றுவித்தார்.

*1926* இல் வேதாரண்யத்தில் தோன்றிய தமிழ்ஞானி பரஞ்சோதி முனிவரின் நினைவாக, 'பரஞ்சோதி முனிவர் தமிழ் சங்கம்' என்ற அமைப்பைத் தோற்றுவித்தார்.

தாயுமானவர் மீது இளமை முதல் பற்று கொண்டிருந்ததால், தான் தோற்றுவித்த ஆதாரப் பள்ளிக்கு 'ஸ்ரீதாயுமானவர் வித்யாலயம்' என்று பெயர் வைத்தார்.

சர்தார் பல அமைப்புகளைத் தோற்றுவித்திருந் தாலும், சிகரம் போல் அமைந்திருப்பது, 'ஸ்ரீ கஸ்தூரிபா காந்தி கன்யா' குருகுலம்தான்!

ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இருந்த சென்னை அரசாங்கம், 'மகாராஜராஜஸ்ரீ' என்ற அடை மொழியைப் பயன்படுத்தி வந்தது.

'ஸ்ரீ' என்று சுருக்கமாகக் குறித்தாலே போதும் என்று ஒரு நாளிதழில் சர்தார் எழுதியதை அன்றைய முதலமைச்சர் இராஜாஜி படித்துவிட்டு, அப்போதே சுருக்கமாக உபயோகிக்க ஆணையிட்டார்.

இன்று அந்த ஸ்ரீ - திருவாக மாறி இருக்கிறது. இந்த மாற்றத்துக்குக் காரணமாக இருந்தவர், சர்தாரே!

சர்தாரை 'ஒரு சகலகலா நடமாடும் களஞ்சியம்' என்றே சொல்லலாம்.

அந்தக் காலத்தில் பத்து மைல், இருபது மைல் தூரத்தில் இசை நிகழ்ச்சிகள் நடந்தாலும், நடந்தே சென்றுவிடுவார்.

அவருக்கு எல்லா ராகமும், தாளமும் தெரியும். மேடையில் பாடுபவர் நன்றாகப் பாடினால், தாளம் போட்டு ரசிப்பார்.

ஏதாவது பிழையாகப் பாடினால், அவர் கீழே வந்ததும் இந்த இடத்தில் பிழையாகப் பாடினீர்கள் என்று சொல்லத் தவற மாட்டார்.

இப்படி, இவர் இசையை ரசிப்பதோடு மட்டும் நிற்பவரில்லை. பல இசைக் கருவிகளை வாசிப்பதிலும் வல்லவராக இருந்தார்.

கர்நாடக சங்கீதத்தில் எவ்வளவு ஞானம் உண்டோ, அதே அளவில் பரதக் கலையிலும் ஞானமிருந்தது.

சர்தார் சிறந்த பாடகராகவும் இருந்திருக்கிறார் என்பதோடு, அவர் ஒரு சிறந்த நிழற்படக் கலைஞராகவும் திகழ்ந்திருக்கிறார்.

இயற்கை மருத்துவத்தில் இதயம் பதிந்திருந்த சர்தார், அம்மருத்துவத்தில் நன்கு தேர்ச்சி பெற்ற மருத்துவரிடம் ஆலோசனை பெற்று, இயற்கை மருத்துவ முகாம் ஒன்றினை வேதாரண்யத்தில் பதினைந்து நாள்கள் நடத்தினார்.

தம் வீட்டில் யாருக்காவது உடல்நலக் குறைவு என்றால், இயற்கை மருத்துவத்தைப் பயன் படுத்துவார்.

இப்படி பல கலைகளை அறிந்திருந்த சர்தார், விருந்தோம்பும் கலையிலும் சிறந்தோங்கி நின்றார்.

எத்தனை பேர், எந்த நேரத்தில் அவரது வீட்டிற்கு வந்தாலும், இன்முகத்தோடு வரவேற்று விருந்து படைப்பார்.

காந்தியடிகளைப் போல மிகவும் எளிமையாக இருப்பார். அவரைப் போல மேல்சட்டையும் அணிய மாட்டார்.

வேட்டியின் வலப்புற மூலையில் பணம், மூக்குக் கண்ணாடி, பேனா, திருநீற்றுப் பை மற்றும் திருக்குறளும் இருக்கும்.

இந்தியா முழுவதும் வலம் வந்திருக்கும் சர்தார், பல்வேறு பருவ நிலைகளில் பயணம் செய்தபோதும், சட்டையோ, கம்பளி ஆடையோ அவர் பயன் படுத்திய தில்லை.

உலகிலேயே அதிக மழை பெய்யும் சிரபுஞ்சிக்கு நண்பர்களுடன் சென்றபோதுகூட, மற்றவர்கள் எவ்வளவோ சொல்லியும், அவர் சொந்த ஊரில் எப்படி வேட்டி, துண்டோடு இருப்பாரோ, அப்படியே அங்கே இருந்தார்.

அதைக் கண்டு, அந்த நாட்டிலிருந்தவர்கள் எல்லாம் மலைத்துப் போனார்கள்.

உலகத்திலேயே குளிப்பதில்தான் மகிழ்ச்சியே இருக்கிறது என்பது அவர் எண்ணம்.

அதுவும், கடலில் குளிப்பது என்றால் அவருக்கு கொள்ளைப் பிரியம்.

வீட்டுக் கிணற்றில் குளிக்க நேர்ந்தால், துணிகளை தோய்த்த பிறகு, அங்குள்ள எல்லா செடிகொடி களுக்கும் நீர் விட்ட பின்பே, அவர் குளிப்பார்.

எத்தனை வாளி இறைத்துக் குளிப்பார்? நூறு! குளங்களில் குளிக்கும்போது, சில சுலோகங்களைச் சொல்லிக்கொண்டே, கழுத்தளவு தண்ணீரில் நிற்பார். எவ்வளவு நேரம்...? மூன்று அல்லது நான்கு மணி நேரம்!

கால் பந்து விளையாட்டில் விருப்பம் கொண்ட தோடு, ஓட்டப் பந்தயத்திற்கும் முன் நிற்பார். முதல்வராகவும் வந்து நிற்பார். கரளைக் கட்டை சுற்றுவதிலும் கை தேர்ந்தவராக இருந்தார்.

திங்கள் கிழமைதோறும் சர்தார் உண்ணா நோன்பு இருந்து வந்தார். எலுமிச்சை பழச்சாறும், நாட்டுச் சர்க்கரையும் கலந்து, அதை மட்டுமே அருந்தி வந்தார். மாலை ஆறு மணிக்கு மேல் மலை வாழைப்பழம் சாப்பிடுவார்.

திங்கட்கிழமைகள் தவிர, ஏகாதசி நாளிலும் அவர் உண்ணா நோன்பு இருந்து வந்தார்.

ஏழை எளியவர்களிடத்து மட்டும் அன்பும், இரக்கமும் கொண்டவராக சர்தார் இருக்கவில்லை.

'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலைப் போல, செடி கொடிகளிடத்தும், பறவை, விலங்குகளிடத்தும் சர்தார் அன்பும், இரக்கமும் கொண்டிருந்தார்.

அதனால்தான், வேதாரண்யத்திற்குப் பக்கத்திலுள்ள கோடியக்காடு என்னும் காட்டிலுள்ள மூலிகை வகை செடி, கொடிகளையும், பறவை, விலங்குகளையும் அழியாமல் காத்திட வேண்டி, பலமுறை சட்டசபையில் போராடி, வெற்றியும் பெற்று, இன்றுள்ள 'பறவைகளின் புகலிடமாகவும், விலங்குகளின் புகலிடமாகவும்' அரசை அன்று அறிவிக்கச் செய்தார் அந்த கருணையாளர், சர்தார்.

சர்தார் அவர்களிடம் எந்தவித தீய பழக்கமும் கிடையாது. காபி, தேநீர், சோடா போன்ற எந்த பானங்களையும் அவர் அருந்தியதில்லை.

புகை பிடித்தல், பொடி போடுதல் போன்ற தீய பழக்கங்களும் அவரிடம் இருந்ததில்லை.

ஒருமுறை, இராஜாஜி வீட்டிற்குச் சென்றிருந்த போது, அவர் கைப்படவே அங்கே இருந்த எல்லாத் தொண்டர்களுக்கும் காபி கொடுத்தார்.

இராஜாஜியின் மீது அன்பும், பக்தியும் கொண்டிருந்த காரணத்தால் மறுப்பு ஏதும் சொல்லாது வாங்கிக் குடித்தார்.

இந்த ஒரே ஒரு முறைதான் அவர் காபி அருந்தியது.

காந்தியடிகளைப் போல சர்தார் அவர்களும் நாள்தோறும் செலவு கணக்குகளை எழுதும் பழக்கம் கொண்டிருந்தார். வெளியூர் சென்றிருந்தால், வீட்டிற்கு

வந்ததும் செலவுக் கணக்குப் பட்டியலையும், மீதி பணத்தையும் கணக்குப்பிள்ளையிடம் கொடுத்து விடுவார்.

காங்கிரஸில் பொறுப்பான பதவியிலிருந்த போதும், அவர் சட்டசபை உறுப்பினராக இருந்த போதும் எவ்வளவு நெருங்கிய உறவாக இருந்தாலும், பல ஆண்டு பழகிய நண்பராக, தொண்டராக இருந்தாலும், தனிப்பட்ட ஒருவருக்கு வேலை கொடுக்கும்படியோ, பதவி உயர்வு வழங்கும்படியோ அவர் யாருக்கும் பரிந்துரை செய்ததில்லை.

அதே நேரம், கடமையில் தவறாத அதிகாரிகளுக்கு ஆதரவு கரம் நீட்டவும் தயங்க மாட்டார்.

தனிப்பட்டவர்களுக்கு சான்றிதழ் கேட்டால் உடனே அளித்துவிடுவார். ஆனால், அதில் உள்ளதைத்தான் எழுதுவார்.

ஒருபோதும் நேரில் தெரியாத ஒருவருக்குச் சான்றிதழ் கொடுக்கவே மாட்டார்.

சர்தாருக்குச் சொந்தமான நிலத்தில் பல ஆண்டுகளாக புகையிலை பயிர் செய்யப்பட்டு வந்தது.

உலகப் புகழ்பெற்றது வேதாரண்யம் புகையிலை என்பதை யாவரும் அறிவர்.

புகையிலை வியாபாரத்தின் வழியே பெரும் பணம் அவருக்கு வந்து கொண்டிருந்தது. அதுவே அவர் குடும்பத்திற்கான பெரும் வருவாயும்கூட.

இருந்தாலும் இந்த புகையிலை வியாபாரம், அவர் உள்ளத்திலே பெரும் வேதனையை நாளும் வளர்த்துக் கொண்டிருந்தது.

மக்கள் வெய்யில், மழை என்று பாராமல் பொழுதும் உழைத்து, அந்த உழைப்பில் வரும் பணத்தில், பீடி, சிகரெட், சுருட்டு ஆகியவற்றை வாங்கி உடலை உருக்குலைத்துக் கொள்வதோடு, பணத்தையும் வீணடிக்கிறார்களே என்ற வேதனை அவருள்ளத்தில் நீண்ட காலமாகவே இருந்து வந்தது.

ஒருமுறை புகையிலை அறுவடையில் எப்போதுமில்லாத அளவிலே பெரும் பணம் கிடைத்தது.

அதைக்கண்டு அவர் உள்ளம் மகிழவில்லை. மாறாக மனதில் ஒரு போராட்டப் புயலையே உண்டாக்கிவிட்டது.

'இப்படி மக்களின் உடல் நலத்தைக் கெடுக்கும் இந்தத் தொழிலைச் செய்து பணத்தைச் சேர்க்க வேண்டுமா...?' என்பதுதான்.

'கள்ளைப் போன்று புகையிலையும் போதைப் பொருள்தானே...? இதற்கு இனிமேலும் நாம் துணை நிற்கக்கூடாது' என்று முடிவெடுத்தார்.

அதன்படியே... அடுத்த நாள், அரிவாளோடு பெரும் அளவில் பணம் தரும் புகையிலை செழித்து வளர்ந்திருந்த வயலுக்குச் சென்றார்.

அங்கே வளமாய் வளர்ந்திருந்த பயிர்களை அழித்து முடித்தார். அதன் பிறகுதான் அவருள்ளத்தில் ஏற்பட்டிருந்த புயல் ஓய்ந்தது.

இப்படி காந்தியக் கொள்கையோடு எந்தச் செயலையும் பார்த்து வந்தார், செய்து வந்தார், சர்தார்.

சர்தார், தமிழ்நாட்டு சட்டசபையில் அதன் உறுப்பினராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். பதினான்கு ஆண்டுகள் பதவி வகித்தார்.

*தம் இறுதி வாழ்நாள் வரை அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்.*

*சர்தார், சட்டசபைப் பணியைத் தம் தொகுதி மக்களுக்குச் செய்யும் கடமையாக எண்ணினார்.*

*தம்முடைய வெற்றியைக் காங்கிரசின் வெற்றி யாகவுமே அவர் கருதினார்.*

*இன்று வெற்றி பெற்ற வேட்பாளர்கள், அவர்களை வெற்றி பெற வைத்த மக்களைத் திரும்பிச் சென்று பார்க்கிறார்களா? அவர்களுக்கு நன்றியை யாவது சொல்லி இருக்கிறார்களா...?*

*இப்படி ஒட்டு மொத்தமாக எல்லோரையும் சொல்லிவிட முடியாது. அது போகட்டும்...*

*சர்தார் அவர்கள் 1957 பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றதும், அத்தொகுதி மக்களுக்கு தமது நன்றியைத் தெரிவித்த உணர்வை அஞ்சலட்டையில் அனுப்பிய முறையைப் பாருங்கள்.*

அ.வேதரத்தினம்
வேதாரண்யம்,
23.3.57.

**சென்னை சட்டசபைத் தேர்தலில் திருத்துறைப்பூண்டி தொகுதியில் காங்கிரஸ் அடைந்த வெற்றிக்கு என்னைப் பாராட்டிய வாழ்த்துரைகளுக்கு அம்மகாசபையின் சார்பாக எனது மனம், மொழி, மெய்களால் நன்றியும், வணக்கமும் செலுத்திக் கொள்கிறேன்.**

**காங்கிரஸ் மகாசபையின் எதிர்கால வேலைத் திட்டங் களை நிறைவேற்றுவதில் தங்கள் அன்பும், ஆதரவும் எனக்குப் பூரணமாகக் கிடைக்கும் என நம்புகிறேன்.**

**தங்களன்புள்ள ஊழியன்,**
**அ.வேதரத்தினம்.**

ஏதோ கடமைக்காக கடிதங்களுக்குக் கீழே அவர் கையெழுத்து மட்டும் போடுவதில்லை. அக்கடிதங் களில் இரண்டு வரியையாவது அவர்களது நலத்தை விசாரித்து எழுதத் தவறமாட்டார்.

சட்டசபை கூடும் முதல் நாளே சென்னைக்கு வந்துவிடுவார். தவறாது சபையில் கலந்து கொள்வார். அதுவும் சபைக்கு முதல் ஆளாக அமர்ந்துவிடுவார். கூட்டம் முடிந்த பிறகு, கூட்டம் கலைந்ததாக அறிவிக்கப்பட்ட பிறகுதான் கடைசியாக சர்தார் வெளியே செல்வார்.

ஒருநாள்கூட அவர் சட்டசபை கூட்டத்திற்குப் போகாமல் விடுப்பு போட்டதில்லை.

சட்டமன்ற உறுப்பினர் பணிக்காகத் தனக்குக் கிடைத்த ஊதியத்தை அப்படியே கோவையிலுள்ள இராமகிருஷ்ண வித்யாலயத்துக்கு அனுப்பி வைத்தார்.

சர்தார் அவர்கள் இதய வலியோடு கடைசியாக சட்ட சபையில் பேசிவிட்டு அறைக்கு வந்தவர்தான்...

சில நாள்களாக அவதிப்பட வைத்த இதய நோய் அவரை மீண்டும் தாக்கியது. 1961 ஆகஸ்டு 24 ஆம் நாள் இயற்கை எய்தினார்.

சர்தார் அவர்கள், தம் வாழ்நாள் முழுதும் மக்கள் பணியே செய்தார்; மனித நேயராகவே வாழ்ந்தார்; ஒழுக்க சீலராய் இருந்தார்; சிறந்தார்!

■

## 2. சாதித் தீயிக்கு சமாதி கட்டியவர்!

'கல்வி கற்கும் தொழிலைச் செய்ய அந்தணர்கள், போர்த் தொழிலைச் செய்ய சத்திரியர்கள், வாணிபம் செய்திட வைசியர்கள், இவர்களுக்குரிய பணிவிடைகளைச் செய்ய சூத்திரர்கள்.'

இப்படி சாதி பாகுபாடுகள் இருந்த காலம் அது. மேல் சாதியினரைத் தொட்டால் தீட்டு, கைபட்டால் குளியல், மேல் சாதியினர் இருக்கும் வீதிகளில் நடக்கத் தடை, உயர்ந்த சாதியினர் குளிக்கும் குளத்தில் 'அவர்கள்' குளிக்கக்கூடாது. ஆனால், எருமை குளிக்கலாம்; ஏன், பன்றிகூட அதில் இறங்கிப் புரளலாம்.

ஆதிதிராவிட ஆண்களுக்கே இந்த நிலை என்றால், பெண்களுக்கு... அவர்கள் தலைக்கு எண்ணெய் தடவக்கூடாது; பூவும் சூடக்கூடாது; பொட்டும் இடக்கூடாது.

இப்படி ஒரு காலம் - இப்படி ஒரு அவலம் இந்தியாவில் இருந்தது; அதுவும் தமிழகத்தில் சாதித்தீ பற்றி எரிந்து கொண்டிருந்தது.

ஆதிதிராவிடர்கள் 1859 ஆம் ஆண்டு கால கட்டத்தில் பட்ட அல்லல்கள்; நடத்தப்பட்ட கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல; நஞ்சினும் கொடும் செயல்.

அந்நியனின் அடக்குமுறை ஆட்சி ஒருபுறம்; உயர்ந்த சாதி என்று தங்களைச் சொல்லி வந்த இந்துக்கள் கொடுத்த இன்னல்கள் ஒரு புறம்; இப்படி பல நிலைகளிலும் அலைக்கழிக்கப்பட்ட ஆதி திராவிட மக்கள், மாக்களாய் வாழ்ந்த காலம்.

திசையறியாது தவித்துக்கொண்டிருந்த தம் இன மக்களுக்கு திசைகாட்டியாய் - தவறை திருத்தி எழுதிய நீதிபதியாய் - ஆங்கிலேயருக்கு நிகராய் அம்மொழிப் புலமை பெற்று, தம் இன மக்களுக்கு தன்னலம் கருதாத் தானைத் தலைவராய் இருந்து, தன் சமுதாய முன்னேற்றமே தன் பிறப்பின் பயன் என்பதை நாடறிய உணர்த்தியவர், இரட்டைமலை சீனிவாசன்.

பல கலைகளில் சிறந்தோங்கி விளங்கும் மாவட்டம் தான் செங்கை மாவட்டம். இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது மதுராந்தகம். இவ்வூருக்கருகில் கோழியாளம் என்னும் கிராமம்தான், சாதியை ஒழிக்க வந்த சரித்திர நாயகன் பிறந்த மண்.

நன்செயும், புன்செயும் வளம் சேர்த்த அக்கிராமத்தில் கடவுள் பக்தியும், தொழில் பக்தியும் கொண்ட விவசாயியாக வாழ்ந்து வந்த சடையன் என்பவருக்கு மகனாய் பிறந்தவர்தான், இரட்டைமலை.

இவர் அன்புள்ளம் கொண்டவராக மட்டும் வாழவில்லை. தான் வாழ்ந்த மூடச் சமூகத்தில், தம் இன மக்கள் கொடுமைப்படும் நிலை கண்டு கண்ணீர்விட்டு உள்ளம் நொந்தவர். இக்கொடுமை என்று ஒழியும் என்று ஏங்கித் தவித்தவர்.

இப்படி உயர்ந்த இதயம் கொண்ட - சமுதாய ஏக்கம் கொண்ட இரட்டைமலை அவர்களுக்குத் திருமணம் நடந்தது.

கருத்தொருமித்த அன்புடைத் தம்பதியினர், வள்ளுவனின் வாழ்க்கை நெறியில் வாழ்வாங்கு வாழ்ந்து வந்தனர்.

அவ்வாறு வாழ்ந்து வந்த வேளையில், அவர்களின் இதயம் முழுவதும் 'நம்இன மக்கள் வாழ்வு சிறக்க, நமக்கொரு நல்ல அறிவுள்ள குழந்தை பிறக்குமா' என ஏக்கம் கொண்டிருந்தனர்.

அவர்களின் ஏக்கம் அதிக நாள் நீளவில்லை. 07.07.1859 ஆம் ஆண்டு ஓர் ஆண் மகவு பிறந்தது.

இருவர் அன்பில் விளைந்த அந்தப் பிள்ளைக் கனிக்கு சீனிவாசன் என்று பெயரிட்டனர்.

பின்னாளில் இப்பெயரே தந்தையின் பெயரோடு இணைந்து 'இரட்டைமலை சீனிவாசன்' என்று அன்பு இதயங்களால் அழைக்கப்பட்டது.

இவர் பிறந்த காலத்தில் இருந்த சூழ்நிலையும், ஆதிதிராவிட மக்களை அடிமைப்படுத்தியிருந்த கீழ்நிலையுமே அன்னாரை விழிப்படையச் செய்தது.

கீழ் இன மக்கள் படித்துவிட்டால் ஆடு மாடு மேய்க்கவும், தங்களின் பண்ணையில் கைகட்டி, அடிமை வேலை செய்யவும் ஆட்கள் இல்லாது போய் விடுவார்களே என்பதால் அவர்களைப் பள்ளியில் சேர்க்கவே மறுத்து வந்தனர் உயர் சாதியினர் என்று தங்களைக் கருதிக் கொண்டிருந்தவர்கள்...

அந்த காலகட்டத்தில் மரத்தடியிலும், திண்ணை களிலும்தான் பள்ளிகள் நடந்தன.

செல்வந்தர் வீட்டுப் பிள்ளைகளுக்கும், அர்ச்சகர் குடும்பத்துப் பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களே அவர்கள் வீட்டிற்கு சென்று கல்வி கற்பித்து வந்தனர்.

தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கப்பட்ட - ஒடுக்கப்பட்ட இனத்திலே பிறந்த சீனிவாசனுக்கு எப்படி திண்ணைப் பள்ளியில் இடம் கொடுப்பார்கள்?

இரட்டைமலை சீனிவாசனின் தந்தையோ அமைதியாக வாழ வேண்டும், பிரச்சனைகளில் தம்மை இணைத்துக் கொள்ள விரும்பாத நல்ல மனிதராக வாழ்ந்து வந்தார். இருந்தாலும் கொடுமைகளை எதிர்த்து குரல் கொடுக்காமலிருக்க முடியுமா?

அப்படி இருந்ததால் ஜாதி இந்துக்களின் அடாவடிப் போக்குகள் நாளுக்கு நாள் பெருகத் தொடங்கியது.

வெள்ளைக்காரர்களைப் போல் உடையணிந்து, அவர் இன மக்களுக்காக சிந்திக்கத் தொடங்கியதால், ஜாதி இந்துக்களுக்கு அவர் போக்குப் பிடிக்காது இருந்தது - வளர்ந்தது.

ஜாதி இந்துக்களின் தொல்லைகள் நாளுக்கு நாள் பெருகத் தொடங்கவே, இரட்டைமலை சீனிவாசனின் குடும்பம் செங்கையை விட்டு, புலம் பெயர்ந்து தஞ்சையில் குடியேறியது.

கோவணம் அளவிலே நிலம் வைத்திருந்த செங்கை மாவட்டத்துக்காரர்களே அளவிட முடியாத அளவில் தொல்லைகள் கொடுத்தார்கள் என்றால், எட்டு முழ வேட்டி அளவிலே நிலங்களுக்குச்

சொந்தக்காரர்களான தஞ்சை மாவட்டத்து ஜமீன் தார்கள் சும்மா இருப்பார்களா என்ன?

இவர்கள் ஆதிதிராவிட மக்களை குடும்பம் குடும்பமாக கொத்தடிமையாக்கி நடத்திக் கொண்டிருந் தார்கள்.

தம் இன மக்கள் படுகின்ற அவதிகளைக் கண்டு இளம் வயதிலேயே இதயம் கசங்கிப் போனார், சீனிவாசன்.

எங்கு திரும்பினாலும் சாதி சாரைப்பாம்பு ஓட ஓட விரட்டியது; தீண்டாமைத் தீக்கனல் பற்றிச் சுட்டது.

இந்த நிலையிலிருந்து நாமும் மீள வேண்டும்; நம் வருங்கால இனமும் காப்பாற்றப்பட வேண்டும் என்று உறுதி பூண்டார், இரட்டைமலை சீனிவாசன்.

அதற்காக பல்வேறுபட்ட வழிகளை அவர் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

உயர்ந்த சாதி என்று சொல்லிக் கொள்கின்ற இந்து மக்களின் பிள்ளைகள் திண்ணையில் அமர்ந்து படிக்கின்ற வேளையில், அவர்களுக்குக் கற்பிக்கப் படும் கல்வியை திண்ணையின் ஓரம் நின்று கவனமாகக் கேட்டறிவதே மிகச் சிரமம் என்ற நிலையிலிருந்த அந்தக் காலத்தில், இவர் படித்து பட்டம் பெற்று உயர்ந்தார் என்பது எவ்வளவு வியப்பிற்குரிய செய்தி!

இந்த நிலையில்தான் இ.சீனிவாசன் பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

மேல் ஜாதி இந்துக் குழந்தைகளோடு இணைந்து உட்கார முடியாது. தனித்துதான் உட்கார வேண்டும்.

மற்ற பிள்ளைகளுக்குரிய எந்த சலுகையும் இவர்களுக்குக் கிடைக்காது. தண்ணீர் அருந்த வேண்டுமென்றால்கூட தனிக் குவளைதான்.

இவ்வாறு இருந்த காலகட்டத்தில் உயர் சாதி குழந்தைகளுடன் தன்னை எப்படி உயர்த்திக் கொள்வது என்று ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினார்.

'ஏன் நமக்கு நாமே தீண்டத்தகாதவன், மற்றவர்களைவிட கீழானவன் என்று நாம் நினைத்துக் கொண்டிருப்பது தான். நாம் கீழ்த்தரமாக நடத்தப்படுகிறோம்; நினைக்கப்படுகிறோம். நாம் மற்றவர்களைக் காட்டிலும் எந்த விதத்திலும் தாழ்ந்தவனில்லை; உயர்ந்தவனே என்ற எண்ணம் இதயத்தில் உயருமேயானால், நாம் மற்றவர்களுடன் எளிதாகப் பழகிவிட முடியும்...' என்று முடிவெடுத்த தோடு -

இனி மற்றவர்களுடன் அவர்களுக்குச் சமமாக கலந்து பேசுவோம்; கூடிப் பழகுவோம்.

பேசினால் பேசட்டும்; பேசாவிட்டால் போகட்டும். பழகினால் பழகட்டும்; பழகாவிட்டால் விலகட்டும் என்ற முடிவோடு -

தன்னை முதலாவதாக ஆடையால் மாற்றிக் கொண்டார். நாகரிக முறையில் ஆங்கிலேயர்களைப் போல் உடையணிந்து கொள்ளத் தொடங்கினார்.

கல்வி ஒன்றே ஒருவரை தனித்து உயர்த்திக் காட்டும் என்பதை உணர்ந்தார்; அதன்படி நடந்தார்.

கல்வியில் கருத்தூன்றினார். அதனால், மற்ற மாணவர்களைக் காட்டிலும் எந்தப் பாடத்திலும் முன் நின்றார்.

இந்த நிலை இந்து மாணவர்களைக் கவர்ந்தது. சாதி, மதம், உயர்வு, தாழ்வு எல்லா பேதமும் அறிவாற்றலின் முன் அடிபட்டுப் போகும் என்பதை இ.சீனிவாசன் உணரத் தொடங்கினார். இதுவே அவருக்கு முதல் வெற்றியாக அமைந்தது.

எங்கே, எப்படி, எதனால் சாதிச் சாக்கடையை அகற்றலாம் என்பதை அவர் கண்டு கொண்டார். அதன்வழியே படிப்படியாக நடக்கத் தொடங்கினார்; நல்ல சமுதாயத்தை அமைக்கத் தொடங்கினார்.

இந்து மாணவர்களுடன் பழகும்போது மிகவும் கவனமாகப் பழகி வந்தார். ஆமாம், நெருப்பில் குளிர் காய்வதைப் போல அதிகம் நெருங்காமலும், அதே நேரம் நீண்ட தூரமில்லாமலும் பார்த்துக் கொண்டார்.

ஏனென்றால், அவர்களுடன் அதிக அன்பு காட்டுவது - நெருங்கி நட்பு கொள்வது எங்கே தம் இனத்தைக் காட்டிக் கொடுத்துவிடுமோ என்ற அச்சத்தால்தான்... பயத்தால் அல்ல.

கல்வி ஒன்றுதான் ஒருவனை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும் என்பதை உணர்ந்தார் இ.சீனிவாசன்.

எப்படி எப்படியெல்லாம் கல்வியில் முன்னேற முடியுமோ, எந்த வழியில் எல்லாம் அறிவைப் பெருக்கிக் கொள்ள முடியுமோ, அப்படியெல்லாம் முயற்சியோடு முயன்று தேடிக் கொண்டார்.

சாதிக் கொடுமையால் தான் எப்படியெல்லாம் பயந்து பயந்து அச்சத்தோடு வாழ வேண்டிய சூழ்நிலைக்கு ஆளானார் என்பதை தன்னைப் பற்றி

எழுதிய தமது ஜீவிய சரித்திர சுருக்கத்தில், அவரே எழுதியதைக் காண்போம்...

'கோயமுத்தூர் கலாசாலையில் படிக்கும்போது, மொத்தம் 400 பிள்ளைகளில், 10 மாணவர்களைத் தவிர மற்றவர்கள் பிராமண இனத்தைச் சேர்ந்தவர்கள்.

இப்பள்ளியில் ஜாதிக் கோட்பாடுகள் மிகவும் கவனமாகக் கடைபிடிக்கப்பட்டன. இந்த மாணவர்களுடன் பழகுவதால், ஜாதி, குடும்பம், இருப்பிடம் ஆகியவற்றைத் தெரிந்து கொண்டால் என்னை தாழ்ந்தவனாக நடத்துவார்கள் என்பதற்காகவே பயந்து படித்தேன்.

இதற்காக நான் பள்ளியின் மணி அடிக்கும் வரை எந்த மாணவனின் கண்ணுக்கும் தெரியா வண்ணம் மறைவான இடத்தில் படித்துவிட்டு, மணி அடித்ததும் நேராக வகுப்புக்குச் சென்று அமர்ந்து விடுவேன்.

மாலை நேரத்தில் மணி அடித்ததும், மற்ற மாணவர்களுடன் சேர்ந்து போகாமல் கிடுகிடுவென வீட்டிற்கு ஓடிவிடுவேன்.

நான் எப்பொழுதும் மற்ற பிள்ளைகளுடன் கூடி விளையாடுவதுகூட இல்லை. இருந்தாலும் விளையாட வேண்டுமென்ற எண்ணம் எனக்கு இருந்தும் அவர்களுடன் விளையாடக்கூட இந்த நாட்டிலே உரிமையில்லையே என்று பல நாட்கள் ஏங்கியதுண்டு' என்று தமது இதய ஏக்கத்தை அதில் இறக்கி வைத்திருக்கிறார்.

பெரும் சிந்தனையாளர்களும், தொண்டுள்ளம் கொண்ட சமுதாய போராளர்களும் உருவாகக் காரணமாக அமைய, அவர்களது இளமைக் காலத்தில், அவர்கள் மனதில் பெற்ற மாறாத வடுக்களேயாகும்.

இப்படி இளமையில் படிந்த வடுக்கள்தான் இ.சீனிவாசன் அவர்களை பிற்காலத்தில் சமுதாயச் சிற்பியாகவும், இச்சமுதாயத்தின் வழிகாட்டியாகவும் உயர்த்தி நின்றது எனலாம்.

குடும்பம் வறுமையோடு போராடியதால், படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து, குடும்பப் பொறுப்பை ஏற்று, வேலை தேட முற்பட்டார்.

வேலையும் கிடைத்தது. நீலகிரியில் வெள்ளையரின் வணிகப் பணிமனையில் கணக்கர் வேலை. இந்தப் பணியே இவரது வாழ்வில் நல்ல பல திருப்பங்களை ஏற்படுத்தியது.

இ.சீனிவாசன் பணியேற்ற ஆண்டு 1882. இந்த ஆண்டில்தான் நம் நாட்டில் விடுதலைப்போர் வீறு கொண்டிருந்தது.

வெள்ளையர் ஆதிக்கமோ கூடிக் கொண்டிருந்தது.

நீலகிரி, ஆங்கிலேயர்களின் புகலிடமாயிற்று. ஆங்கிலேய உயர் அதிகாரிகள் எல்லாம் அங்கேதான் குவிந்து கிடப்பார்கள்.

யார் இந்த மக்களின் எதிரியோ, அவர்களிடமே இ.சீனிவாசனுக்கு வேலை.

பெரிய பெரிய அதிகாரிகளையெல்லாம் அவர் நேருக்கு நேர் பேசுகின்ற நிலை. நல்ல வாய்ப்பு...!

இந்தப் பழக்கம்தான் காலப்போக்கில் சாதி இந்துக்களிடமிருந்து ஆதிதிராவிட மக்களைப் பாதுகாக்க, ஆங்கிலேயர்களிடம் தங்களது கோரிக்கையை வைக்க வாய்ப்பாக அமைந்தது.

ஆங்கிலேயர்கள் இந்தியாவை நோக்கி நிறைய பேர் வரத் தொடங்கினார்கள். வந்தவர்கள், இந்தியர்களை கிறித்துவத்திற்கு மதம் மாற்றும் வேலையில் ஈடுபட்டனர்.

இச்சூழ்நிலையில், 'தியோசாபிகல் சொசைட்டி'யை நிறுவி, இந்தியாவில் பணியாற்றி வரும் பிளாவட்ஸ்கி அம்மையாரையும், கர்னல் ஆல்கார்ட்டையும் நேரில் சந்திக்க வாய்ப்பு கிடைத்தது.

இவர்களது நட்பு பிற்காலத்தில் பெரும் வெற்றிக்கு வழிவகுத்தது, இ.சீனிவாசனுக்கு.

ஆங்கிலேயர்கள் மத மாற்றம் செய்வதை கடுமையாக எதிர்த்தார், இ.சீனிவாசன். இந்துவாகப் பிறந்துவிட்டாலும், இந்து மதத்திற்கு என்றுமே துரோகம் நினைத்ததில்லை, இ.சீனிவாசன்.

நீலகிரியில் பணியாற்றும் வேளையில்தான் அங்கே வாழ்ந்து வந்த மலைவாழ் மக்களின் வாழ்க்கை முறைகளையும், அம்மக்கள் மற்றவர்களிடம் அடிமையாக உழைத்துவரும் அவல நிலையையும் கண்டு வேதனைப்பட்டார்.

சமுதாய உணர்வே இல்லாது வாழ்ந்து வந்த அவர்களிடையே சமுதாய உணர்வையும், அவர்கள் யார், எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் எடுத்துக்கூறி, வழி நடத்தினார், இ.சீனிவாசன்.

ஆங்கிலேயர்களின் ஆட்சியை எதிர்த்த இ. சீனிவாசன், அதே வேளையில் சமுதாய விடுதலைக்கும் பாடுபட நினைத்தார்.

ஆதிதிராவிட மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பதே ஜாதிகளும், தாழ்வு

மனப்பான்மையுமே மூலக்காரணம் என்று கூறி, மக்களிடையே நாளும் பொழுதும் விழிப்புணர்வை ஏற்படுத்தினார், இ.சீனிவாசன்.

அன்றைய சூழ்நிலையில் இந்தியாவில் இரண்டு பிரச்சனைகள் இருந்தன.

இந்தியர்கள் வெள்ளையர்களை உரிமைக்காகவும், நாடு சுதந்திரம் பெற போராட வேண்டிய பிரச்சனையும்-

இந்தியாவில் பிறந்து, பூர்வீக குடி மக்களாக வாழ்ந்து வரும் ஆதிதிராவிட இன மக்கள், இந்து மதத்தில் இருக்கும் தீண்டாமையை எதிர்த்து விடுதலை அடைய பாடுபடுவது-

இந்த இரண்டு பிரச்சனைகளில் எந்தப் பிரச்சனை முக்கியம் என சிந்திக்க முனைந்தார். சமுதாய விடுதலைக்கு முக்கியத்துவம் கொடுக்க முனைந்தார்.

'நம் சமுதாயம் ஏன் முன்னேறவில்லை...? இச்சமுதாயம் முன்னேறத் தடையாக இருப்பது என்ன? இவர்களிடம் ஒற்றுமை ஏற்படாமைக்கு என்ன காரணம்?'

இக்கேள்விகளைத் தானே கேட்டுக்கொண்டு, அதற்கு விடையைக் காண அவரே முற்பட்டார். இம்மக்களின் பழைய பெருமைகளைக் கண்டறிய ஆய்வில் இறங்கினார்.

இதற்காக இவர் இந்தியா முழுதும் பயணப்பட்டு, அவர்களின் வாழ்க்கை முறைகளை நேரிலேயே கண்டறிந்தார்.

அவர் ஆய்வில் கண்டறிந்தது இதுதான்... 'இம்மக்களிடையே தாழ்வு மனப்பான்மையும், நான்

அடிமையானவன், வாழ்வதற்குத் தகுதியற்றவன் என எண்ணுகின்ற பக்குவமும்தான் இவர்களை பல்லாண்டு காலமாக அடிமைப்படுத்துகிறது...' என்று தெளிவாக கண்டறிந்தார்.

ஃஃஃ

இரட்டைமலை சீனிவாசன், 1887 ஆம் ஆண்டு தமது இல்லறத் துணைவியாக இரங்கநாயகி அம்மாளை மணந்துகொண்டார்.

இவர்கள் இருவருக்கும் பிறந்த குழந்தைகள் ஆறு. இ.சீனிவாசனுக்கு வந்த முன்னேற்றத்தில் எல்லாம் அவர் மனைவிக்கும் பங்குண்டு. அந்த அளவுக்கு இரங்கநாயகி அம்மாள் துணையாகவும், தூணாகவும் இருந்தார்.

1890 இல் இ.சீனிவாசன் சென்னைக்கு வந்து குடியேறினார்.

கிராமத்தில் இருந்த தீண்டாமைக் கொடுமையும், சாதிக் கொடுமையும் இங்கு ஓரளவு இல்லாததைக் கண்டார்.

காரணம், பல இன மக்கள் வாழ்கின்ற சூழ்நிலைதான் என்பதை உணர்ந்தார்; உத்வேகம் கொண்டார்.

தம் இன மக்களின் ஒற்றுமையின்மையின் காரணம், தங்களைத் தாங்களே அறியாததால்தான் என்பதை அறிந்த இ.சீனிவாசன், தன் எண்ணங்களை வெளிப்படுத்த எண்ணினார்.

அதற்காக ஒரு பத்திரிகை நடத்த முற்பட்டார். அப்பத்திரிகைக்கு 'பறையன்' எனும் பெயரைச் சூட்டினார்.

'பறையன்' என்ற பெயரை காரணத்தோடுதான் வைத்தேன் என்று தன்னுடைய ஜீவிய சரித்திரச் சுருக்கத்தில் இப்படிச் சொல்கிறார்...

''நான், நான் என்ற மகா மந்திரத்தைச் சொல்லிக் கொண்டிருப்பவன், தன்னை உணர்ந்து சகலமும் அறியும் ஞானியாகி, தலைவனைக் காண்பது போல் நான், நான் என்று எவன் ஒருவன் தன்னையும், தன் இனத்தையும் மறக்காமல் அச்சமும், நாணமும் இல்லாமல் உண்மை பேசி தன் சுதந்திரத்தைப் பாராட்டுகின்றானோ -

அவன் மதிக்கப்பெற்று இல்வாழ்க்கையில் இன்பமுள்ளவனாய், நித்திய சமுதாயத்துடன் வாழ்வானாகையால், 'பறையர்' இனத்தொருவன், 'பறையன்' என்பவன், 'நான்தான்' என்று முன்வந்தா லொழிய அவன் சுதந்திரம் பாராட்ட முடியாமல் தாழ்த்தப்பட்டு, என்றும் தரித்திரனாய் இருப்பான்.

எனவேதான் நான் 'பறையன்' எனும் மகுடம் சூட்டி ஒரு பத்திரிகையை ஆரம்பித்தேன்'' என இன உணர்வோடு பதிவு செய்துள்ளார்.

இந்த வாரப் பத்திரிகை தொடங்கும்போது கையில் இருந்த மொத்த ரூபாய் 15 தான். அதுவும் ஒரு மலையாள நண்பரிடமிருந்து பெற்றது.

1893 ஆம் அண்டு இப்பத்திரிகை வெளிவந்தது. விலை இரண்டு அணா.

பத்திரிகைக்கு நல்ல ஆதரவு கிடைத்தது. சென்னையில் இரண்டு நாளில் 400 பிரதிகள் விற்றுத் தீர்ந்தன.

இப்பத்திரிகை வழியே தம் இன மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார்; மற்ற இனத்தவர்கள் செய்யும் கொடுமைகளை தோலுரித்துப் போட்டார்; மக்களின் பிரச்சனைகளை அரசின் பார்வைக்கு எடுத்து வைத்தார்.

இ.சீனிவாசனின் பத்திரிகை வளர்ச்சியைக் கண்டு பிற இனத்தினர் காழ்ப்புணர்ச்சி கொண்டு, கடுமையாகத் தாக்கினர்.

1896 ஆம் ஆண்டு 'பறையன்' பத்திரிகையில் வாசகர் ஒருவர் அவதூறாக எழுதிவிட்டார் என்பதைக் காரணம் காட்டி நீதிமன்றத்திற்கு இழுந்துவிட்டார்கள். ரூபாய் நூறு அபராதமும் கட்டச் செய்தார்கள்.

இதைக் கண்டு அவரது முயற்சி முனை முறிந்து போகவில்லை. மேலும் எழுச்சி பெற்று எழுந்தது.

பத்திரிகையைத் தொடர்ந்து, 1891 இல் பறையர் மகா ஜன சபை எனும் ஓர் அமைப்பையும் தொடங்கி, தம் இன மக்களின் உயர்விற்காகப் பாடுபட்டார், இரட்டைமலை சீனிவாசன்.

கல்வி ஒன்றுதான் தம் இன மக்களை உயர்த்தும் என்பதை உணர்ந்த இ.சீனிவாசன், அதற்கான முயற்சியில் இறங்கினார்.

ஆங்கில அரசானது ஆதிதிராவிட மக்களை கல்வியில் மேம்படுத்த பல சட்டங்களைப் போட்டாலும், அச்சட்டங்கள் கிராமங்களில் மறைமுகமாக மறைக்கப்பட்ட காலம் அது.

குறைந்தது ஏழு பிள்ளைகள் படிக்க நேர்ந்தால், அதை ஒரு பள்ளிக்கூடமாக அரசாங்கத்தார்

ஏற்றுக்கொண்டு, அப்பள்ளிக்கு மான்யம் அளிக்க உத்தரவிட்டிருந்தனர்.

ஆனால் அக்காலகட்டத்தில் மிகுதியாக பிராமணர்களும், சாதி இந்துக்களும்தான் ஆசிரியர்களாக இருந்தார்கள்.

இவர்கள் ஆதிதிராவிட இன மக்களுக்கு கல்வி கற்றுத்தர முன்வரவில்லை.

அதே நேரத்தில் சென்னையில் மதமாற்றம் செய்ய வேண்டும் என்ற காரணத்திற்காகவே ஒரு சிலர் நடத்திய பள்ளிக்கூடங்களில் அரசு சட்டம் அனுப்பப்படாத காரணத்தால், அப்படிப்பட்ட பள்ளிகளிலும் ஆதிதிராவிட மக்கள் படிக்க வாய்ப்பு ஏற்படவில்லை.

இக்கொடுமையை உணர்ந்த இ.சீனிவாசன், இதற்கொரு முடிவு கட்ட எண்ணி, செயலில் இறங்கினார்.

*1898* ஆம் ஆண்டு இக்கொடுமைகளைத் தெளிவாக ஆங்கில அரசுக்கு எழுதி, விளக்கமாகத் தெரிவித்தார்.

அதன் விளைவாக சென்னை முனிசிபாலிட்டி பள்ளிகள் கட்ட வேண்டி ஆங்கில அரசு ஆணை பிறப்பித்தது.

இதன் காரணமாக ஆதிதிராவிட மக்களின் குழந்தைகள் கல்வி கற்க முன்வந்தனர்.

இருந்தாலும் இருட்டடிப்பு வேலைகளைச் செய்வது சாதி இந்துக்கள்தான் என்பதை வேதனையோடு இ.சீனிவாசன் தனது 'ஜீவிய சரித்திரச் சுருக்கத்தில்' இப்படி எழுதியிருக்கிறார்.

'சர்க்கார் ஆதாரங்களைப் பரிசோதித்துப் பார்த்தால், 1772 ஆம் ஆண்டு முதற்கொண்டு ஆங்கில அரசு இவ்வின மக்களைப் பற்றி கவலை எடுத்து முன்னேற்றத்திற்காக பாடுபட்டு வந்திருக்கிறது.

1818 ஆம் ஆண்டு வருவாய்த்துறை ஆட்சித் தலைவர் அவர்கள் நம் இன மக்களின் வாழ்க்கை நிலையைப் பற்றி விசாரித்துள்ளார்கள்.

65 ஆண்டு காலம் கவனிக்க ஆட்கள் இல்லாமல், 1893 ஆம் ஆண்டு கல்வி கற்பிக்க அரசு முன்வந்தது.

அப்பொழுதும் அரசாங்கத்தின் எண்ணம் பலிக்கவில்லை. காரணம், கிராம அதிகாரி முதல் வருவாய்த்துறை தாசில்தார், துணையாட்சியாளர் போன்றவர்கள் ஜாதி இந்து இன பந்துக்கள்.

இப்படிப்பட்டவர்களின் சூழ்ச்சியால்தான் நம் இனம் முன்னேற்றம் காணவில்லை. இக் கொடுமையைப் பற்றி 1893 ஆம் ஆண்டு 'பறையன்' பத்திரிகையில் விளக்கமாக எழுதிய காரணத்தால்தான், வருடா வருடம் 20, 30 இலட்ச ரூபாய் கல்விக்காக செலவு செய்து நம் இன மக்களை கல்வியில் உயரச் செய்தார்கள்...'

இன்று ஆதிதிராவிட மக்கள் கல்வியில் உயர்ந்து, பதவியில் இருந்து வருகிறார்கள் என்றால், அதற்குக் காரணமானவர் - பகுத்தறிவாளர் - இரட்டைமலை சீனிவாசன்தான் என்றால் மிகையன்று.

இக்காலத்தில் இன்பச் சுற்றுலா, 'ஹனிமூன்' சுற்றுலா என்று எதற்கெடுத்தாலும் வெளிநாடு சென்று வருகிறார்கள்.

ஆனால், இ.சீனிவாசன் வெளிநாடு செல்ல காரணமாக இருந்தது, தம் இன மக்களின் வாழ்வை உயர்த்து வதற்காகவே.

முதலில் இலண்டன் செல்ல நினைத்த அவர், காலச் சூழ்நிலையால் அவர் ஏறிய கப்பல் கீழ் ஆப்பிரிக்கா - 'ஜான்சிபார்' தீவை அடைந்தது.

அங்கே அவர் இரண்டு ஆண்டு காலம் கடினமாக உழைத்து, பொருள் சேர்த்து, அங்கிருந்து தென் ஆப்பிரிக்கா சென்றார்.

அங்கே உடல் நலம் கெட, நல்ல மனங்கள் உதவ, அங்கிருந்து நெட்டால் மாநிலத்தைச் சேர்ந்த 'டர்பன்' சென்று, அங்கே நண்பர் ஒருவர் உதவியுடன் அரசு வேலையில் சேர்ந்து பணியாற்றினார்.

1904 ஆம் ஆண்டு நெட்டாலில் தங்கியிருந்த போது, பீட்டர் என்ற நண்பரின் உதவியால் நீதி மன்றத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணி யாற்றினார்.

அவ்வேளையில் காந்தியடிகள் தென் ஆப்பிரிக் காவில் தங்கி வழக்கறிஞராக படித்து, பணியாற்றிக் கொண்டிருக்கும்போது, காந்தியாருக்கு மொழி பெயர்ப்பாளராகவும் இருந்திருக்கிறார்.

அத்தோடு காந்தியடிகளுக்கு தமிழ் கற்றுத் தந்ததோடு, திருக்குறளையும் சொல்லிக் கொடுத்தார். 'காந்தி' என்று தமிழில் கையெழுத்துப் போடுவதற்கு கற்றுக் கொடுத்தார்.

இரட்டைமலை சீனிவாசன் நினைத்தது போல் இலண்டன் அப்போது செல்ல இயலாது போனது. தாய்நாடு திரும்பினார்.

இ.சீனிவாசன் அவர்கள் தான் மேல்நாடுகளில் கண்ட - அனுபவித்தவைகளை எல்லாம் தம் மக்களிடையே பகிர்ந்து கொண்டார்.

அவரின் அனுபவத்தைக் கேட்ட பலரும் அவரை வியந்து பார்த்தனர். ஆங்கிலேயர்கள் அவரின் உயர்வைக் கண்டு மதிப்பளிக்கத் தொடங்கினர்.

அதன் காரணமாக, அவர் பூந்தமல்லி பகுதி யிலிருந்து சென்னை மாநிலத்தின் மேல் சபை உறுப்பினராக 1923 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்.

இந்தப் பதவியின் உதவியால் நம் இன மக்களின் வாழ்வை மலர வைக்கலாம் என்று மகிழ்ச்சி கொண்டார் இ.சீனிவாசன்.

19, 20 ஆம் நூற்றாண்டுகளில் இந்திய அரசியலில் விடிவெள்ளியாகவே ஒளிவிட்டார், இ.சீனிவாசன்.

இவரது அரசியல் வாழ்வு முழுவதும் ஒடுக்கப் பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கே அமைந்தது எனலாம்.

1923 ஆம் ஆண்டு முதல் தான் இறக்கும் வரை எம்.எல்.சி.யாக இருந்து வந்தார், இவர்.

நம் நாடு அந்நியரிடமிருந்து விடுதலை பெறாத காலத்தில், ஆங்கிலேயர் காலத்திலேயே எம்.எல்.சி. யாக இருந்து சிறந்தவர், இ.சீனிவாசன் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இவர் மட்டும் உரிமைக்குரல் எழுப்பவில்லை யென்றால், பல ஆண்டுகளாக அடிமைப்பட்டு, அடக்கப்பட்டு கிடந்த கந்தனும், கலியனும் இன்று

பஞ்சாயத்துத் தலைவராகவும், சேர்மனாகவும் வர முடிந்திருக்காது.

நீதித்துறையிலும், அரசுத் துறையிலும், கல்வித் துறையிலும், அஞ்சல் துறையிலும் ஆதிதிராவிட மக்கள் பணியேற்றிருக்க முடியாது.

இ.சீனிவாசன் அவர்களின் உழைப்பிற்கு - உண்மையான கடின உழைப்பிற்கு - அவர் ஆற்றிய சமுதாயத் தொண்டிற்கு - அவரது ஆழ்ந்த புலமைக்கு - கல்வித் தகுதிக்கு சிறப்பு செய்யும் வகையில் ஆங்கில ஆட்சியாளர்கள் 1926 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நாள் இந்தியாவின் கவர்னர் ஜெனரல் அவர்களால் 'ராவ் சாகி' எனும் உயரிய பட்டம் அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, 06.06.1930 இல் 'ராவ் பகதூர்' பட்டமும், 01.01.1936 ஆம் ஆண்டு 'திவான் பகதூர்' பட்டமும், 'திராவிட மணி' எனும் பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டது; புகழ் உச்சியில் நின்றார்.

ஆதிதிராவிட மக்களின் உயர்விற்காகவே வாழ்ந்த இரட்டைமலை சீனிவாசன், 18.09.1945 ஆம் ஆண்டு சென்னையில் உயிர் நீத்தார்.

■

# 3. 'தமிழ்நாடு' கண்ட தலைமகன்

நடுநிசி. தூக்கம் வரவில்லை. துக்கம் துளைக்கிறது. வெட்கமும் வேலாகக் குத்துகிறது. கொழுந்து விட்டெரியும் பெரு நெருப்பும், அதிலே கிடத்தப் பட்டுள்ள தியாகத் திருமேனியும் தெரிகிறது. தீ என்னைத் தீண்டாது; தீயோரின் பிடியிலிருந்து நான் விடுதலை பெற்று விட்டேன்.

தீரமற்றோரே! தெளிவற்றோரே! இனி தீ உங்களைத்தான் தாக்கும்! வெந்து வேதனைப் படுங்கள்! உணர்ச்சியற்ற உருவங்களே! உண்ண, உடுக்க, இருக்க வழி கிடைத்தால் போதும் என்றெண்ணி அவைகளைப் பெற, விடாப் பிடியாகவும், இழிநிலையைச் சகித்துக் கொள்ளவும் சம்மதித்துக் கிடக்கும் சத்தற்ற ஜென்மங்களாகி விட்டீர்.

சடங்களே! கருகிப் பொடியாகட்டும். எனக் கென்ன! இதோ நான் கண் மூடிவிட்டேன். இனி உங்களைத் திரும்பிப் பாரேன்! செல்கிறேன்.

சிந்திக்கவும் செயலாற்றவும் திறனற்றுப் போன உம்மைக் காணக் கூசினேன். இனி இவர்தம் கூட்டுறவு வேண்டாம் என்று துணிந்தேன். சாவை வரவேற்றேன்! நான் மறைகிறேன். நீங்கள் உலாவுங்கள்! நான் இறந்துபடுகிறேன். நீங்கள் இளித்துக் கிடவுங்கள்!

எனக்கு மானம் பெரிது. உயிர் அல்ல; உயிரை இழக்கின்றேன்! உலுத்தருக்கு உயிர்தான் வெல்லம்.

அதைச் சுமந்துகொண்டு திரியுங்கள்! சவத்திற்கும் உயிர் உள்ள சடத்துக்கும் என்ன வேறுபாடு? உணர்ச்சிதானே! இரண்டினையும் வேறுபடுத்திக் காட்டுவது! உணர்ச்சியற்றுக் கிடக்கும் உம்மை மாந்தர் என்றும், மறத்தமிழர் என்றும் கூற என் நா கூசுகிறது.

இதோ! இனி நான் பேசப் போவதில்லை. போகிறேன். பொல்லாங்கும் பழியும், புல்லர் வாழ்வும், பூசலும் நிரம்பிய இந்த இடத்தை விட்டே அகன்று செல்கிறேன்!

சாக்கடையில் நீங்கள் உழலுங்கள்; சாக்காடு எனக்குச் சாந்தி அளிக்கட்டும்! பதைக்கிறீர்கள்; துடிக்கிறீர்கள். ஆகா! என்கிறீர்கள், ஆகட்டும் என்று ஆர்ப்பரிக்கிறீர்கள்; யார் தெரியுமா என்று உருட்டுகிறீர்கள். என்ன செய்வேன் தெரியுமா! என்று மிரட்டுகிறீர்கள்; எல்லாம் எதற்கு?

ஒரு சிறு பொருள் உன் கரத்தை விட்டுப் போவதானால்! ஒரு சிறு சொல் உம்மீது எவரேனும் வீசுகிறானென்றால்! சுயநலத்துக்கும் குந்தகம் விளைகிறது என்றால்; சூரத்தனமாகக் கிளம்புகிறீர்கள், போராடு கிறீர்கள்.

தாயகம் பழிக்கப்படுகிறது; தாயகம் இழிநிலை பெறுகிறது. ஏன் என்று கேட்கும் துணிவு இல்லை; உங்கள் தாயகம் தருக்கரின் காலடியில் சிக்கிச் சீரழிகிறது. தடுத்திடும் ஆற்றல் இல்லை உங்களுக்கு.

மொழி அழிக்கப்படுகிறது. உமது விழியிலே நீர் சேரக் கூடக் காணோம். தன்மானம் அழிக்கப்படுகிறது. தடுத்திடக் கிளம்புகிறீர்களா? இல்லை! தாளேந்திக் கிடக்கிறீர்கள்.

நத்திப் பிழைத்திடவும், நமக்கென்ன என்று ஒதுங்கிக் கிடக்கவும், நம்மால் .ஆகுமா என்று பெருமூச்செறியவும் கற்றீரேயன்றிக் கடமை உணர்ச்சியை எங்கே கொண்டீர்! வீரர் வழிவந்தோரே! வெற்றி முரசு கொட்டினோரே!

தமிழர்கள்! தரணிப் புகழ் பரணி பாடிய பரம்பரையினரே! கடலில் கலம் செலுத்திக் கரிப்படை கொண்டு கருங்கற் கோட்டைகளைத் தூளாக்கி, வேற்படை கொண்டு மாற்றாரை விரட்டி, வாகை சூடிய வெற்றி வீரர் வழி வந்தோரே! என்றெல்லாம் ஏடு உம்மைக் குறிப்பிடுகிறது.

நாடு நலியக் கண்டும், வலியோர் சிலர் எளியோர் தமை வாட்டிடக் கண்டும் வாய் திறந்து கேட்கவும் வக்கற்றுக் கிடக்கிறீர்.

உம்மோடு நான் இருக்கச் சம்மதியேன். உம்மில் ஒருவனாக இருக்க என் மனம் இடம் தரவில்லை! நான் பிணமாகிறேன். பேசும் பிணங்களே! குடும்பம் அழைக்கிறது. சென்று குதூகலமாகக் காலங் கடத்துங்கள்; குட்ட வருவான் நெடியோன்! குனிந்து கிடவுங்கள்; குறை கூறாதீர்கள்.

குண்டாந் தடியுடன் வருவான்; கோலோச் சுவோரின் ஏவலன். இழிவாகப் பேசுவான்; இனிமை, இனிமை என்று கூறுங்கள். இல்லையெனில் இருட்டறையில் தள்ளிப் பூட்டிவிடுவான்; வாழ வேண்டுமே என்பீர்.

வாழுங்கள், வாழுங்கள். மானம் இழந்து, உரிமை இழந்து, உணர்ச்சி இழந்து, உயிரைச் சுமந்து கொண்டு உலவுங்கள்! என்னால் முடியாது! இதோ நான் மரணத்தைத் தழுவிக் கொண்டேன்.

மலர் தூவிய மஞ்சம் உமக்குக் கிடைக்கக்கூடும். மானத்தை இழந்த பலருக்குக் கிடைக்கும், எனக்கு இந்த நெருப்புப் படுக்கை போதும்! பிடி சாம்பலாகிறேன்! பேதையாய்த் தலையாட்டிப் பதுமையாய், அடிமையாய்க் கிடந்து உழல்வதைக் காட்டிலும், பெரு நெருப்புக்கு என்னை ஒப்படைத்து விடுவது சாலச் சிறந்தது!

எனவே நான் சொல்கிறேன், நீங்கள் பூச்சி, புழுக்களும் சீச்சீ என்று இகழ்ந்திடும் விதத்தில் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டு கிடவுங்கள்! என்று நம்மை நோக்கிப் பெரு நெருப்பில் கிடத்தப்பட்டுள்ள பெரியவர் பேசுவது போன்றதோர் பிரமை ஏற்படுகிறது.

இவர் இது போலெல்லாம் நம்மை ஏசி இருக்கக் கூடாதா; ஏசியிருந்தாலாவது ஒரு வகையில் நன்றாக இருந்திருக்கும். அந்தப் பெருங்குணவான்.

ஒரு துளி ஏசினாரில்லை; நமது இழிநிலை இரக்கப்பட்டு இறந்துபட்டேனும், நமக்கு உய்யும் வழி கிடைத்திடச் செய்வோம் என்று சினந்தாரில்லை. இறந்துபட்டார் நமக்காக இறந்துபட்டார்; நாட்டுக்காக உயிர் துறந்தார்; நாமெல்லாம் நடைப்பிணமாகி விட்டோம் என்பதறிந்து வேதனையுற்றார்; உயிர் துறந்தார்; உயிர் போகிறது. போய்க்கொண்டே இருக்கிறது என்று அறிந்தார். விநாடிக்கு விநாடி மரண வாயிலை நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தார்; சாவை வரவேற்றார்.

நாம் வாழ்கிறோம்! வெட்கமின்றி, வாழ்ந்து கொண்டு கிடக்கிறோம். வெந்து சாம்பலாகி விட்டார் அந்த வீரத் தியாகி என்று எண்ணும்போது, இதயத்தை

யாரோ சம்மட்டி கொண்டு தாக்குவது போலாகி விடுகிறது.

இந்த நடுநிசியில் என் நெஞ்சம் நடுக்குறுகிறது; எண்ணம் ஈட்டியாகிவிடுகிறது. எரிதழல் தெரிகிறது. தியாகியின் உடல் அதிலே கிடப்பது தெரிகிறது. ஒரு கேலிச் சிரிப்பொலிகூடக் கேட்கிறது. ஓஹோ! நீ விடுதலைப்படை வரிசையில் உள்ளவனல்லவா! உரிமை முழக்கமிட்டுக்கொண்டு ஊரூரும் அலைபவனல்லவா?

தமிழர் தமிழர் என்று மார்தட்டித் தட்டிப் பேசுபவனல்லவா? அகம் என்பாய், புறம் என்பாய், ஆற்றல் என்று கூறுவாய், என் ஆன்றோர், சான்றோர் என்று புகழ் பாடுவாய் அல்லவா? என்று கேட்டு விட்டுக் கேலிச் சிரிப்பொலி கிளப்பி என்னை வாட்டி வதைக்கிறது.

நான் மனக்கண்ணால் காணும் அந்தக் காட்சி இந்த நடுநிசியில், என் போல் இது பற்றி எண்ணி எண்ணி நெஞ்சு புண்ணாகிக் கிடப்போர் எண்ணற்றவர்கள் என்பதும் தெரிகிறது.

ஆனால், எனக்குத் துக்கம் மட்டுமல்ல; வெட்கம் என்றேன். உண்மையிலேயே நான் வெட்கப் படுகிறேன்! ஏனெனில், இத்தகைய வீரத் தியாக உள்ளம் கொள்ள முடியுமா உன்னால் என்று எவரேனும் என்னைக் கேட்டுவிட்டால், நானென்ன பதில் அளிக்க முடியும்? தலையைக் கவிழ்த்துக் கொள்ளத்தான் வேண்டும். பலகோடி மாநகரில் ஒருவருக்கு மட்டுமே கிட்டக்கூடியது, அந்த வீரத் தியாக உள்ளம்.

விருதுநகர் சங்கரலிங்கனார் அதனைப் பெற்றிருந்தார். பேதை நான். அதனை உணர்ந்து கொள்ளும் ஆற்றலும் பெற்றேனில்லை. அவர் இறந்து படுவார் என்று எனக்கு எண்ணவே இயலாது போயிற்று.

அவரை நான் கண்டேன்; எனினும், அவர் இறந்துபட நேரிடும் என்று எண்ணவில்லை.

காரணம் நானோர் ஏமாளி! நாடு அவரை அந்த நிலைக்குச் செல்ல விடாது. நாடாள்வோர் அவரைக் கைவிட மாட்டார்கள். அந்த அளவு கேவலத்தன்மை நாட்டைப் பிடித்துக் கொண்டில்லை. அவர் கடைசிக் கட்டம் செல்லும் வரையில்கூடக் கள்நெஞ்சம் கொண்டிருப்பர்.

பிறகோ பழி பாவத்துக்கு அஞ்சியேனும், பிற்காலத்துப் பயந்தேனும் அறிவுலகம் ஏசுமே என்று எண்ணியேனும் அவர் சாவதைத் தவிர்த்து விடுவதற்கான தக்க முறையினை மேற்கொள்வர் என்று என் பேதை நெஞ்சு எண்ணிற்று! பெரு நெருப்புக் கிளம்பிற்று; அந்தோ! அந்த வீரத் தியாகியை நெருப்பு அணைத்துக் கொண்டது!

எனக்கு அவரை, இதற்கு முன் தெரியாது. நாடு அவர் புகழ் பாடிட, அவர் ‘நடுநாயகமாக’ இருந்திடவில்லை. எனினும் இன்று நடுநாயகங்களாகி விட்ட பலருக்கு, அவர் போன்றோரின் ஆற்றல்மிக்க தேசத் தொண்டு பயன்பட்டு வந்திருக்கிறது.

நீண்ட காலமாகக் காங்கிரசில் பணியாற்றியவர். காமராஜர் கதர் அணியக் கிளம்பு முன்பே, கை ராட்டையில் நூல் நூற்றவர். காந்தியார், மகாத்மா ஆகிக்

கொண்டிருக்கும்போது, உடனிருந்து அந்த உயர்வு வருவது கண்டு உள மகிழ்ந்தவர்.

வந்தே மாதரம்; தேர்தல் தந்திரமான பிறகு அல்ல; அஃது தேசிய மாமந்திரமாக இருந்த காலத்திலேயே அந்தக் குறளைக் கற்றுக் களித்தவர். சிறை சென்று நலிந்தவர்; வணிகத்துறையிலும் அவருக்கு வெற்றி தான். அவர் பழம்பெரும் தேச பக்தர் வரிசையைச் சேர்ந்தவர்...

இன்று நாம் அனைவரும் மனம் மகிழ, நாவினிக்க 'தமிழ்நாடு', 'தமிழ் மாநிலம்' என்று செந்தமிழ் மணக்க அழைக்கின்றோம்; எழுதுகின்றோம்.

இதற்கெல்லாம் ஆதார சுருதியாக - மூலவராக இருந்தவர்; உயிர் துறந்தவர் யார் எனக் கேட்டால், தியாகி சங்கரலிங்கனார்தான் என்று எத்தனை பேர் சொல்வார்கள்? எத்தனை பேருக்கு இந்தப் பேருண்மை தெரியும்?

❖ ❖ ❖

இந்த வீரத்தியாகி உயிர் நீத்தபோது, தமது நெஞ்சக் குமுறலை, நேச வரிகளை, கண்ணீர்த் துளிகளை, திராவிட நாடு இதழில், 'தம்பி'க்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய கடிதமே மேலே நீவிர் படித்தது.

தென்பாண்டிச் சீமையில், பெரிய கருப்பசாமி நாடார் - வள்ளியம்மை ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர்தான் சங்கரலிங்கம்.

தக்க வயதில் பள்ளியில் சேர்க்கப்பட்டு படித்து வந்தார். 1908 இல் எட்டாம் வகுப்பில் இருந்தார். இவர் படித்த பள்ளியில்தான் காமராசரும் படித்தார். அவர் முதல் வகுப்பில் இருந்தார்.

இந்த வேளையில் ஒரு நாள், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யின் சொற்பொழிவைக் கேட்கின்ற வாய்ப்பு சங்கரலிங்கனாருக்கு வாய்த்தது.

அன்று வ.உ.சி.யின் பேச்சைக் கேட்டது முதல், நாட்டு விடுதலைப் போரில் தன்னை இணைத்துக் கொண்டார், சங்கரலிங்கனார்.

பள்ளிப் படிப்பு எட்டாம் வகுப்போடு நின்று போனது. ஒரு பருத்தி வியாபாரிக் கடையில் பணியாளராகச் சேர்ந்தார். ஓரளவு தொழிலைக் கற்றுக்கொண்ட நிலையில், மும்பையில் இருந்த விருதுநகர் வணிகர் ஒருவரின் கடையில் சேர்ந்தார்.

பெண் கல்வியை ஆதரிக்காத அந்த காலத்தில் (1914) பங்கஜ விலாச விந்தியா பிவிர்த்திச் சங்கம் என்னும் அமைப்பு ஒன்று தொடங்கப்பட்டது.

இந்த நல்ல செயலை சுவாமி திருவாலவாயர் என்பவர் தொடங்கினார். இவர் தொடங்கிய அமைப்பு பெண் கல்வி மேன்மைக்காகப் பாடுபட்டது.

இவ்வமைப்பின் செயலாளராக சங்கரலிங்கனார் தேர்ந்தெடுக்கப்பட்டார். பெண் கல்விக்குப் பாடுபடத் தொடங்கினார்.

அடுத்த ஆண்டே அவரின் குல வழக்கப்படி செந்தியம்மாள் எனும் பெண்ணிற்கும் சங்கரலிங் கனாருக்கும் திருமணம் நடந்தது.

இருவருக்கும் ஒரு பெண் குழந்தை 1916இல் பிறந்தது.

இதே ஆண்டு, ‘வெயில் காத்த மாரியம்மன்’ கோயில் அறங்காவலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், சங்கரலிங்கனார்.

வ.உ.சி.யின் விடுதலைப் போராட்ட சொற்பொழிவைக் கேட்ட சங்கரலிங்கனார், 1917 இல் காங்கிரஸ் பேரியக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டார்.

இரண்டாவது முறையாக 1918 ஆம் ஆண்டு, குடும்பத்தோடு மும்பை சென்றார். அங்கே வணிக நிறுவனம் ஒன்றில் பணியேற்றார்.

அதே நேரம் அரசியல் ஈடுபாட்டிலும் இதயத்தைப் பதித்து வந்தார் சங்கரலிங்கனார். அந்நாளில் பாலகங்காதர திலகரையும் சந்தித்து மகிழ்ந்தார்.

அந்தச் சந்திப்பு அவருள்ளத்தில் தேசிய உணர்வை மேலும் தூண்டியது.

அதே ஆண்டு சொந்த ஊரான விருதுநகருக்குத் திரும்பிய சங்கரலிங்கனார், 'இராவ் பகதூர் இரத்தினசாமி நாடார் நினைவுச் சங்கத்தின்' கணக்குத் தணிக்கைக்குழுத் தலைவராக இருந்து பணியாற்றினார்.

இதோடு மட்டுமல்ல; நாடார் குல அபிவிருத்திச் சங்கம், பால்ய நாடார் சங்கம் போன்ற அமைப்புகளில் பங்கேற்று தாம் சார்ந்த நிறுவனத்திற்கு சிறப்பான முறையில் பணியாற்றினார் என்றால் அது மிகையல்ல.

சங்கரலிங்கனாருக்கும், இராஜாஜிக்கும் சந்திப்பு 1920 இல் நடந்தது. திருநெல்வேலியில் சென்னை மாகாண அரசியல் மாநாடு நடந்தது. அப்போதுதான் அந்த சந்திப்பு நிகழ்ந்தது. அதுமுதல் அவர்களின் நட்பு வளர்பிறை யானது.

இந்த ஆண்டுதான் சங்கரலிங்கனாருக்கு சமுத்திரக் கனி நாகரத்தினம் என்ற பெண் குழந்தை பிறந்தது.

இதைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் கழித்து வடிவேல் முருகன் என்னும் ஆண் மகவும் பிறந்தது.

இதேயாண்டில் கதர் இயக்கத்தைத் தொடங்கிய தோடு, குடும்பத்தார் அனைவரும் கதராடை அணிவதென்று முடிவும் செய்தார்.

மீண்டும் மும்பை சென்று கடை ஒன்றில் பணியேற்றார். முதன்முதலாக 16.2.1925இல் காந்தியைச் சந்தித்தார். அன்று முதல் தினமும் நூல் நூற்கவும் தொடங்கினார்.

அதுமுதல் கதர் இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். இவரது முயற்சியால் விருதுநகர் கதர் வஸ்திராலயம் தொடங்கப்பட்டது.

அதே நேரத்தில் ஒரு கதர் கடையிலும் பணியாளராகப் பணியாற்றி வந்தார். அப்படிப் பணியாற்றி வந்த வேளையில், அந்தக் கடையில் வழக்கமாக நடந்து வந்த பழக்கத்தை மாற்றி யமைத்தார்.

அதாவது, அந்தக் கடையில் எப்போதும் கால வரம்பின்றி இரவுப்பணி இருந்து வந்ததை மாற்றி, ஆலைகளில் சங்கு ஊதிப் பணியை முடிப்பது போல், இரவு பத்து மணியானதும் மணியடித்து வேலை முடிவினை அறிவிக்கச் செய்தார்.

இந்த வேளையில், சங்கரலிங்கனாரின் குடும்பத்தில் வறுமைப்புயல் வீசியது.

எந்தவிதத் துணைப் பொருள்களும் இல்லாமல் அதாவது, குழம்போ, பொரியலோ, சாறோ, மோரோ, ஏன் ஊறுகாய்கூட இல்லாத நிலையில் வெறும் சோற்றை மட்டுமே உண்டு, ஒரு மாத காலம் வரை கடத்தினாராம்.

சங்கரலிங்கனாரை தென்னகம் முழுவதும் வெளிச்சமிட்டுக் காட்டியது காந்தியின் வரவுதான்.

ஆமாம்! 1927 ஆம் ஆண்டு இராஜாஜியிடம் இருந்து இவருக்கொரு கடிதம் வந்தது.

அக்கடிதத்தில், 'காந்திஜி அவர்கள் விருதுநகருக்கு வருகிறார்கள். அவர்களை சிறப்பான முறையில் வரவேற்க ஏற்பாடு செய்யுங்கள்' என்று கடிதம் பேசியது.

இந்த நிகழ்ச்சியே சங்கரலிங்கனாரை நாடறிய வைத்தது.

விருதுநகருக்கு வந்திருந்த அன்னை கஸ்தூரி பாய்க்கும், காந்திஜிக்கும் சிற்றுண்டி வழங்கும் வாய்ப்பினையும் பெற்று மகிழ்ந்தார், சங்கரலிங்கனார்.

இந்த நிகழ்ச்சியின் வாயிலாக லிங்கனார், காந்திஜியின் மீதும், காங்கிரசின் மீதும் அவர் கொண்டிருந்த பற்றையும், பாசத்தையும் வெளிக் காட்டின.

சங்கரலிங்கனார் விருப்பப்படியே இராஜாஜி மும்பைக்கு அனுப்பி வைத்தார்.

தண்டி யாத்திரையை காந்திஜி மேற்கொண்ட போது, மூன்று நாள்கள் அவரோடு பயணம் செய்யும் வாய்ப்பைப் பெற்றார்.

காந்தியடிகள் மேற்கொண்ட சத்தியாக்கிரகப் போராட்டக் காலங்களில் சங்கரலிங்கனார் முன்நின்று இயக்கத்தை நடத்தினார்.

சங்கரலிங்கனார், திருச்சி சத்தியாக்கிரகப் போராட்ட வழக்கில் ஆறு மாதங்கள் கடுங்காவல்

தண்டனையும், கரூர் வழக்கில் ஆறு மாதங்கள் கடுங்காவல் தண்டனையும், ஐம்பது ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டு, திருச்சி மத்திய சிறையில் தண்டனையை அனுபவித்தார்.

மும்பைக்கும், விருதுநகருக்கும் ஆண்டுக்கு ஒரு முறையோ, இரண்டு ஆண்டுக்கு ஒரு முறையோ சென்று பணியாற்றி வந்திருக்கிறார் என்பதை இவரது வாழ்க்கை வரலாறு நமக்குத் தெரிவிக்கிறது.

*1941* இல் மும்பையில் மாதுங்கா என்ற பகுதியில் நல்லெண்ணெய் வியாபாரத்தை மேற்கொண்டதோடு, பொது நலப் பணியிலும் ஈடுபட்டு வந்தார்.

மகள் குடும்பத்தினர் இரங்கூனிலிருந்து விருது நகருக்குத் திரும்பினர். மகன் வடிவேல் முருகன் மும்பையில் இருந்து திரும்பி வந்தவர், விருதுநகரில் ஒரு வியாபார நிறுவனத்தில் பணியேற்றார்.

மகன் வடிவேல் முருகன் சென்னை தண்டையார் பேட்டையில் ஒரு கடையில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, காலரா நோய்க்குப் பலியானார்.

மகனின் பேரிழப்பு சங்கரலிங்கனாருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. நிலைகுலைந்து போனார்; மும்பையில் தனித்துத் தவித்திருந்தார்.

அதுமுதல் மனைவி, மகள், மருமகன் அனைவரின் உறவையும் துறந்தார். சுருக்கமாகச் சொன்னால், குடும்ப உறவையே துறந்தார் என்றே சொல்ல வேண்டும்.

மனைவி பட்டி வீரன்பட்டியில் தனித்து வாழ்ந்தார். மகளும் அப்படியே. சங்கரலிங்கனாரோ, விருதுநகரில் தனித்து வாழ்ந்தார்.

தமக்குச் சொந்தமான இரண்டு வீடுகளையும் கையிலிருந்த ரூ.4,050 பணத்தையும் விருதுநகர் சத்திரிய பெண்கள் பாடசாலைக்குத் தானமாக எழுதி வைத்தார்.

இளவரசி எலிசபெத் திருமணம் 1948இல் நடந்தது. அந்தத் திருமணத்திற்கு சங்கரலிங்கனாரே நெய்த கதராடையினைப் பரிசாக அனுப்பி வைத்தார். அது ஏற்கப்பட்டு பாராட்டுக் கடிதமும் அவரிடமிருந்து வந்தது.

இதே ஆண்டில் காந்தி ஆசிரமத்தில் தேனீயைப் போல் சிறிது சிறிதாகச் சேர்த்து வைத்திருந்த 5,418 ரூபாயையும் பெற்றார்.

பின் சிறிது காலம் பாலகுருகுல வித்தியாலயத்தில் தொண்டு செய்து வந்தார்.

காந்திஜி விருதுநகர் வந்தபோது, அங்கே இருந்த சூலைக்கரைமேட்டில்தான் தங்கியிருந்தார்.

அவர் தங்கியிருந்த அதே இடத்தில் சங்கரலிங்கனார் ஆசிரமம் அமைத்துத் தங்கினார்.

சங்கரலிங்கனார் பழுத்த காங்கிரசுத் தியாகி மட்டுமல்ல, வீரம்மிக்க விடுதலைப் போரில் பங்கு கொண்ட விடுதலைப் போராளியும்கூட.

அதே நேரம் மொழியையும், நாட்டையும் உயிராய் எண்ணியவர்.

நம் மொழி, உலக மக்களுக்கெல்லாம் மூத்த மொழியாக இருந்தும், நாம் வாழும் நாட்டினை 'மதராஸ் இராச்சியம்' என்று அழைக்கின்ற அவல நிலையில் இருக்கின்றோமே என்று மனம் கசிந்தார். ஒரு முடிவினை எடுத்தார்.

'மதராஸ் இராச்சியம்' என்று அழைப்பதை விடுத்து, 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்பதற்காக 27-07-1956 ஆம் ஆண்டு உண்ணா நோன்பினை மேற்கொண்டார்.

சங்கரலிங்கனாரின் பெயர் மாற்றுக் கொள்கையை அன்றைய சென்னை மாநில அரசு ஏற்க மறுத்துவிட்டது.

இருந்தாலும் அவர் போராட்டத்தை நிறுத்தாமல் தொடர்ந்தார்.

அதைக்கண்டு பேரறிஞர் அண்ணா, சிலம்புச் செல்வர், ப.ஜீவா போன்ற தென்னாட்டுத் தலைவர்களெல்லாம் உண்ணா நோன்பைக் கைவிடுமாறு வேண்டிக் கேட்டுக் கொண்டபோது, 'உயிர் பெரிதன்று; மானமே பெரிது' என்ற உயரிய நோக்கில் உண்ணா நோன்பினைக் கைவிட மறுத்துவிட்டார்.

அந்த வேளையில் சங்கரலிங்கனார் அவர்கள் அண்ணா அவர்களிடம், 'அண்ணா, நீங்களாவது என்னுடைய தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கையை நிறைவேற்றுங்கள்' என்று கேட்டுக் கொண்டார்.

தமிழ் நெஞ்சங்கள் எல்லாம் அன்னாரின் உண்ணாநோன்பினையும், அவரது அசைக்க முடியாத மன உறுதியையும் நாளும் கூடி நின்று கண்டு வந்தனர்.

அவர் உண்ணா நோன்பு இருந்தது ஒருநாளா... இரு நாளா...

76 நாள்கள் ஆயிற்றே! சங்கரலிங்கனாரின் உடல்நிலை மிகுந்த கவலைக்கிடமான நிலையில் 10-10-1956 அன்று காவல்துறையினர் அன்னாரை அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர்.

அப்படி எடுத்துச் சென்றபோதும், சங்கரலிங்கனார் 'மருத்துவ சிகிச்சையை ஏற்க விரும்பவில்லை' என்று மறுத்துவிட்டார், அந்த நாட்டுப்பற்றுக் கொண்ட நாயகர்.

அதே நிலையில் **13-10-1956** ஆம் ஆண்டு கொள்கை மறவர்; தமிழ் நெஞ்சர்; சங்கரலிங்கனார் தமிழ் மூச்சை நிறுத்திக் கொண்டார்.

நமக்கு இன்று தியாகி சங்கரலிங்கமானார்.

அன்னார் உயிர்நீத்த செய்தியறிந்து தமிழ் நெஞ்சமெல்லாம் விம்மித் துடித்தன.

பத்திரிகைகளும், வானொலியும் அன்னாரின் தியாகத்தைப் பற்றி எழுதின; பேசின.

தலைவர்கள் எல்லாம் இரங்கல் செய்திகளை வெளியிட்டுத் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்தனர்.

பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் உண்ணா நோன்பினை மேற்கொண்டனர்.

சென்னை நகர கல்லூரி மாணவர்கள் யாவரும் வேலை நிறுத்தம் செய்து, மாவீரருக்கு வீர வணக்கம் செய்தனர்.

அண்ணா அவர்களிடம் தியாகி சங்கரலிங்கனார் கேட்டுக் கொண்டதற்கிணங்க, தமிழ்நாட்டு ஆட்சிப் பொறுப்பினை ஏற்றதும், 'மதராஸ் இராச்சியம்', 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்பதை நாம் அனைவரும் அறிவோம்!

■

# 4. தென்னகத்து முதல் விடுதலைப் புலி!

*'நீயும் நானும் வாழ்க்கை நதியின் துளிகள்*
*ஒவ்வொரு கணமும் மாற்றம் நிகழும்*
*ஒவ்வொரு கணமும் வாழ்க்கை சுழலும்*
*புதியன தேடி பூமி உருளும்*
*முடிவிலாத் தேடலில் வாழ்க்கை நகரும்...*
*தெற்கிருந்தே ஒரு காவியம் சுமந்து வந்தேன்*
*இதயத்தில் கனல்கிறது அந்தப்புது நெருப்பு*
*இடையினில் ஒளிரும் கூர்வாள் அதனை*
*உறையிலிருந்து மெல்ல உருவினேன்*
*மகிழ்ச்சி நாளையும் கரித்திடச் செய்யும்*
*திப்புவின் தியாகம் மெல்ல ஒலித்தது*
*வீர மண்ணில் முத்தம் பதித்தேன்*
*மானம் இழந்து வாழ்வதே வாழ்வெனில்*
*மரணம் தழுவி முடிவதே உன்னதம்*
*கல்லறை எனது காதில் ஒலித்து.'*

- இது புரட்சிக்கவிஞர் இக்பால், திப்பு சுல்தானுக்கு எழுதிய கண்ணீர் அஞ்சலி.

'மனிதன் தோன்றி' வாழ்ந்து மறைந்த பின்னும் அவர்களது வாழ்வின் நுண்ணிய அதிர்வலைகள் இப்பிரபஞ்சத்தில் என்றும் நிரந்தரமாகத் தங்கி விடுகின்றன' என்ற இன்றைய ஆய்வறிஞர்களின் முடிவின்படி அம்மாவீரன் மறைந்த பின்னும் இம்மண்ணில் தன்மான உணர்வுக்குச் சோதனை

வரும்போதெல்லாம் விடுதலை உணர்வும், சுதந்திர தாகமும், அதிகாரப் போக்கினை எதிர்த்துத் தலைதூக்கும் என்பதே வரலாறாகும்.

'பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில் மைசூர், மதுரை அரசுகள் வலுவிழந்து அந்நியரின் ஓயாத படையெடுப்புகளால் தென்னிந்திய மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியிருந்தபோது, ஹைதர் அலியும், திப்பு சுல்தானும் நாற்பது ஆண்டுகள் மக்களுக்கு நிம்மதியான நல்வாழ்வினை அளித்தனர்.

'காந்தியடிகளுக்கு முன்னதாக மத ஒற்றுமையையும் மதுவிலக்கையும் அமல்படுத்தி, அந்நிய நாட்டாரை இங்கே நிலைக்க விடாமல் தடுத்தது, மக்களுடைய சுதந்திர எழுச்சிக்கும், தேசிய இயக்கத்திற்கும் தூண்டுகோலாய் அமைந்தது' - இப்படி மைசூர் கெஜட் தென்னகத் தீரன் திப்புவின் வீரத்தையும், உயரிய சிந்தனையையும் வெளிச்சப்படுத்தி விரிக்கிறது.

தென்னகத்தின் முதல் இந்திய விடுதலைப்புலி தீரன் திப்பு சுல்தான் கி.பி.1753 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் நாள் நாயக் ஹைதர் அலிக்கும், பகருன்னிஸா விற்கும் மகனாக மைசூரிலுள்ள தேவனஹல்லில் பிறந்தார்.

இளமையிலிருந்தே திப்பு போர்ப் பயிற்சி, குதிரை ஏற்றம், கல்வி முதலியவற்றில் சிறந்து விளங்கினார்.

முகமதிய அறநெறிகளை மவுல்லி அப்துல்லா விடமும், கோவர்த்தன பண்டிதர் அவர்களிடம் தியானம், வழிபாடு, யோகம் போன்ற பயிற்சிகளையும் பெற்றார்.

மேலும் மல் யுத்தம், நீச்சல், குதிரை ஏற்றம், போர்க் கலை போன்றவற்றை காசிகான் என்ற பயிற்சியாளரிடம் பெற்றார்.

இளமையிலேயே அஞ்சாநெஞ்சமும், ஆழ்ந்த அறிவு நுட்பமும் கொண்டிருந்த தீரன் திப்பு, தனது சிறு வயதிலேயே தந்தை ஹைதருடன் இணைந்து பெத்தனூர், வாணியம்பாடி, திருப்பத்தூர் ஆகிய இடங்களில் போரிட்டு, அங்கிருந்த கோட்டைகளை வென்றதிலிருந்தே இவரது போர்த்திறனை நாம் அறிய முடிகிறது.

திப்புவின் அறிவும், ஆற்றலும் போர்க்களத்தோடு மட்டும் நின்று விடவில்லை. கல்வி, கலை போன்ற பல்வேறு நிலைகளிலும் ஒளி வீசி வெளிச்சம் போட்டன. இவரது ஒவ்வொரு படைப்பிலும் புதுமை நிறைந்திருந்த தோடு, பழமையின் சுவடும் பண்பாடும் காக்கப்பட்டன.

தன் தந்தையின் மரணத்திற்குப்பின் 1782 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றார் திப்பு. அவ்வேளையில் ஆங்கிலேயருக்கு எதிரான போர் நடந்து கொண்டிருந்தது.

மத பேதங்களைத் தவிர்த்தார். மரங்களை வளர்க்க நினைத்தார்; மதுவினை ஒழிக்க முனைந்தார்.

உழுதவனுக்கே நிலம் உரிமை என்றார்; விளை நிலங்களை விரிவுபடுத்தினார். நாட்டில் நீர் வளம் பெற அணைகள் கட்டினார்; வெளிநாட்டிலும் வணிகத்தைப் பெருக்கினார்; புதிய போர் இயந்திரங்களைக் கண்டறிந்தார்; வறுமையை ஒழித்தார்; வாழ்ந்த மக்களின் வாழ்வாதாரத்திற்காகவே வாழ்ந்தார்; உயர்ந்தார் என்று கூறலாம்.

'இருநூறு ஆண்டுகள் ஆட்டு மந்தையாக வாழ்வதைவிட, இரண்டு நாள் சீறும் புலியாய் வாழ்வதே சாலச் சிறந்தது' என்று எண்ணி வாழ்ந்தவர் மாவீரன் திப்பு.

'ஆங்கில ஏகாதிபத்தியத்தைப் பூண்டோடு அழித்து விட்டுத்தான் பஞ்சணையில் படுப்பேன்; ஆட்சிக் கட்டிலில் அமர்வேன்!' என்று உறுதிமொழி எடுத்து தன்மானமும், மண் மானமும் காக்க இறுதி மூச்சு வரை பாடுபட்ட சுத்த வீரன் திப்பு சுல்தான்.

இவர், ஆட்சிக்கட்டில் ஏறியதும் மக்களுக்கு நன்மை பயக்கும் பல்வேறு திட்டங்களைத் தீட்டினார்.

திப்பு அரியணை ஏறி ஆட்சி செய்தது 16 ஆண்டுகள். இவ்வாண்டுகளில் பெரும்பகுதியை அவர் போர்க் களத்தில் ஆங்கிலேயர்களை எதிர்த்து நிற்பதிலேயே கழிந்தது.

இருந்தாலும் பீரங்கி அதிர்வுகளுக்கும், வாள்களின் ஒலிகளுக்கும் இடையே தனது மக்கள் முன்னேற்றத்திற்காகவும், நலத்திற்காகவும் பல சீர்திருத்தங்களையும் திப்பு சிந்திக்கவே செய்தார்.

விவசாயம் நாட்டின் உயிர்நாடி என்பதை உணர்ந்ததால், உழுபவனுக்கே நிலம் என்ற புரட்சிகரத் திட்டத்தை இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே, எந்தவொரு அரசனும் செய்ய முடியாத ஒன்றை செய்து முடித்த பெருமைக் குரிய அரசன் திப்பு.

விளை நிலங்களாக்குவோருக்கு தரிசு நிலங்கள் உரிமை என்றார். வரி வசூலில் இடைத்தரகர்களை ஒழித்தார். விவசாயிகளின் தேவைகளுக்கு ஏற்ப உடனடியாக கடன் வழங்க உத்தரவிட்டார்.

உழைக்காத மேட்டுக்குடியினர் நிலங்களின் உடைமையாளர்களாக இருப்பதைத் தவிர்த்து, உழைப்பவர்க்கு நிலம் கிடைக்க... விளைவிப் போர்க்கே நிலம் என உத்தரவே பிறப்பித்தார்.

நீர் வளம் பெருக, குளங்களை வெட்டினார். வாய்க்கால்கள், அணைகள் வெட்டப்பட்டன; கட்டப் பட்டன.

புதிய ஒட்டுரக மாமரங்கள் வழங்கப்பட்டன. கரும்பு, மல்பரி போன்றவை பயிரிடுவதற்கு ஊக்கமளிக்கப் பட்டது.

வறுமையும், பஞ்சமும் நமது அறியாமை, சோம்பல், ஊழல் இவற்றின் விளைவே என்றார்.

அரசு கட்டும் அணையின் நீரால் தரிசு நிலங்களை விளைநிலமாக்குவோருக்கு நிலம் சொந்தம் என்றார்.

ஒரு குத்தகைதாரர் ஒரு நிலத்தை பதினைந்து ஆண்டுகள் தொடர்ந்து விவசாயம் செய்திருந்தால், குத்தகைப் பணம் தவறாது கொடுத்திருந்தால், அவர்களை எக்காரணம் கொண்டும் வெளியேற்றக் கூடாது என்று சட்டம் போட்டார்.

விளைச்சல் தவறும்போது, வறட்சி ஏற்படும் போது வரி செலுத்த வேண்டாம் என்று அறிவித்தார்.

தேவைப்படும் விவசாயிகளுக்கு கலப்பைகள் வழங்கவும், நிலத்தைப் பண்படுத்தும் கருவிகள் வாங்கவும் முன்பணம் வழங்கவும் கட்டளையிட்டார்.

கரும்பு, வெற்றிலை, தென்னை வளர்ப்போருக்கு வரி விலக்களித்ததோடு, ஊக்கமும் கொடுத்தார்.

ஒவ்வொரு கிராமமும் 200 மாங்கன்றுகள் நட்டு வளர்ப்பது அவசியம் என்றார்.

உள்நாட்டுத் தேவைக்கும், ஏற்றுமதிக்குமான மரங்கள் தேக்கு, சந்தனம் போன்றவற்றை வளர்க்க ஏற்பாடு செய்தார்.

சிறு குற்றம் செய்பவர்களுக்கு தண்டத் தொகை விதிப்பதைவிடவும், இரண்டு மாமரங்களையும், இரண்டு பாதாம் மரங்களையும் அவர்கள் கிராமத்தில் நட்டு, மூன்று அடி உயரம் வளரும் வரை பாதுகாக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்.

திப்புவின் செயல் திறன் விவசாயத்தில் மட்டும்தானா? இல்லை. மதக்கோட்பாட்டிலும் அவரது சீரிய சிந்தனையும், செயல்பாடும் வியக்க வைக்கின்றன.

திப்பு பயங்கரமான மத வெறியர். தென்னகத்திலிருந்து பல இந்துக்கோயில்கள் அவரது படையெடுப்பில் பாழ்பட்டன. கோயில்களிலிருந்து நகைகளும், பொற்காசுகளும் களவாடப்பட்டன. மக்களை அடிமைப்படுத்தி பலரை மதம் மாற்றம் கொள்ளச் செய்தார் என்று ஆங்கிலேயரால் கட்டுக்கதைகள் புனையப்பட்டன. அவரது வரலாற்று நூல்களிலும் அவைகளைப் பதிவு செய்து வைத்தனர்.

உண்மையில் திப்பு அப்படிப்பட்டவரல்லர் என்பதை வரலாறு இங்கே மெய்ப்பிக்கின்றது.

திப்பு தனது மதத்தின் மீது பற்று கொண்டவராக, ஒரு சிறந்த முஸ்லீமாக வாழ்ந்தார் என்பதில் கருத்து வேறுபாடில்லை.

எல்லாச் சமயங்களும் நல்ல சமயங்களே என்ற நன்னம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது என்பதே திப்புவின் சமயக் கொள்கை.

அவரது ஆட்சிக்குட்பட்ட ஊர்களில் எல்லாம் ஒரு மசூதியும், இசுலாமிய மார்க்கப் பள்ளியும் நிறுவி, தனது மத வளர்ச்சிக்கும், சீரான செயல்பாட்டிற்கும் வகை செய்த திப்பு, இந்துக் கோயில்களுக்கும், மடங்களுக்கும் அளித்த நிலங்களும், நன்கொடைகளும் ஏராளம். இந்துக் கோயில்களுக்கும், மடங்களுக்கும் மட்டும் 2,13,959 வராகன் அளித்திருக்கிறார் என்பதில் இருந்தே அவரது நல்ல உள்ளம் புரிகிறதே!

ஒவ்வொரு மதத்தவரும் தங்கள் மத நெறிகளைப் பின்பற்றி, மற்ற மதத் தலைவர்களையும், மதத்தினரையும் மதித்து நடந்து கொள்ள வேண்டும் என்பதே திப்புவின் உயிர்மூச்சான கொள்கையாக இருந்திருக்கிறது.

பிற மதங்களையும் மதித்தார் என்பதற்கு திப்புவின் வரலாற்றில் பல சான்றுகள் உள்ளன.

திப்புவால் சீர்பெற்ற திருக்கோயில்களில் முதன்மை யானது சீரங்கநாதர் கோயிலாகும். காலம் தவறாமல் இக்கோயிலில் பூஜை நடப்பதற்கு திப்பு எல்லாவித ஏற்பாடுகளையும் செய்தார்.

இக்கோயிலுக்கு பிரசாதம் வைக்கும் வெள்ளிப் பாத்திரங்கள் ஏழும், பல தீபத்தட்டுகளும், ஊதுபத்தி நிலைப்புத் தண்டுகளும் அவரால் கோயிலுக்கு வழங்கப் பட்டன. இவை இக்கோவில்களில் இன்றும் உள்ளன.

மைசூருக்கு மேற்கே மேல்கோட்டை என்னும் வைணவத் தலம் உள்ளது. அங்கு நரசிம்மசுவாமி கோயிலும், நாராயணசுவாமி கோயிலும் குறிப்பிடத் தக்கதாகும்.

இக்கோயில்களுக்கு திப்பு வழங்கிய நன் கொடைகள்: நரசிம்மர் கோயிலுக்கு பெரிய தோல் முரசும், நாராயண சுவாமி கோயிலுக்கு பல பெரிய வெள்ளித் தாம்பாளங்களும், தங்கத்தாலும், வெள்ளியாலும் செய்யப்பட்ட ஆராதனைப் பாத்திரங் களும், 12 யானைகளும் பரிசாக அளித்துள்ளார்.

'நஞ்சன் கூடு' என்பது ஒரு சிவத்தலமாகும். இத்தலத்தின்கண் திருநஞ்சுண்டேசுவரர் கோயிலும், திருக்காந்தேஸ்வரர் கோயிலும் உள்ளன.

திருநஞ்சுண்டேசுவரர் கோயிலில் பார்வதி சிலைக்கு இடப்புறத்திலுள்ள மரகதலிங்கம் பாதுஷாவின் அரசு வழங்கியதால் அதற்கு 'பாதுஷா லிங்கம்' என்று பெயர்.

திருக்காந்தேஸ்வரர் கோயிலுக்கு ஓர் ஆராதனைத் தட்டை வழங்கியுள்ளார். இத்தட்டின் சிறப்பு, அத்தட்டின் அடிப்பகுதிக் கால்கள் நவரத்தினங்களால் செய்யப் பட்டவை. மேலும், அக்கோயிலின் சுவாமியின் கழுத்திலுள்ள பொன்னாகரம், பச்சை மரகதங்கள் பதிக்கப்பட்டவையாகும்.

இப்படி கோயில்களுக்கு மட்டுமல்ல, மடங் களுக்கும் பல நன்கொடைகளை வழங்கியுள்ளார் திப்பு.

சிக்மகளூர் மாவட்டத்திலுள்ள சிருங்கேரி என்னும் ஊரில் சாரதா பீடம் அமைந்துள்ளது.

மைசூர் போரின் பொழுது, பரசுராம்பாகு தலைமையில் வந்த மராட்டிய பெரும்படை, சிருங்கேரியை முற்றுகையிட்டு அந்த மடத்தைக் கொள்ளையிட்டுச் சென்றது.

கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களின் மதிப்பு ரூ.60,00,000 ஆகும். சாரதாதேவியின் பொற்சிலையையும் அவர்கள் தோண்டி எடுத்துப் போய் விட்டார்கள்.

இப்போரால் மனமுடைந்து போன சிருங்கேரி சுவாமிகள், திப்புவுக்கு ஒரு கடிதம் எழுதினார் பாதுகாப்பு வேண்டி.

அம்மடலுக்கு, அவருக்கு நம்பிக்கையூட்டும் அளவில் மறு மடல் எழுதியதோடு, அம்மடத்திற்கு நிறைந்த பொருளுதவியும், ஒரு பெரிய வெற்றிப் பல்லக்கும், சுவாமிகளுக்கு நகைகளும், ஆடை அணிமணி களையும் அள்ளி வழங்கியதோடு, மடம் தொடர்ந்து செயல்பட பல ஊர்களை இனாமாக அளித்துள்ளார். சிருங்கேரி ஆச்சாரியார் மீது உயர்ந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார், திப்பு.

காஞ்சிபுரத்திலுள்ள கோயில் ஒன்றை கட்டி முடிக்க 10,000 பொன் வழங்கியுள்ளார்.

புதிய கோயில்கள் கட்டுவதற்கு மட்டும் அவர் உதவவில்லை. கோயில்களைப் புதுப்பிக்கவும், கோயில் குளங்களைப் புதுப்பிக்கவும், ஆயிரம் ஆயிரமாக அள்ளிக் கொடுத்து உதவியிருக்கிறார்.

இப்படி இந்து மதக் கோயில்களுக்கு மட்டும் அவர் முன்னின்று உதவவில்லை. கிறித்துவ மதக் கோயில்களுக்கும் உதவியிருக்கிறார்.

கடப்பை மாவட்டம் புலி வெண்டலா என்ற ஊரில் இருந்த தேவாலயத்தைப் புதுப்பிக்க பொருளுதவி செய்து இருக்கிறார், திப்பு.

கேரளத்திலுள்ள குருவாயூர் ஸ்ரீகிருஷ்ணன் கோயிலுக்கும் அவர் உதவிய செய்தியை அறிய முடிகிறது.

ஆன்மீக சிந்தனையில் மட்டுமல்ல, அரசியல் சிந்தனையிலும், செயல்பாடுகளிலும்கூட புதுமையை - புரட்சியைச் செய்திருக்கிறார், திப்பு.

'இறைவன் அரசு' என்று தன் ஆட்சியை கருதி வந்தார், திப்பு. தனது படையைக்கூட 'புனிதப்படை' என்றே குறிப்பிட்டுள்ளார் திப்பு.

நிதித்துறை, இராணுவத்துறை, சட்டத்துறை, வணிகத்துறை, கடல்துறை, நிதிக் காப்பகம் மற்றும் நாணயத்துறை என ஏழு துறைகளை நிறுவி ஆட்சி செய்தார், திப்பு.

கடல் வளத்துறையைப் பற்றி அந்தக் காலத்தில் ஆண்டு வந்த எந்த அரசரும் சிந்திக்காதபோது, அக்காலத்தில் கடல் கடந்து வந்த அன்னியரின் ஆதிக்கத்தை அழிக்க, கடல் வலிமையைப் பெருக்க, தனித் துறையையே திப்பு அமைத்தது அவரது தொலைநோக்கு சிந்தனையை நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

உள்ளாட்சித்துறை நல்ல முறையில் செயல்பட, ஒவ்வொரு பகுதிக்கும் ஆட்சித்தலைவர், இராணுவத் தலைவர், கணக்குத் தலைவர் என தனித்தனியே அதிகாரிகளை நியமித்தார், திப்பு.

ஒவ்வொரு குடிமகனும் நேரடியாக அவரிடம் மனு கொடுக்கலாம் என்ற வாய்ப்பினையும் ஏற்படுத்தினார்.

அதிகாரிகள் தங்கள் ஆலோசனைகளை சுதந்திர மாக சொல்லவும், விவாதிக்கவும் வாய்ப்பளித்தார்.

திப்புவின் வீரத்தையும், ஆட்சித் திறத்தையும் கண்டு மிரண்டு போனார்கள் வெள்ளையர்கள். அவர்களை மேலும் மிரட்டுவதற்காக துப்பாக்கி, பீரங்கி, ஆவணங்கள், அரியணை என எல்லா வற்றிலும் புலி சின்னத்தைப் பொறித்தார். படை வீரர்கள் அணிந்த ஆடைகள்கூட புலி வரியுடன் அமைத்தார்.

விலங்குகள் யாவும் மனிதரைப் போல இறைவனால் படைக்கப்பட்டவையே. அவைகளைக் காப்பது கடமை என்று எண்ணினார்.

விலங்குகளுக்கென்று பாதுகாப்பகங்கள் பலவும் அமைத்தார். சிலவகை விலங்குகளைக் கொல்லவும் கூடாதென்று சட்டமே இயற்றினார்.

இன்று நாட்டில் கழிவு நீரால் ஆங்காங்கே கலவரங்கள் ஏற்படுவதைக் கண்டு வேதனைப் படுகிறோம். பல நோய்களுக்கு மக்கள் ஆட் படுவதையும் கண்ணெதிரே காண்கிறோம்.

தான், காவிரிக் கரையின் மீது அமைத்திருந்த ஆயுதத் தொழிற்சாலை ஒன்றின் கந்தகக் கழிவுகள், ஆற்று மீன்களை அழித்து ஒழித்துவிடும் என்பதால், அதை மாற்றி நிறுவச் செய்தார், திப்பு.

பிற உயிர்கள் மீது திப்பு கொண்டிருந்த அன்பையும், கருணையையும் இதிலிருந்து காண முடிகிறதல்லவா?

சிறந்த சாலைகளை அமைத்தார். படைகளின் விரைவான முன்னேற்றத்திற்கும், வியாபார முன்னேற்றத்திற்கும் அவை பெரிதும் உதவின. பத்து மைல்களுக்கு ஓர் ஓய்வு விடுதியையும் அமைத்தார், திப்பு.

பட்டு உற்பத்தியைப் பெருக்க, பிரெஞ்சு விற்பனையாளர்களை அழைத்து பயிற்சி அளித்தார்.

புதிய தொழில்களை, தொழிற்கூடங்களை உருவாக்கி னால், நாட்டில் வேலை வாய்ப்பினை பெருக்கலாம் என்று எண்ணி செயல்பட்டார் திப்பு.

பல நாடுகளோடு வணிகத் தொடர்பினை ஏற்படுத்தினார். அரசிற்கு நிதிப் பற்றாக்குறை ஏற்பட்ட காலங்களில்கூட, பொதுமக்கள் துயரப்படக்கூடாது என்று கருதி செயல்பட்டார்.

திப்புவின் ஆட்சித் திறனால், எந்தவித குறையும் இன்றி மக்கள் நலமாகவும், வளமாகவும் வாழ்ந்து வந்ததைக் கண்டு பிரிட்டிஷ் ஆட்சியாளர்களே அசந்து போய் விட்டனர்; ஆடிப்போய்விட்டனர்.

மக்களை சீரழிவிலிருந்து காக்கவும், நல்வாழ்வைக் கூட்டவும் கருத்தில் கொண்ட திப்பு, மதுவைத் தன் ஆட்சியில் இருந்து அகற்ற பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்தார்.

‘மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, போதைப் பொருள்களை ஒழிக்க முன்வந்த ஒரே மன்னன் திப்பு’ என்று போற்றுகிறார் எட்வர்ட் தாம்சன்.

'1989இல் தரியா தவுலத் உருவாக்கத்தின்போது முழு மதுவிலக்கு எனது இதயம் கவர்ந்த இலட்சியம், மக்களின் பொருளாதாரம், ஆன்மிக நெறி, இளையோரின் எதிர்காலம் இவற்றை நாம் மனதில் கொள்ள வேண்டும். கிராமங்களிலுள்ள மத மடங்களில் போதைப் பொருள்கள் வழங்கப்படுகிறது. பஃகிர்கள் தங்கள் மடங்களை விட்டு வெளியே இத்தகைய செயல்களில் ஈடுபடுவதைக் கடுமையாக எச்சரியுங்கள். இதை மீறுபவர்களை நாடு கடத்துங்கள்...' என்றார், திப்பு சுல்தான்.

நல்ல இஸ்லாமியரான திப்பு சுல்தான், மதுவிலும் மங்கையரிலும் மூழ்கிப் போகாத நல்ல மன்னராக வாழ்ந்தார்.

'வருமான இழப்புக்களைப் பற்றிக் கவலைப் படாது பூரண மதுவிலக்கை அமுலாக்கிய திப்பு, ஓர் உன்னதமான மன்னர்' - இப்படி புகழ்ந்து பேசியவர் காந்தியடிகள்தான்.

மதுவை ஒழிக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்த திப்பு, நல்ல முறையில் கல்வியையும் கற்றிருந்தார். ஓய்வு நேரத்திலெல்லாம் படிப்பதும், படித்த நூல்களை பாதுகாப்பதிலும் சிறந்தவராகத் திகழ்ந்தார்.

மத நூல்கள் மட்டுமல்ல, நீதி நூல்கள், தத்துவ நூல்கள், அறிவியல் நூல்கள், கவிதை நூல்கள் என்று பல்துறை சார்ந்த 2000 நூல்களைக் கொண்ட ஒரு நூல் நிலையமே அமைத்திருந்தார்.

நாட்டு மக்களும் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்று விரும்பினார். அதனால், திப்பு தன்

ஆட்சியின் கீழ், நான்கு மைல்களுக்கு ஒரு பள்ளி என அமைத்து கல்வி தர முன்வந்தார்.

'தனது பிள்ளைகளைப் படிக்க வைக்காத தந்தை, தன் கடமையை மறந்தவன் ஆகிறான்...' என்பது அவரது கட்டளையாக இருந்தது.

பள்ளிகளில் பார்சி மொழி கற்பிக்கப்பட்டதோடு, மதக் கல்விக்கும் வழி வகுத்திருந்தார்.

திப்பு உருது, பாரசீகம், அராபிக், கன்னடம், ஆங்கிலம் போன்ற மொழிகளை நன்கு அறிந்திருந்தார்.

இவர் தம் அறிவுத் தேடலுக்காக அயல் நாடுகளில் இருந்தும் நூல்களை வரவழைத்துப் படித்தார்.

இப்படி இந்தியாவின் முன்னேற்றத்திற்காக பல வழிகளில் பாடுபட்ட திப்பு, இந்திய விடுதலைக்கு வித்திட்ட வீரப்புலி திப்பு சுல்தான், சீரங்கப் பட்டினத்தின் கோட்டைக்குள் எதிரிகளோடு போரிட்டுக் கொண்டிருக்கும் போது 'வாட்டர் கேட்' என்னும் கிழக்குக் கோட்டைக் கதவின் அருகே வீர மரணம் எய்தினார்.

1799 ஆம் அண்டு மே மாதம் 4 ஆம் நாள் அந்த சுதந்திர தியாக புருஷர் மனித வரலாற்றில் வீரமாய், ஈரமாய் தன் பெயரை இணைத்துக் கொண்டார்!

■

## 5. அன்பு என்றால் அன்னை!

அவர், தன் உடன்பிறவா சகோதரிகளுடன் ஒரு நாள் மலைவாழ் மக்கள் வாழும் பகுதிக்குச் சென்றார்.

அந்த அடர் காட்டில் எங்காவது மனிதர்கள் தென்படுகிறார்களா, குடிசைகள் கண்ணில் தட்டுப் படுகிறதா என்று காலை முதல் மாலை வரை தேடிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது, தூரத்தில் ஒரு குடிசை இருப்பது அவர்கள் கண்ணிற்குப் பட்டது.

ஆவலோடு அக்குடிசையை நோக்கி நடந்தார்கள். குடிசையைக் கண்டார்கள்... நைந்து கிழிந்த பழைய துணியைப் போல் கூரைகள் சிதைந்து கிடந்தன.

ஒருவர் நேராக அக்குடிசைக்குள் நுழைந்திட முடியாது. குனிந்து சென்றால் மட்டுமே அக் குடிசைக்குள் நுழைந்திட முடியும்.

சென்றவர்கள் அக்குடிசைக்குள் குனிந்து நுழைந் தார்கள். சென்ற 'அவர்' தனது கருணை விழிகளை உருட்டிப் பார்த்தார்.

'அவர்' பார்வையில் ஒரு முதியவர் படுத்துக் கிடப்பது மங்கலான இருட்டில் தெரிந்தது. குப்பைகளோ மூலைக்கு மூலை குவிந்து கிடந்தன. அதன் துர் நாற்றம் 'அவர்' மூக்கை அடைத்தது.

படுத்திருந்த பழுத்த முதியவரை நெருங்கி, ''ஐயா, நான் தங்களின் இந்த வீட்டைத் தூய்மை செய்யட்டுமா?'' என்று கேட்டார்.

அதைக் கேட்டதும் அந்த முதியவர் கோபத்தோடு, ''ஒன்றும் வேண்டாம்... நீ யார், அதைச் செய்ய...? இங்கே எல்லாமும் ஒழுங்காகத்தான் இருக்கிறது. உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ...'' என்றார்.

அன்பும் கருணையும் கொண்ட 'அவர்' உள்ளம் சும்மா இருந்துவிடுமா என்ன? மீண்டும் வீட்டைத் தூய்மை செய்ய கேட்டார்.

பெரியவர் மீண்டும் வேண்டாம் என்ற அதே பதிலைச் சொன்னார்.

விட்டுவிடுவாரா அவர்...? அன்பால் எதையும் சாதிக்க முடியும் என்பதை அறிந்தவராயிற்றே...

மீண்டும் முதியவரிடம் கனிவோடு பேசினார். பிறகு என்ன...?

பெரியவர் ஒரு வழியாக ஒப்புக் கொள்ள, சிறிது நேரத்தில் குடிசை சுத்தமானது.

அப்படிச் சுத்தம் செய்யும்போது, ஒரு மூலையில் தூசி படிந்து, அழுக்கான நிலையில் ஓர் அழகிய விளக்கொன்று இருந்தது.

அது அவரின் விழிகளில் தட்டுப்பட்டது. அதை கையிலெடுத்த 'அவர்', ''ஐயா, இந்த விளக்கை நீங்கள் ஏற்றுவதே இல்லையா?'' என்று கேட்டார்.

''நான் இந்த விளக்கை ஏன் ஏற்ற வேண்டும்? இங்கே யார் வருகிறார்கள்? என்னைப் பார்க்க யாரும் வருவதில்லை. அதனால், விளக்கை ஏற்ற வேண்டும் என்ற எண்ணம் எனக்கு வந்ததில்லை.''

அதற்கு அவர் கேட்டார்: ''என் இந்த சகோதரிகள் இங்கே வந்தால் விளக்கை ஏற்றுவீர்களா...?'' என்று.

''அப்படி யாரேனும் வந்தால் ஏற்றுவேன்...''

அடுத்த நாள் முதல் 'அவரி'ன் சகோதரிகள் அந்த முதியவரின் குடிசையை நோக்கி வந்தார்கள்.

அன்போடு அவரிடம் பேசினார்கள். அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார்கள். அவர்களின் தலைவி கூறியதுபோல் மாலையில் விளக்கை ஏற்றி வைத்தார்கள்.

அந்த அன்பின் பணிவிடையால், அந்த முதியவர் இரண்டு ஆண்டுகள் நலமாக உயிர் வாழ்ந்தார்.

அம்முதியவர், தான் இறப்பதற்கு முன் சகோதரி களைப் பார்த்து சொன்ன நன்றி வார்த்தைகள்...

''சகோதரிகளே! நீங்கள் போய் எனது நண்பரிடம் (உங்கள் தலைவியிடம்) நான் சொன்னதாகச் சொல்லுங்கள். ஒருநாள் அவர்கள் என் வாழ்க்கையில் ஏற்றிவைத்த விளக்கு இன்றும் அணையாமல் எரிந்து கொண்டிருக்கிறது என்று...''

'அவர்' ஏற்றிய விளக்கு இப்படி உலகில் எத்தனை எத்தனையோ...?

யாரைப்பற்றி அந்தப் பெரியவர் இப்படிச் சொன்னார்...?

அந்தப் பெரியவர் சொன்ன 'அவரை'ப் பற்றிய இன்னொரு செய்தியை அறிந்தபின் அறிந்து கொள்ள லாமே...

ஒரு முறை 'அவர்' நண்பர்களோடும், சகோதரி களோடும் வண்டியில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது, ஓரிடத்தில் வண்டியை 'அவர்' நிறுத்தச் சொன்னார். வண்டி நின்றது.

வண்டி நின்ற இடமோ ஒரு மருத்துவமனையின் முன்பு. அங்கே ஒரு பெண் நோயால் மயக்கமடைந்து கிடந்தாள்.

அந்தப் பெண் உயிருக்குப் போராடிக் கொண்டிருக் கிறாள் என்பதை அறிந்தார்.

அவளது உடலெங்கும் பெரிய பெரிய புண்கள். அந்தப் புண்களிலிருந்து ஒரு புறம் சீழும், ஒரு புறம் இரத்தமும் வழிந்து கொண்டிருந்தன. காலில் இருந்த புண்ணிலோ எலிகள் சுரண்டிக் கொண்டிருந்தன.

இப்படி வீதியிலே விலாசமின்றிக் கிடந்த அந்தப் பெண்ணை, 'அவர்' மட்டும்தான் பார்த்தாரா என்ன...?

அவ்வழியே நூற்றுக்கணக்கானோர் நடந்து சென்றார்கள். பலர் அந்த நோயாளியைப் பார்த்தும் சென்றார்கள்; ஆனால், யாரும் உதவ முன்வரவில்லை.

ஆனால், 'அவரோ' அந்தப் பெண் நோயாளி யிடம் சென்று அருகில் அமர்ந்து, அவரைச் சுரண்டிக் கொண்டிருந்த எலிகளை விரட்டிவிட்டு, ஈக்களையும் விரட்ட தன் இரு கைகளையும் விசிறிகளாக ஆக்கி விசிறினார்.

இந்த நிலையில் சிறிது நேரத்திலேயே அந்தப் பெண் நோயாளி மரித்துப் போனார்.

அந்த நோயாளியின் இறப்பிற்காக 'அவர்' அங்கேயே ஜெபம் செய்துவிட்டு, அந்த இறந்த பெண்ணைச் சுமந்துகொண்டு தன் இல்லத்திற்குச் சென்றார்.

உடலெங்கும் புண்ணாகவும், துர்நாற்றமும் கொண்ட அந்தப் பிணத்தைக் கொண்டு வந்த 'அவரை'ப் பார்த்து, விடுதியில் தொண்டு செய்யும் சகோதரிகள் கேட்டார்கள்...

"ஏன் இந்தப் பிணத்தைச் சுமந்து வருகிறீர்கள்...?" என்று.

அதற்கு 'அவர்', "இந்த நோயாளி அழகாக, அமைதியாக வாழத்தான் கொடுத்து வைக்கவில்லை... அவர் அமைதியாக இறப்பதற்காகவாவது நாம் உதவி செய்ய வேண்டாமா...? அதற்காகத்தான் இந்தப் பெண்ணை இங்கே கொண்டு வந்தேன்..." என்றார்.

அதைக்கேட்ட அவர்கள் திகைத்து நின்றார்கள். அப்படி திகைத்து நிற்கச் செய்த 'அவர்' யார்?

இப்படி ஆதரவற்ற முதியவருக்கும், அனாதைப் பிணங்களுக்கும் இந்த நாட்டில் ஆதரவாக அன்பு காட்டியவர் - கருணைக் கரம் நீட்டியவர் - அந்த 'அவர்' அன்னை தெரசாதான்...!

ஃஃஃ

**அ**ன்னை தெரசா, யூகோஸ்லாவியாவில் 26.08.1910 இல் பிறந்தார். தாயின் பெயர் டிரனாஃபில் பெர்லாய் என்பது. தந்தை பெயர் நிக்கோலா.

அன்னையோடு பிறந்தவர்கள் இருவர். இவர்தான் கடைசிப்பிள்ளை. பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் ஆக்னஸ் கோன்சா பொஜாஹியு.

அன்னையின் தந்தை அல்பேனியா நாட்டைச் சேர்ந்தவர். இவர், கட்டடக் கலைஞராகவும், உணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளராகவும் இருந்து வந்தார்.

பல நாடுகளுக்குச் செல்ல வேண்டிய தொழில் செய்து வந்ததால், பல மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவராக இருந்தார். நல்ல செல்வச் செழிப்போடு வாழ்ந்தார்.

அன்னை தன் ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்தார். பின் தாயின் அரவணைப்பில் வளர்ந்தார்.

அன்னையின் பெயரிலுள்ள 'கோன்சா' என்னும் அல்பேனியச் சொல்லிற்கு, அரும்பு என்பது பொருள். இந்த பொருள்படவே கோன்சா என்று அன்னையை வீட்டாரும், தோழிகளும் அழைத்து வந்தனர்.

அன்னை, ஜிம்மேழியா என்ற அரசுப் பள்ளியில் கல்வி கற்கத் தொடங்கினார்.

இளமையிலேயே கல்வி கற்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தார். 'கல்விச் செல்வம் இல்லை யென்றால் உலகில் வேறு எந்தச் செல்வத்தையும் அடைய முடியாது... வாழ்க்கையில் எண்ணியதை அடையவும், சொந்த நாட்டில் மட்டுமல்ல, எந்த நாட்டிற்குச் சென்றாலும் கல்வியின் வழியேதான் உயர்வும், பதவியும் கிட்டும்' என்று எண்ணினார்.

கல்வி பயிலும் காலத்திலேயே பொதுத் தொண்டில் அவர் மனம் ஈடுபட்டது. ஏழை, எளியவர் களுக்கும், ஆதரவற்றவர்களுக்கும், நோயினருக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்று நாளும் பொழுதும் எண்ணினார்.

அதனாலேயே, சோசாலிட்டி என்ற தொண்டு நிறுவனத்தில் அங்கத்தினராக தன் பெயரைப் பதிவு செய்து கொண்டார்.

இந்தத் தொண்டு நிறுவனம் கிறித்துவ மதத்தைப் பரப்பி ஏழை எளியவருக்கு தொண்டு புரிந்து வரும் அமைப்பாகும்.

இவ்வமைப்பில் சேர்ந்த அன்னை, ஏசு போதித்த நெறிமுறைகளை நன்கு கற்கத் தொடங்கினார். அதன் வழியே நடக்கவும் தொடங்கினார்.

‘இவ்வுலகில் செல்வங்களைச் சேர்த்து வைக்காதீர்கள். அவைகளை கள்வர்கள் திருடிச் செல்லலாம். பூச்சி புழுக்களாலும், பருவ நிலைகளாலும் அழிந்து போகலாம்.’

‘வானத்தில் சுதந்திரமாகப் பறந்து செல்லும் பறவைகளைப் பாருங்கள். அவை விதை விதைப்பதும் இல்லை; அறுப்பதும் இல்லை. களஞ்சியங்களில் சேமித்து வைப்பதுமில்லை. அவற்றிற்கு பரமபிதா எந்தக் குறையும் வைப்பதுமில்லை.’

‘இரக்கம் உள்ளவர்கள் நற்பேறு பெற்றவர்கள். இதயத்தில் தூய்மை உள்ளவர்கள்; நற்பேறு பெற்றவர்கள்.’

‘நோய் உள்ளவர்களைக் குணப்படுத்துங்கள். தொழு நோயாளிகளைக் கழுவித் தூய்மைப் படுத்துங்கள்.’

ஏசுவின் மேற்சொன்ன போதனைகள், இளம் உள்ளத்தில் பசுமரத்தாணியாய் பதிவாயின.

அன்னை, தனது பன்னிரெண்டாவது வயதிலேயே சமூக சேவையில் ஈடுபடத் தொடங்கினார். அப்போது;

பிரிட்டிஷாரின் பிடியில் அகப்பட்டு அடிமைகளாய், வறுமையோடும், கல்வி அறியா நிலையிலும், அறியாமை யோடும், நோய் முதலிய துன்பங்களோடு

அவதிப்படும் இந்தியர்களுக்கு உதவும் நோக்கில் யுகோஸ்லாவியா நாட்டிலிருந்து கிறித்துவ சமயத் தொண்டர் குழுக்கள் இந்தியாவிற்குப் புறப்பட்டுச் சென்றன. சென்ற குழு கொல்கத்தாவை அடைந்தது.

இந்தியாவிற்குத் தொண்டு செய்ய வந்த குழு, இந்தியாவின் நிலையைப்பற்றியும், மக்கள் அறியாமை யாலும், சுகாதாரமற்ற நிலையால் நோயோடு வறுமைப் பிடியில் அவதிப்படுவதையும் யுகோஸ் லாவியாவில் உள்ள தலைமையகத்திற்கு அடிக்கடி கடிதம் வழியாக தெரிவித்துக் கொண்டிருந்தனர்.

அப்படி வரும் கடிதங்களை சோசாலிட்டி சபையில், உறுப்பினர்களுக்கெல்லாம் படித்துக் காட்டுவார்கள்.

அச்சபையில் உறுப்பினராக இருந்த அன்னையும் அச்செய்திகளைக் கேட்டு வந்தார்.

செய்திகளை கேட்கக் கேட்க, இந்தியாவில் மக்கள் துன்பப்படும் செய்தியைக் கேட்டு அவர் மனம் துடிக்கத் தொடங்கியது. துன்பப்படும் மக்களுக்கு உடனே சென்று தொண்டு செய்ய வேண்டும் என்று எண்ணினார்.

இந்த எண்ணம், நாளுக்கு நாள் அவருள்ளத்தில் பெருகலாயிற்று.

ஒருநாள், தம் சமய குருவான பாதிரியாரைச் சந்தித்து இந்தியாவுக்குச் சென்று மக்களுக்குத் தொண்டு செய்ய விரும்புவதைக் கூறினார். அதற்காக 'கன்னி யாஸ்திரியாக' மாற அனுமதி அளிக்குமாறு வேண்டினார்.

அன்னை, ஏசு மீது கொண்ட நம்பிக்கையையும், அவரது தொண்டுள்ளத்தையும் அறிந்திருந்த பாதிரியார்,

''மகளே! அக்னஸ் உன்னுடைய அன்பும், இந்திய மக்களுக்கு தொண்டு செய்ய வேண்டும் என்ற உனது எண்ணமும் நியாயமானதுதான். ஏதோ ஓர் உந்துதலில் அவசரப்பட்டு, முடிவெடுத்துப் பின் துன்பப்படக் கூடாது. நன்றாக ஒரு முடிவுக்கு வா. கர்த்தர் உனக்கு அருள்புரிவாராக...!'' என்று பதினைந்து வயதேயான, அன்னைக்கு ஆசி கூறி அனுப்பினார்.

அன்னைக்கு மதகுருவின் வார்த்தைகள் ஆறுதலாக இருந்தது. இருந்தாலும், எப்போது இந்தியா செல்ல காலம் வரும் என்ற ஏக்கம் மட்டும் இதயத்தில் அலையலையாய் எழுந்து கொண்டிருந்தது.

இந்த வேளையில் கொல்கத்தாவிற்கு தொண்டு செய்யச் சென்றிருந்த சில கன்னித் துறவிகள் சபைக்குத் திரும்பி வந்தனர்.

அவர்கள் வரவை அறிந்து, அவர்களைச் சந்திக்கச் சென்றபோது, அவர்கள் சொன்ன செய்திகளும், செல்வதற்கான வழிமுறைகளையும் அறிந்தார்; மகிழ்ந்தார்.

அவர்கள் சொன்னதிலிருந்து அன்னை அறிந்து கொண்டது இதுதான்...

அவர்கள் சார்ந்த மடத்தில் சேர்ந்தால், இந்தியாவிற்குச் செல்லலாம்...

இந்த வார்த்தைகள் அன்னையின் இதயத்தில் அமுதமாய் இனித்தது. உடனே அந்தக் கன்னியர் மடத்தில் மகிழ்வோடு சேர்ந்தார்.

அதைக் கேள்விப்பட்ட மதகுரு மகிழ்ந்தார்.

18 வயதில் லொரெட்டோ கன்னி மடத்தில் சேர்ந்த அன்னைக்கு முக்கிய பயிற்சிகள் தரப்பட்டன.

அனைத்தையும் திறம்படக் கற்றதோடு, ஆங்கில மொழியையும் கற்றுக்கொண்டார்.

தனது தாயாரின் ஆசியுடன், தனது 19 வயதில் கப்பல் வழியாக இந்தியாவிலுள்ள கொல்கத்தாவிற்கு வந்து சேர்ந்தார்.

இந்திய மண்ணில் கால் பதித்த அன்னையின் உள்ளம் ஆனந்தமாய் மகிழ்ந்தது.

எத்தனை ஆண்டுகளாக இந்த கனவு பூமியைக் காண அவர் ஏங்கியிருந்தார்.

லொரெட்டா கன்னி மடத்திற்கு வந்த அன்னையை மீண்டும் ஓர் ஆண்டு பயிற்சி பெற்றார்; சிறப்பாய் முடித்தார்.

பயிற்சி பெற்ற அன்னை லொரெட்டா கன்னியர் நடத்தி வந்த புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியப் பணியினை மேற்கொண்டார்.

அன்னை பள்ளியில் மாணவியர்க்கு நடத்திய பாடம் புவியியல். அதே பள்ளியில் தலைமை யாசிரியராக பின்னாளில் உயர்ந்தார். அப்பள்ளியில் அன்னை பதினேழு ஆண்டுகள் பணிபுரிந்தார்.

1939 ஆம் ஆண்டு மே 24 ஆம் நாள் தனது இறுதி உறுதிமொழியை டார்ஜிலிங்கில் எடுத்து, பூரணமாக கன்னித்துறவியானார்.

அப்போதுதான் தன் பெயரை 'தெரசா' என்று மாற்றிக் கொண்டார்.

கொல்கத்தாவிலிருந்து டார்ஜிலிங்கிற்கு இரயில் வண்டியில் செல்லும் போதுதான் அன்னையின் ஈர இதயம் ஏழைகளுக்காக - நோயினருக்காக உதவ

வேண்டும் என்று எண்ணியது. உடனே செயலிலும் இறங்கினார்.

முதன்முதலில் கொல்கத்தாவில் மோதிஜ் சேரியில் ஐந்து ரூபாயில் ஒரு குடிசையை வாடகைக்கு எடுத்து ஏழைகளுக்கும், தொழுநோயினருக்கும் தொண்டு செய்யத் தொடங்கினார்.

குழந்தைகளுக்கான பள்ளி எப்படி அமைந்தது...? கூரை கிடையாது; சுற்றுச் சுவர் கிடையாது. எழுத கரும்பலகை கிடையாது. அன்னைக்கு அமரக்கூட நாற்காலி கிடையாது.

ஆமாம்! மரத்தடியில்தான் பள்ளி. சிறுவர்களோ ஐந்தே பேர். வங்க மொழியின் முதல் எழுத்தைத் தரையிலே அன்னை எழுதிக் காண்பிக்க, மகிழ்ச்சியுடன் சிறுவர்கள் துள்ளிக் குதித்தார்களாம்.

அன்னையின் தொண்டிற்காக அன்று கிடைத்தது தான், இன்று நாம் அனைவரும் அவரின் பெயரை மறந்து அழைக்கும் 'அன்னை' என்ற பட்டம்.

1950 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஏழாம் நாள் அன்னையின் அறப்பணி இயக்கம், கொல் கொத்தா உயர்நீதி மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில் அன்னையுடன் தொண்டாற்ற முன்வந்தவர்கள் பன்னிரெண்டு பேர்.

இவர்கள் அனைவரும் கொல்கத்தாவில் உள்ள எண்டலியில் - புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளியில் அன்னையிடம் படித்தவர்களே!

ஐந்து பேர்களுடன் தொடங்கப்பட்ட அன்னையின் மனித நேயப்பணி, இன்று 150 நாடுகளில் விரிந்து, பரந்து விழுது விட்டிருக்கிறது.

மொத்த தொண்டு மையங்கள் 560-க்கும் மேலாக இருக்கிறது.

இம்மையங்களில் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட அருட்சகோதரிகளும், ஐநூறுக்கும் மேற்பட்ட அருட் சகோதரர்களும் அன்புப் பணியில் ஈடுபட்டு உள்ளனர்.

இந்தியாவில் மட்டும் 200-க்கும் மேற்பட்ட தொண்டு மையங்கள் உள்ளன.

அன்னையின் சேவை மையங்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

- ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிசு பவனம்.
- தொழு நோயினருக்கு சுகாதார இல்லம்.
- முதியோருக்கு கருணை இல்லம்.

இந்தியாவில் எயிட்ஸ் நோயின் வருகையைக் கண்டு மனம் கலங்கிப் போன அன்னை, மறைவதற்கு முன்கூட நான்காவது சேவை மையமாக எயிட்ஸ் நோயினருக்காக ஓர் இல்லத்தையும் தொடங்கினார்.

தினமும் இரண்டு இலட்சத்திற்கும் மேலாக தொழு நோயினருக்கு 150-க்கு மேற்பட்ட நிறுவனங்கள் மூலம் 800-க்கு மேற்பட்ட நடமாடும் மருத்துவமனை வழியாக சிகிச்சை அளித்து வந்தார், அன்னை.

அவர் சொன்னார்: ‘‘ஒவ்வொரு மனிதரிடத்திலும் நான் இறைவனைப் பார்க்கிறேன். மக்கள் சேவையே மகேசன் சேவை. தொழு நோயினரின் உடலைத் தொட்டு அவர்களது காயங்களுக்கு மருந்து போட்டு பணிவிடை செய்வதை, ஆண்டவனுக்கே பணிவிடை செய்வதாக உணர்கிறேன்’’ என்று.

நாட்டில் நடக்கும் சிசுக் கொலைகளைக் கண்டு உள்ளம் வெதும்பி, அன்னை சொன்ன வரிகள் இவை:

'வயிற்றில் வளரும் குழந்தையை தயவு செய்து யாரும் கொல்ல வேண்டாம். அது பிறந்த பிறகு உங்களுக்குத் தேவையில்லை என்றால் என்னிடம் கொடுங்கள். அதை நான் போற்றி வளர்க்கிறேன்.'

அன்னை தெரசாவைப் போல் ஆதரவற்றவர்களை ஆதரித்தவர் உலகில் எவருமில்லை.

கொல்கத்தாவில் முதன்முதலில் ஆதரவற்றவர்களுக்காக இல்லம் தொடங்கியபோது, அன்னையிடமிருந்தது பிறருக்கு உதவ வேண்டும் என்ற அன்புள்ளமும், நம்பிக்கையும் மட்டுமே. பொருளாதாரம் பிறருக்கு உதவுகின்ற அளவில் இல்லை.

அதனால், இல்லக் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டி, அங்கேயுள்ள வீடுகளுக்கும், கடைகளுக்கும் சென்று, 'என் குழந்தைகளுக்கு ஏதாவது கொடுங்கள்' என்று இரு கையேந்தி நிற்பாராம்.

அப்படி ஒரு சமயத்தில் ஒருவரிடம் கையேந்தி, 'என் குழந்தைகளுக்கு ஏதாவது கொடுங்கள்' என்று கேட்டு நின்றபோது, தினமும் இப்படி தெருத்தெருவாக கையேந்தி நின்ற அன்னையை பல முறை கண்டு எரிச்சலடைந்திருந்த ஒருவர், "உனக்கு வேற வேலை இல்லையா...?" என்று கோபத்தோடு அன்னையின் முகத்தில் காரி உமிழ்ந்தார்.

அப்போது அன்னை என்ன செய்தார்கள் தெரியுமா? இரண்டு கைகளில் வந்து விழுந்த எச்சிலை அப்படியே தன் மார்பில் - வெள்ளைச் சேலையில் தடவிக் கொண்டு, மீண்டும், "ஐயா, எனக்குப் பிச்சை இட்டு விட்டீர்கள். என் குழந்தைகளுக்கு ஏதாவது கொடுங்கள்" என்று கையேந்தி நின்றாராம்.

அந்த மனிதன், அன்னையின் பொறுமையைக் கண்டு - சகிப்புத் தன்மையைக் கண்டு கண் கலங்கிப்போய் விட்டாராம்.

பிறகு, அன்னை கேட்டது போலவே மனம் மாறி உதவி புரிந்தாராம்.

'அன்போடு எதைச் செய்தாலும் வெற்றி பெறலாம்' என்பதற்கு அன்னையே உதாரணம்.

பொதுத் தொண்டில் ஈடுபடும்போது ஏச்சுக்களும், பேச்சுக்களும், கிண்டல்களும் வரும் என்பதை அன்னை உணராதவரா என்ன?

ஏசுபிரான் ஏழை மக்களிடம் வந்தார். 'ஒருவர் மீது ஒருவர் அன்பு செய்யுங்கள்' என்று போதித்தார்.

இறைவன் யாருக்கெல்லாம் செல்வத்தை கொடுத்திருக்கிறாரோ, அவர்கள் தாமாகவே முன் வந்து இல்லாதவர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும்.

அவர்கள் பசியோடு இருக்கிறார்கள் என்றால், உணவுக்காக அல்ல. பரிவும், பாசத்திற்காகவும்தான்.

அவர்கள் தாகத்தோடு இருக்கிறார்கள் என்றால், குடிநீருக்காக அல்ல; அமைதிக்காகவும் சமாதானத்திற்காகவும்தான்.

அவர்கள் நிர்வாணமாக இருக்கிறார்கள் என்றால், துணிமணிகளுக்காக அல்ல; கண்ணியம்தான்.

அவர்கள் வீடு இழந்திருக்கிறார்கள் என்றால், தங்கியிருக்க அல்ல; அவர்கள் நல்லெண்ண நட்புக்குத்தான்.

ஏழை எளியவருக்கும், நலிந்தவருக்கும், ஆதரவற்றவர் களுக்கும் நீங்கள் அனுதாபம் காட்ட வேண்டாம்.

அவர்களுக்குத் தேவைப்படுவது உங்களின் பரிவு, பாசம், அன்பு, கருணை, மனித நேயம்.

மற்றவர்களை நேசிப்பதால் ஏற்படும் மகிழ்ச்சி அளவிட முடியாதது.

அன்பு அமைதியை ஏற்படுத்துகிறது. ஏனெனில் அது இனத்துக்கும் மனத்துக்கும் அப்பாற்பட்டது.

மனப்பூர்வமான அன்பு மட்டுமே இவ்வுலகில் நிலையான சமத்துவத்துக்கு வழிகாட்ட முடியும்.

வறியவர்கள் உங்களிடம் இரக்கத்தையோ, உங்கள் கண்ணீரையோ எதிர்பார்க்கவில்லை. அவர்களுக்கு நீங்கள் தர வேண்டியது உங்கள் சந்தோசத்தில் பங்குதான்.

ஏழையிலும் ஏழை ஒருவன் ஆடையின்றி நிர்வாணமாக இருக்கின்றான் என்றால், அங்கு மனிதகுலத்தின் கண்ணியம் நிர்வாணமாக்கப் பட்டிருக்கிறதுஎன்றுதான் பொருள்.

ஒருவர் இறக்கும் நிலையில், நாம் செய்கின்ற நல்ல செயல்கள் மற்றும் நம் வாழ்நாளில் பெற்ற பட்டங்களால் எடை போடப்பட மாட்டோம். நமது சேவையில் நாம் காட்டிய அன்பை வைத்தே நாம் மதிக்கப்படுவோம்.

மகிழ்ச்சியே பிரார்த்தனை; மகிழ்ச்சியே பலம்; மகிழ்ச்சியே அன்பு; மகிழ்ச்சியே ஒரு பாச வலை. அதை வைத்து ஆன்மாக்களைப் பிடிக்கலாம்.

இவை எல்லாம் அன்னையின் தார்மீக போதனை களாக இருந்தது.

அன்னை பெற்ற சிறப்புகளில் சில...

*1962* - பத்மஸ்ரீ விருது.
*1962* - ஜவஹர்லால் நேரு சர்வதேச அமைதி விருது.
*1978* - பிரிட்டானியா அரசு ஆர்டர் ஆஃப் பிரிட்டிஷ் எம்பயர் விருது.
*1979* - நோபல் பரிசு.
*1979* - கென்னடி சர்வதேச விருது.
*1980* - பாரத ரத்னா விருது.
*1983* - இங்கிலாந்து அரசி இரண்டாம் எலிச பெத்திடம் இருந்து பிரிட்டனின் மிக உயர்ந்த விருதான ஆர்டர் ஆஃப் மெரிட் விருது.
*1991* - யுனெஸ்கோ அமைதி விருது.
*1992* - இந்தியாவின் 'தவப்புதல்வி' என்ற விருதும், பாரத சிரோன்மணி விருதும்.
*1993* - இராஜீவ்காந்தி விருது.

இப்படி அரை நூறு விருதுகளுக்கு மேல் அன்னை பெற்றிருப்பது உலகளவில் இவர்தான்.

அன்பு, கருணை, தொண்டு இவற்றின் மொத்த வடிவமாக வாழ்ந்த அன்னை, **1997** ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 5 ஆம் நாள் இதய நோயின் காரணமாக இயற்கை எய்தினார். ஏழைகளின் அமுதமாகவும், நோயினரின் மருந் தாகவும் வாழ்ந்த அன்னையிடம் ஒருவர் கேட்டார்: "உங்களுக்கு சொர்க்கத்தில் இருக்க விருப்பமா...? ஏழைகளோடு இருக்க விருப்பமா...?" என்று.

புனிதத்தின் புனிதமான அன்னை சொன்னார்: "நான் ஏழைகளோடு இருக்கவே விரும்புகிறேன். காரணம், சொர்க்கத்தில் ஏழைகள் இல்லையே...!" என்று. ■

## 6. கீதாஞ்சலி நாயகன்

'இந்தியாவைச் சேர்ந்த ஒரு கவிஞருக்கு இந்தாண்டு முதன் முதலாக இலக்கியத்திற்கான நோபல்பரிசு கிடைத்திருக்கிறது...'

இப்படி உலக இலக்கிய இதயங்களை எல்லாம் **1913**-இல் இந்தியாவின் பக்கம் திரும்பிப் பார்த்துப் பேச வைத்தவர் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர்தான்.

இவரது வாழ்க்கை பொருளாதாரத்தில் உயர்ந்திருந்த போதிலும், தனிப்பட்ட வாழ்க்கையில் அடைந்த சோகங்களை, சோதனைகளைப் பார்க்கும்போது வேதனையாக இருக்கிறது.

இவர் எழுதிய 'கீதாஞ்சலி' என்ற படைப் பிலக்கியத்திற்குத்தான் நோபல் பரிசு கிடைத்தது.

அறிவியல்களுக்காகவும், சமாதானத்திற்காகவும் இன்னும் பிறவற்றிற்காகவும் இந்தியாவில் பலர் பல நோபல் பரிசுகளைப் பெற்றிருந்தாலும் - பெற்று வந்தாலும்...

இலக்கியத்திற்காக இவர் பெற்ற நோபல் பரிசுக்குப் பிறகு, நூறாண்டுகள் தாண்டியும் இதுவரை அப்பரிசைப் பெற்றவர் எவருமில்லை என்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் தந்தை தேவேந்திர நாத் தாகூர் பெரும் புகழ் படைத்த அறிஞர். ஆங்கிலேயருடன் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தார். இவரது செல்வச் செழிப்பால் ஊரார்கள் இவரை பிரபு என்றே அழைத்தார்கள்.

இவ்வுலகமே இறைவனால் படைக்கப்பட்டது என்பதை உணர்ந்த தேவேந்திரநாத் நல்ல நண்பர் களுடன் இணைந்து 'தத்துவ ரஞ்சன சபை', 'தத்துவ போதினி சபை' என்ற பெயர்களில் சமூக படைப்புகளைத் தோற்றுவித்தார். அதன் வழியே சமூக சீர்த்திருத்தங்களை செய்து வந்தார். 'தத்துவ போதினி' என்ற ஒரு பத்திரிகை யையும் தொடங்கி, அதன் வழியே ஆன்மீக கருத்துக்களைப் பரப்பி வந்தார்.

ஆன்மிகத் தொண்டரான தேவேந்திரநாத்திற்கு, 1861 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ரவீந்திரநாத் தாகூர், கல்கத்தாவில் பிறந்தார்.

தாகூருக்கு பள்ளிப் பருவம் வந்த வேளையில் கீழ்த்திசைக் கல்விக் கழகத்தில் சேர்க்கப்பட்டார்.

குடும்பத்தில் உள்ள பெரியோர்கள் வேலையின் பொருட்டு வெளியே செல்கின்ற வேளையில், தாகூரை, வெளியே எங்கும் விடாமல் வேலைக் காரர்களே பார்த்து வருகின்ற பொறுப்பைக் கொண்டிருந்தார்கள்.

அப்படி பார்த்துக் கொள்கின்ற பணியாளர்கள், அவரை ஓர் அறையில் போட்டு அடைத்து விடுவார்கள்.

அந்த வேளைகளில் எல்லாம் தாகூர், அங்குள்ள சாளரத்தின் வழியே, தோட்டங்களையும், வருவோர்,

போவோரையும் பார்த்துக்கொண்டு பொழுதைப் போக்குவதுதான், அவருக்கு வேலையாக இருந்தது.

தனது இளமைக்கால சிந்தனைகளை, செயல்பாடுகளை எல்லாம் 'நினைவுகள்' என்ற நூலில் சுவைபட எழுதியிருக்கிறார்.

இவரது பள்ளிப் படிப்பின்போது, ஆசிரியர் ஒருவர் தகாத வார்த்தைகளால் பேசியதைக் கேட்டு, மிகுந்த மனவேதனைப்பட்டதோடு, அவர் கேட்ட கேள்விகளுக்கு விடை கூற மறுத்தேவிட்டார்.

அவரின் போக்கு, ஆசிரியருக்கு கோபத்தைத் தூண்டியது... உன்னைப் பார்த்துக் கொள்கிறேன் என்பதுபோல் ஆசிரியர் மனதில் பழி உணர்வை வளர்க்கக் காரணமானார்.

ஆண்டுத் தேர்வு வந்தது. தேர்வில் தாகூர் முதலிடத்தில் இருந்தார். அது கண்டு மனம் பொறுக்காத ஆசிரியர், மீண்டும் தேர்வு நடத்த ஏற்பாடு செய்தார். அப்போதும் தாகூரே மதிப்பெண்கள் அதிகம் பெற்று முதலிடத்தில் நின்றார். ஆசிரியர் வெட்கிப் போனார்.

தாகூரின் நெருங்கிய உறவுக்கார நண்பன் ஒருவன், வங்கமொழியில் கவிதை ஒன்று உன்னால் எழுத முடியுமா? என்று கேட்டான்.

பின்னாளில் பல ஆயிரம் பாடல்களை எழுதி உலகப் புகழ் பெற்ற தாகூர், நண்பன் கேட்டுக் கொண்டது போல, உடனே ஒரு கவிதையை எழுதி அவனிடம் காட்ட, அவன் வியப்பில் வீழ்ந்து போனான்.

இவரது கவி உலகப் பயணம் இப்படித்தான் தொடர்ந்தது. கவிதையில் மனம் தோய்ந்ததால் கல்வியில் அவரது நாட்டம் குறையத் தொடங்கியது.

அது கண்ட தந்தையார் - வீட்டுக்கே வந்து கல்வி கற்பிக்க ஒரு ஆசிரியரை ஏற்பாடு செய்தார்.

அதன்படியே அந்த ஆசிரியரிடம், தன் தாய் மொழியான வங்க மொழியையும், ஆங்கிலத்தையும் சிறப்பாகக் கற்றுக் கொண்டார்.

தாகூர், இயற்கையோடு இணைந்து வாழ்வதையே தன் இளமை முதல் முதுமை வரை விரும்பினார். இந்த உணர்வுகளை அவரது படைப்பிலக்கியம் யாவிலும் காணலாம்.

தாகூர் முதன் முதலாக எழுதிய நூல் ஒன்று அச்சில் ஏறாமலேயே காணாமல் போய்விட்டது.

இவரது கவிதையாற்றலைக் கண்டு, சத்காரி பாபு, கோவிந்த பாபு, ஸ்ரீகண்ட பாபு போன்ற ஆசிரிய பெருமக்கள் அனைவரும் துணை நின்று பெருமைப் படுத்தியிருக்கிறார்கள்.

தாகூர், வங்க மொழியில் நன்கு தேர்ச்சி பெற்றதும், இவரது பள்ளிக் கல்வியை தந்தையார் நிறுத்திவிட்டார்.

அக்காலத்தில் ஆங்கிலம் கற்கும் ஆவலும் ஆர்வமும் எங்கும் பரவியிருந்தது. ஆனால், தாகூருக்கு தாய்மொழிப் பற்றே அதிகம் இருந்தது. ஒவ்வொரு வரும் தாய்மொழியையே முதலில் பயில வேண்டும் என்ற கருத்தை தன் வாழ்நாள் முழுவதும் கொண் டிருந்தார்.

தன் தாய் இறந்து போனதன் பின், தாகூரின் பள்ளிக் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு,

வீட்டிலேயே ஒரு ஆசிரியரை நியமித்து, மேற் கொண்டு கல்வியைத் தொடர, தந்தையார் வழிவகை செய்தார்.

அந்த வேளையில்தான், காளிதாசருடைய குமாரசம்பவம், ஷேக்ஸ்பியருடைய 'மாக்பெத்' ஆகிய நூல்களை அந்த ஆசிரியரிடமிருந்து கற்றார்.

பழைய காலத்து வைணவப் பாடல்களின் தொகுப்பு நூல் ஒன்றினை படிக்கின்ற வாய்ப்பினைப் பெற்ற தாகூர், அதனை மிகுந்த ஆர்வத்தோடு ஆழ்ந்து படித்தார்.

அந்நூலில் இருந்த செய்யுள்களைப் போலவே தாமும் எழுத விரும்பினார். அதன்படியே சில பாடல்களையும் எழுதினார்.

அப்படி எழுதிய செய்யுள்களை நண்பரிடம் காட்டி இச்செய்யுள்கள் முற்கால புலவர் ஒருவர் எழுதியது என்று சொன்னார்.

''அப்படியா... என்று அதை வாங்கிப் படித்தவர்கள். 'ஆகா, ஓகோ' வென்று புகழ்ந்து பாராட்டினர். பிறகு நமது கவிஞர் உண்மையைக் கூற அவருக்கு கவிதையின் மீதிருந்த மதிப்புக் கொஞ்சம் குறைந்தது என்றே கூறலாம்.

ஆனால், அதே நேரம் ''பஹாசிம்மன்' என்ற பண்டைய கால கவிஞர் ஒருவரின் பெயரில் 'பாரதி' என்ற ஏட்டில் பிறகு இச்செய்யுள்கள் வெளிவந்தன.

'நிஷீகாந்த சடர்ஜி' என்பவர் இச்செய்யுள்களைக் குறித்து ஆய்வு செய்து பல்கலைக் கழகத்தில் 'டாக்டர்' பட்டமே பெற்றார் என்பது சுவையான செய்தி யாகும்.

1878-ஆம் ஆண்டு, தாகூரின் தமையனார் பணியின் மாற்றத்தால் அகமதாபாத் நகருக்குச் சென்றபோது, அவரோடு தாகூரும் சென்றார்.

அவர்கள் தங்கி இருந்த வீடும், இயற்கையான சூழ்நிலையும் சிந்தைக்கு விருந்தாக இருந்ததோடு, பல படைப்புகள் உருவாகக் காரணமாக அமைந்தது. பின் இங்கிலாந்து சென்றார்.

அங்கே ஜெர்மன், இத்தாலி போன்ற மொழி இலக்கியங்களை எல்லாம் படித்து மகிழ்ந்ததோடு, பின் அது குறித்து பல கட்டுரைகளை தன் நாடு வந்ததும் பாரதி மலரில் எழுதிக் குவித்தார்.

நாற்பது வயதிற்குப் பின் தாகூரின் வாழ்க்கைப் போக்கில் பல நிகழ்வுகள் நடந்தன.

அவருள் அறிவொளி பெருகிற்று. தன் வாழ்க்கையின் உட்பொருள் விளங்கிற்று. இருந்தும், அவருள்ளம் அமைதியை; நிம்மதியைத் தேடித் திரிந்தது.

தாம் செய்ய வேண்டிய கடமைகள் குறித்து சிந்தித்தார்... அவ்வேளையில் அவர் மனம் மலராய் விரிந்து சிரித்தது; புத்துணர்ச்சி பொங்கி வழிந்தது.

சுயநலத்தைத் துறந்து பொதுநலத்தில் நாட்டு நலத்தில் முழுமையாக ஈடுபட வேண்டும் என்பதே அவ்வுணர்ச்சிகளாக வடிவெடுத்தன.

முதல் கட்டமாக சாந்திநிகேதன் கல்விக் கூடத்தைத் தொடங்கினார். சுதந்திர வேட்கையோடு நாட்டுக்கு உழைத்தார்.

ஓராண்டிற்குள்ளாகவே தன் அன்புத் துணைவியாரை இழந்தார். அதைத் தொடர்ந்து காசநோய் கொண்டிருந்த மகளும் மரித்துப் போனாள்.

அத்தோடு நின்றதா சாவு...? இல்லை, வாந்தி பேதி கண்டு மகனும் மாய்ந்தான்.

இப்படி கவிஞரின் வாழ்வில் தொடர்ந்த துன்பங்களால் அவர் கலங்கிப் போகவில்லை. மாறாக 'மரணம் எனக்கு ஓர் அருட்கொடையே' என்று அவர் பேசுகின்ற அளவிலே மனம் கலங்காதிருந்தார்.

இந்த சோக காலங்களில்தான் கவிஞரிடமிருந்து 'நினைப்பு', 'கவிழ்ந்த ஓடம்', 'சுதேசி சங்கபா', 'கேயா' என்று கவிதைகளாய், கதைகளாய், கட்டுரைகளாய், பக்திப்பாடல்களாய் வெளிப்பட்டன.

தேசிய இயக்கத்தில் ஏழு ஆண்டுகளாக ஈடுபட்டிருந்த கவிஞர், அரசியல்வாதிகளின் மீது ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால், அரசியலை விட்டு வெளியேறினார்.

1908-ஆம் ஆண்டு முதல் தான் தோற்றுவித்த சாந்திநிகேதன் கல்விக் கூடத்தை உயர்த்துவதில் ஈடுபட்டவர் அங்கேயே தங்கிக் கொண்டார்.

அங்கே தங்கியிருந்த காலங்களில், 'சரதோத்சவம்', 'ராஜா', 'கீதாஞ்சலி' போன்ற அரிய நூல்களை எழுதினார்.

1912-இல் இரண்டாவது முறையாக கவிஞர் இங்கிலாந்து சென்றார். கடல் பயணமாகச் சென்ற அந்த இனிய நாட்களில்தான், தம் தாய்மொழியில் எழுதிய கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்தார்.

அப்படி, வங்க மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்யப்பட்ட தொகுப்பு நூலே பின்னாளில் 'கீதாஞ்சலி'யாக மலர்ந்தது.

ஆங்கில அறிஞர் பெருமக்களின் இதயங்களில் எல்லாம் இடம் போட்டது; உலகில் புகழ்க்கொடி நாட்டியது.

இந்த அற்புதப் படைப்பே கவிஞருக்கு 1913-இல் நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது.

1914-இல் பிரிட்டிஷ் அரசர் கவிஞருக்கு 'சர்' என்ற கௌரவப்பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தார். இதையடுத்து 'பலாகா' என்ற நூல் வெளி வந்தது. இதைத் தொடர்ந்து 'பால்குனி' 'கரே பஹிரே' என்ற நூல்களும் வெளிவந்து சிறந்தன.

நோபல் பரிசு பெற்ற பிறகு உலக அளவில் பேசப்பட்ட கவிஞரை, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் சிறப்பிக்க அழைத்தனர். கவிஞரும் சென்று வந்தார்.

கவிஞர் தாகூர், கவிதைகள் மட்டும் எழுதவில்லை; நாடகங்கள், இசை நாடகங்கள், கதைகள், கட்டுரைகள், நாவல்கள் என்று எழுத்துத் துறையில் தொடாதது எதுவுமே இல்லை எனலாம்.

வாழ்நாள் எல்லாம் இயற்கையோடு இயற்கை யாய் இணைந்து வாழ விரும்பிய இந்த மகாகவி 1941-இல் இயற்கை எய்தினார்.

■

# 7. ஒளிச் சிதறல்!

உலகிலேயே சிறந்த, உயர்ந்த பரிசு நோபல் பரிசுதான் என்பதை யாவரும் அறிவர்.

ஓர் இந்தியர், 'ஒளிச்சிதறல்' குறித்து ஆய்வு செய்து 1928-இல் 'இராமன் விளைவு' என்னும் அறிவியல் உண்மையை உலகறியச் செய்ததால் தானே, உன்னதப் பரிசான நோபல் பரிசையே தர நோபல் நிறுவனம் முன் வந்தது. உலகோர் சர்.சி.வி. இராமனைப் பார்க்க வைத்தது.

சர்.சி.வி.இராமன் என்றால் எல்லோருக்கும் தெரியும். சந்திரசேகர வெங்கட்ராமன் என்றால் பலருக்குத் தெரியாது. இதுதான் அவரின் முழுப் பெயர்.

சி.வி.இராமன் 07.11.1888-இல் திருச்சியில் பிறந்தார். பெற்றோர் சந்திரசேகர் - பார்வதி.

இவரது தந்தை பள்ளி ஆசிரியராக இருந்து பின்னர், விசாகப்பட்டினம் இந்துக் கல்லூரியில் பேராசிரியராக பதவி வகித்தவர்.

சி.வி.இராமனின் தொடக்கக் கல்வி ஆந்திராவில் தான் தொடங்கியது. கல்லூரிப் படிப்பை இவர் முடிக்கும்போது வயது 14. முதன்மை மாணவராக தேர்ச்சி பெற்றார்.

இராமன் கல்வியில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். வீட்டிலிருந்த தந்தையாரின் அறிவியல் நூல்களை எல்லாம் படிப்பார்.

அப்போது இருந்தே அவருள்ளத்தில் பௌதிகமும், இரசாயனமும் கலந்துவிட்டது.

இளம் வயதிலேயே அறிவியலில் இராமன் பெற்றிருந்த அறிவையும், ஆற்றலையும் கண்டு ஆசிரியர்களும், மற்றவர்களும் வியந்து போயினர்.

தொடர்ந்து படிக்க வேண்டி, சென்னை மாநிலக் கல்லூரியில் சேர்ந்து பி.ஏ. இயற்பியல் பட்டமும் பெற்றார். பி.ஏ. தேர்வில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றமைக்காக பொற்பதக்கங்களையும் பெற்றார். எம்.ஏ.யிலும் முதல் மதிப்பெண் பெற்றுத் தேர்ந்தார்.

இவர் எம்.ஏ. படிக்கும்போது செய்த ஆய்வின் முடிவு இப்படி இருந்தது....

'முப்பட்டைக் கண்ணாடியின் வழியே சூரிய ஒளி சென்று வெளியேறும் போது ஒளிக் கற்றையில் சில மாறுதல்கள் ஏற்படுகிறது.

இந்த ஆய்வினை வெளிநாட்டு இதழிற்கு எழுதியனுப்ப, அக்கட்டுரையும் வெளியானது.

மேல் நாடு சென்று அறிவியல் ஆய்வில் பட்டம் பெற வேண்டும் என்று விரும்பினார். ஆனால் அவர் உடல்நலம் குன்றியிருந்ததால் அங்கு செல்ல முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இருந்தும், இந்திய அரசு நடத்திய I.F.S. தேர்வு எழுதினார். வெற்றி பெற்றார். துணைத் தலைமைக் கணக்கராகவும் கொல்கத்தாவில் பணியில் சேர்ந்தார். அதேவேளையில் அவருக்குத் திருமணமும் நடந்தது.

பணியின் காரணமாக 1912-இல் ரங்கூனுக்குச் சென்றார். சில காலம் நாக்பூரிலும் பணி செய்துவிட்டு, மீண்டும் கொல்கத்தாவிற்கே வந்து சேர்ந்தார்.

அப்போதுதான் அவரது அறிவியல் தேடலுக்கு பதியன் போடப்பட்டது. கொல்கத்தாவிலுள்ள இந்திய அறிவியல் வளர்ச்சிக் கழகத்தில் உறுப்பினராகத் தன்னை இணைத்துக் கொண்டார்.

பணி நேரம் போக தன் ஆய்வுப் பணியை அங்கே தொடங்கினார்.

அப்போது, அவருக்கு உதவியாக இருந்தவர், அறிவியல் வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக இருந்த அமிர்தலால் சர்க்கார் தான்.

அறிவியல் உலகில் சாதனை படைக்க வேண்டும் என்பதால், பத்து ஆண்டுகள் செய்து வந்த வேலையை விட்டார்.

வேலையை விட்ட பின்னர், இராமன் கொல்கத்தா விலுள்ள அறிவியல் கல்லூரியில் இயற்பியல் பேராசிரியர் பணியில் சேர்ந்தார்.

அதே கல்லூரியில் பதினாறு ஆண்டுகளுக்குப் பின் 'இந்திய அறிவியல் வளர்ச்சிக் கழகத்தின்' தலைவராக பொறுப்பேற்றார்.

அப்போது, 'ஒளியின் சித்தாந்தம், ஒளிச்சிதறல், ஒளி வண்ணங்கள், மின் காந்த சக்தி, இசைக்கருவி களில் ஒலி இயக்கம்' என்று பல்வேறு கோணங்களில் தமது ஆய்வினைத் தொடர்ந்தார்.

தன் ஆய்வுகளை எல்லாம் பல இதழ்களிலும் அவ்வப்போது எழுதி வந்தார். அக்கட்டுரைகளால் அவர் புகழ் உலகில் பரவத் தொடங்கியது. பல்கலைக் கழகங்களின் அறிவியல் மாநாடு ஒன்று அப்போது (1921) ஆக்ஸ்போர்டில் நடந்தது. இப்பயணமே இவரது முதல் வெளிநாட்டுப் பயணமாகும்.

இங்கிலாந்து சென்று திரும்பியது கடற்பயணமே. அவ்வேளையில்தான், கடலும், வானமும் நீல நிறமாகக் காட்சியளிப்பதற்கான காரணத்தை அறிய வேண்டும் என விழைந்தார்.

அதன்படியே இடைவிடாமல், ஒளிச்சிதறல் குறித்து பாடுபட்டதன் பயனாக 'இராமன் விளைவு' என்னும் அறிவியல் உண்மையைக் கண்டுபிடித்தார். இந்த பௌதிக ஆய்வுக்காகவே சி.வி.இராமன் நோபல் பரிசினைப் பெற்றார். இதில் ஒரு சிறப்புமிருக்கிறது.

ஆசியாவிலேயே விஞ்ஞான ஆராய்ச்சிக்கான முதல் நோபல் பரிசைப் பெற்றவர் இவரே. இந்த அரிய செயல்தான் உலக விஞ்ஞானிகளை இந்தியாவை திரும்பிப் பார்க்க வைத்தது என்றால் அது மிகையன்று.

பல இளம் விஞ்ஞானிகளுக்கு கலங்கரை விளக்காக - வழி காட்டியாக இருந்த சி.வி.இராமன், 1950-இல் 'இராமன் விஞ்ஞானக் கழகம்' என்ற அமைப்பையே நிறுவினார்.

முதன் முதலில் இங்கிலாந்து சென்ற சி.வி. இராமன் பின்னர் கனடா, நார்வே, அமெரிக்கா, டென்மார்க், ஜெர்மனி, ரஷ்யா, பிரான்ஸ் என்று உலக நாடுகளில் எல்லாம் புகழோடு உலா வந்தார்.

இராமன் விளைவுதான் பலரது கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுத்து நின்றது எனலாம்.

பின்னாளில், இவர் வகிக்காத பதவிகளோ, பெறாத பட்டங்களோ இல்லை. முக்கால் நூற்றாண்டிற்கும் மேலாக வாழ்ந்த அறிவியல் மேதை தன் வாழ்நாள் முழுதும் இந்தியாவின் முன்னேற்றத்திற்காகவே பாடுபட்டார்.

■

# 8. வீரத் துறவி

சகோதரிகளே! சகோதரர்களே! என்று சிகாகோவில் 1900-ஆம் அண்டு ஜனவரி 27இல் நடந்த சர்வசமய மாநாட்டில் அவர் பேசிய பேச்சைக் கேட்டு, அங்கே அரங்கில் உலக நாடுகளில் எல்லாம் இருந்து வந்திருந்த அனைவரும், 'இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? இந்தியாவைச் சேர்ந்தவரா!' என்று வினாக்குறி களையும், வியப்புக்குறிகளையும் எல்லோர் மனதிலும் எழச் செய்தவர். மகான் என்றும்; மனிதப் புனிதர் என்றும்; இந்து மதத்தை உலக அரங்கிலே அமர வைத்த அற்புத மனிதரென்றும்; வீரத்துறவி என்றும் போற்றப்பட்ட, புகழப்பட்ட, வணங்கப்பட்ட சுவாமி விவேகானந்தர்தான் அவர்.

துள்ளித்திரிகின்ற பள்ளிப்பருவத்திலே பாலகர்கள் தங்கள் பெற்றோர்களிடம் பழம் வேண்டும், தின்பண்டம் வேண்டும் என்று கேட்பார்கள்.

அதுவே இளைஞராக இருந்தால் புதுத்துணி வேண்டும், சைக்கிள் வேண்டும், பைக் வேண்டும், வாட்ச் வேண்டும் என்று கேட்பார்கள்.

ஆனால், ஓர் இளைஞன் கேட்டான்... யாரிடம்? தன் ஆசானிடம். அறிவு சார்ந்த அறிஞர்களிடம்; ஆன்மிக அருளாளர்களிடம்; ஞானிகளிடம் - இப்படி தான் கண்ட அனைவரிடமும் கேட்டான். ஒரு நாள் இரு நாள் அல்ல. பல நாள் கேட்டான்.

அப்படி என்னதான் கேட்டான்...? 'எனக்கு உங்களால் கடவுளைக் காட்ட முடியுமா...?'

இப்படிக் கேட்டவர் விவேகானந்தர்.

தங்க நாடாம் வங்க நாட்டில், 1863-ஆம் ஆண்டு ஜனவரி 12-ஆம் நாள்தான். வீரேசுவரன் என்றும் நரேந்திரன் என்றும் விவேகானந்தர் என்றும் அழைக்கப்பட்ட மகான் பிறந்தது. இவரது தாயும் தந்தையும் கற்றவர்கள்; இசையறிவும் பெற்றவர்கள்; நீதி நேர்மையும் கொண்டவர்கள்; பிறரால் போற்றப் பட்டவர்கள்.

இவரோடு பிறந்தவர்கள் இரு சகோதரிகள். விவேகானந்தர் இளமையில் செய்யாத சுட்டித் தனங்களே இல்லை.

காலை மாலை என்று எந்த வேளையிலும் சண்டை வம்பு என்று ஊர் மக்கள் அவரின் பெற்றோரிடம் புகார் கொடுக்காது ஒரு நாள் கூட விடிந்தது இல்லை. இளமையில் விவேகானந்தரின் போக்கு அப்படித்தான் கழிந்தன.

தாய், தன் உயிர் போகும் நிலையிலும் என் மகன் பிழைத்தால் போதும் என்று தான் வேண்டுவாள்.

ஆனால், விவேகானந்தரின் தாயோ, எனக்கு இப்படி ஒரு பேய்ப் பிள்ளையைத் தந்து விட்டாயே என்று அவரை உட்கார வைத்து சிவநாமத்தைக் கூறியபடியே குடம் குடமாக அவர் தலையிலே தண்ணீரை ஊற்றுவார்.

இப்படி நாள் ஒன்றுக்கு எத்தனை முறை தவறு செய்கிறாரோ அத்தனை முறை அவருக்கு

'அபிஷேகம்' நடக்கும்; உடல் நடுங்கும். குளிர் ஜுரம் வரும்.

இருந்தும் அடுத்த நாளே கொட்டம் தொடங்கி விடும். சுட்டித்தனம் அவருள் இருந்ததே தவிர, அவருள்ளத்தில் அன்பு, கருணை, மனித நேயம் போன்ற நல்ல பண்புகளும் அந்த இளம் வயதில் நிரம்பவே இருந்தன. முள்ளிருக்கும் பலாவில்தானே இனிய சுவையுள்ள சுளையுமிருக்கிறது.

ஒரு பண்டிகை நாளில் தன் மகனுக்கு பட்டுச் சட்டையும் வேட்டியும் போட்டு அழகு பார்த்தார் தாய்.

அந்த உடைகளோடு வீட்டு முற்றத்தில் இருந்தவரைக் கண்டு, அவர்கள் வீட்டுப் பக்கத் திலிருந்த மரத்திலிருந்து குரங்கு ஒன்று அவரிடம் வந்தது. அதோடு விளையாடிக் கொண்டிருந்த வேளையில், பிச்சைகாரரின் குரல் கேட்டு வெளிப் பட்ட விவேகானந்தரின் கண்ணில் பட்டார் அவர்.

கையில் பிச்சைப் பாத்திரம், மேலும் கீழும் பல கிழிசலான ஆடைகள். 'ஏன் நீங்க கிழிந்த துண்டைப் போட்டிருக்கீங்க?' கேட்டார்.

'நான் ஏழை புதுத்துணிக்கு எங்கே போவேன்?'

அடுத்த நொடியே பிச்சைக்காரரின் மேலிருந்த துண்டைப் பறித்து தூர எறிந்துவிட்டு, தான் அணிந்திருந்த பட்டுத் துண்டை அவர் மேல் போர்த்தி விட்டார். கீழாடையின்றி நின்றிருந்தார்.

அங்கே வந்த தாய்க்கு நிலைமை புரிந்து போயிற்று. பண்டிகை நாளில் ஏதும் செய்ய வேண்டாம் என்று கோபத்தோடு நின்றுவிட்டார்.

ஈரம் இருந்த இதயத்தில் வீரமும் இருந்தது.

ஒரு நாள் சக தோழர்களோடு விவேகானந்தர் விளையாடிக் கொண்டிருக்கும்போது, தறிகெட்ட நிலையில் குதிரை வண்டி சாலையில் வந்து கொண்டிருப்பதைக் கண்டு, அவரின் தோழர்கள் எல்லாம் ஓடி விட்டனர். தான் மட்டும் நின்றிருக்க, அந்த நேரத்தில் சாலையின் நடுவே சிறு குழந்தை ஒன்று தவழ்ந்து வருவதைக் கண்டு சாலை ஓரம் இருந்தவர்கள் பதறிக் கொண்டும், அலறிக் கொண்டும் நிற்கிறார்கள். பிள்ளையின் தாய் கதறியபடியே பிள்ளையைக் காப்பாற்றுங்கள் என்று அழுது புலம்பிக் கொண்டிருக் கிறார். குதிரையோ மின்னலாய் பாய்ந்து வந்து கொண்டிருக்கிறது...

அந்த நேரம் புயலென பாய்ந்தார்.

குழந்தையைத் தூக்கிக் கொண்டார்.

குதிரை அவர்களைத் தாண்டி காற்றாய் பறந்து கொண்டிருந்தது. அவரது துணிவைக் கண்டு கூடியிருந்த அனைவரும் பாராட்டினார்கள்.

அப்போது அவருக்கு வயது 6.

ஆறு வயதில் பள்ளியில் சேர்க்கப்பட்டார் விவேகானந்தர்.

அங்கே அவர் பாடங்களைக் கற்றுக்கொள் வதற்குப் பதிலாக, தீய வார்த்தைகளையும், பிறர் கேட்கக் கூசும் சொற்களையும் மற்ற பிள்ளை களிடமிருந்து நிறையவே கற்று வந்தார்.

அப்படி கற்று வந்ததை, வீட்டிற்கு வந்ததும் தனது வீட்டில் வேலை செய்யும் ஆட்களை அவ்வார்த்தை களைச் சொல்லி திட்டத் தொடங்கினார்.

அவ்வாறான வார்த்தைகளை அறியாத தாயுள்ளம், அவர் பேசிய சொற்களைக் கேட்டு வேதனைப் பட்டது. கணவரிடமும் கூறினார்.

உடனே அந்த நீதிமான், அவரை அப்பள்ளியில் இருந்து நீக்கிவிட்டு, வீட்டிலேயே ஆசிரியர் ஒருவரை வரவழைத்து, அக்கம் பக்கத்து வீட்டுப் பிள்ளை களையும் அழைத்து அவர்களுக்கும் பாடம் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தார்.

பள்ளிக்குச் செல்லாமல் வீட்டில் இருந்து கல்வி கற்பித்தபோது, தன் மகன் மிகவும் தேர்ச்சி பெற்றவனாகவே இருக்கிறான் என்பதை அறிந்தார், தந்தை.

மேற்கல்விக்காக கொல்கத்தாவிலுள்ள ஈசுவர சந்திர வித்யா சாகரக் கல்வி நிலையத்தில் சேர்த்தார்கள்.

அங்கே அந்நிய மொழியான ஆங்கிலக் கல்வியைக் கட்டாயமாகப் படிக்க வேண்டி இருப்பதை அறிந்து, மனம் கலங்கிப் போனார். மொழி மீது அவருக்கு வெறுப்பு இல்லை. அது அந்நியர் மொழி என்பதால் தான் ஆங்கிலத்தை வெறுத்தார்.

அதை அறிந்த தந்தையாரும், ஆசிரியரும் ஆங்கிலக் கல்வியின் அவசியத்தைப் பற்றி எடுத்துச் சொன்னதால், வேறு வழியின்றி ஆங்கிலம் கற்கத் தொடங்கினார்.

கல்வியை அவர் கசடறவே கற்றார்.

விவேகானந்தர் சாதாரண மனிதர் அல்லர். பேராற்றல் பெற்றவர். அவருக்கு பதினேழு வயது ஆயிற்று. துன்பமும் தொடரலாயிற்று.

நோய்வாய்ப் பட்டு தந்தையார் இறந்து போனார்.

தந்தையார் வழக்கறிஞர் தொழிலில் அதிகமாக சம்பாதித்த போதிலும், அவரது இரக்கக் குணத்தால் - ஈகை பண்பால் அவர் இறக்கும்போது மிகுதியான பொருளில்லை.

அவரின் இறப்பு, அவர் மனைவியையும், குழந்தைகளையும் அதிகமாகவே பாதித்தது.

தாயையும், சகோதரிகளையும் காப்பாற்றுகின்ற நிலைக்கு விவேகானந்தர் தள்ளப்பட்டார். அந்தச் சுமையை எண்ணி அவர் கலங்கவில்லை. இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக எண்ணும் நிலையில் அவர் பக்குவப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் விவேகானந்தர் சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். கல்லூரிக்கு நடந்தே போகின்ற நிலை. பல வேளைகளில் சாப்பிட வழியில்லாத அவலம். தான் துன்பம் சுமந்தாலும் தாயும், சகோதரிகளும் கவலைப்படாமல் இருக்க வேண்டும் என்று விரும்பினார்.

இந்த நிலையில் மீண்டும் அவர்களைத் துன்பம் தொடர்ந்தது. அவருடைய உறவினர்கள் அவர்கள் வீட்டில் தங்களுக்கும் பங்கு இருப்பதாகச் சொல்லி வழக்குப் போட்டு விட்டார்கள்.

கலங்கவில்லை விவேகானந்தர். தந்தை பணி புரிந்த அதே நீதிமன்றத்தில் இவரும் விவேகத்துடன் வழக்காடி வெற்றி பெற்றதோடு, பலரது பாராட்டையும் தாயின் ஆசியையும் பெற்றார்.

அவரது துன்பங்கள் ஒருவழியாக தொலைந்து போயின. மீண்டும் அதைப் பற்றியே எண்ணத்

தொடங்கினார். பலரைக் கேட்கத் தொடங்கினார்... எதைப் பற்றி...?

கடவுளைக் காட்டக் கூடியவர் யார்? அவர்கள் எங்கு இருக்கிறார்கள்...?

ஒருவர் சொன்னார்... "கடவுளைக் கண்டவர் ஒருவர் இருக்கிறார். அவரை நீ சென்றடைந்தால் கடவுளை நீ உறுதியாகக் காணலாம்" என்று.

அவர் உள்ளம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

"அந்தக் கருணைக் கடல் எங்கே இருக்கிறார்; உடனே சொல்லுங்கள் செல்கிறேன்..."

அவர் இருக்குமிடத்தையும், அவர் பெயரையும் சொன்னார்.

அவ்வளவுதான் நல்ல நண்பர்கள் சிலரோடு கங்கைக் கரையை நோக்கிப் பறந்தார். அங்கே...

சாதுவாக, சாந்த ரூபியாக-ஒரு சிறு குழந்தையைப் போல் இராமகிருஷ்ணர் அமர்ந்திருந்தார்.

தன் முன்னே நின்றிருந்த இளைஞர்கள் ஒவ்வொருவரின் மீதும் அவரது அருள் பார்வை விழுந்து தாவியது. விவேகானந்தரைப் பார்த்ததும் அவர் பார்வை அவர் மீது நிலைத்து நின்றது. ஞானக் குழந்தை ஒன்றை கண்ட மகிழ்ச்சியில் அவருள்ளம் துள்ளி மகிழ்ந்தது.

எல்லோரையும் அமரச் சொன்னார். அமர்ந் தார்கள். தமது குளிர்ந்த பார்வையால் மீண்டும் விவேகானந்தரை மகான் பார்த்தார்...

"மகனே! என்னைப் பார்க்க பலர் வருகிறார்கள். நான் பார்க்க விரும்பியது உன்னைத்தான். நீ விரும்பிய

இடம் இதுதானே மகனே. ஏன் தாமதமாக வந்தாய்?'' கேட்டார்.

வியப்போடு நின்றிருந்தார், விவேகானந்தர்.

கடவுளைக் காண வந்தவர், இராமகிருஷ்ணர் உருவிலேயே கடவுளைக் கண்டு கொண்டிருந்தார்.

''சுவாமி, நீங்கள் கடவுளைப் பார்த்திருக்கிறீர் களா?''

''பார்த்திருக்கிறேன். பார்த்துக் கொண்டும் இருக்கிறேன். உனக்கும் காட்டுகிறேன். நீ அடிக்கடி வந்து போ...''

பின், இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொண் டார்கள். குரு, சீடர்களாக ஆகிப் போனார்கள். மகான், தன் சீடனை தெய்வக் குழந்தையாகவே எண்ணினார். சீடருக்கு, குரு கடவுளாகவே காணப்பட்டார்.

''சுவாமி, நான் துறவியாக வேண்டும்...'' சீடர்.

''ஏன் துறவியாக வேண்டும்...?'' குரு.

''.... '' சீடர்.

''முக்தியடைய துறவா? துயர்படும் மக்களை கரை சேர்க்கத் துறவா?'' குரு கேட்டார்.

''....'' சீடர்

''எல்லா மதங்களும் உண்மையானவையே என்ற பேருண்மையை நீ உலகிற்கு உணர்த்த வேண்டும். மதப் பூசல்களை ஒழிக்க வேண்டும். அந்த நற்செயலுக்காக நீ துறவியாக வேண்டும்...'' குரு.

சீடர் சிந்தனை வலையில் வீழ்ந்தார்.

"நீ துறவு ஏற்கும் துணிவு அவ்வளவுதானா...?" சீடர்.

"நான் துறவியாவது எளிது. தாங்கள் சொல்வது போல் அந்த உண்மைகளை உலகிற்கு இந்த சிறுவனால் எப்படி உணர்த்த முடியும்?"

"நீ மனிதனல்ல தெய்வ அம்சம் உள்ளவன். உன்னால் முடியும்..." சொன்னார், குரு.

சில நாளில் குருவிடம் சீடர் விவேகானந்தர் சந்யாசம் வாங்கிக் கொண்டார்.

சந்யாசம் ஏற்று விவேகானந்தர் ஐந்தாண்டு களாயின. எதற்காக இளமை முதலே அலைந்தாரோ அந்த ஆண்டவரை தன் குரு வழியே கண்டார்.

இந்நிலையில் இராமகிருஷ்ணர் நோய் கண்டு இறையடி சேர்ந்தார்.

அவருக்குப் பின்னே, எல்லா சீடர்களும், விவேகானந்தரையே தங்கள் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டார்கள்.

அறிவுச் சூரியனான விவேகானந்தர் தம் சீடர்களோடு இணைந்து கொல்கத்தா நகரின் வடக்கில் வராக நகரில் ஆசிரமம் ஒன்றை அமைத்தார்.

அங்கிருந்தபடியே தன் குரு கூறியதுபோல், தமது ஆன்மிகப் பயணத்தைத் தொடர்ந்தார்.

இந்து மதத்தின் உயர்வு பற்றிய விழிப்புணர்வை நாடுகள் தோறும், ஏன் உலகெங்கும் மணக்கச் செய்தார்; நிலைக்கச் செய்தார்.

■

# 9. வந்தே மாதரம்

கொல்கத்தாவில் புகழ்பெற்ற மருத்துவராக விளங்கியவர் கிருஷ்ணதன்கோஷ் என்பவர். இவர் அயல்நாட்டு நாகரிகத்தில் மிகவும் ஆவல் கொண்டவர் என்பதைவிட, வெறி பிடித்தவர் என்றே சொல்லலாம். அவருடைய மனைவியின் பெயர் ஸ்வர்ணலதாதேவி. கணவர் மேல்நாட்டு நாகரிக வெறி கொண்டவர் என்றால், அவர் மனைவியானவர்க்கோ இந்திய பண்பாட்டின் சிகரமாகத் திகழ்ந்தார்.

இந்த மனமொத்த தம்பதிகளுக்கு மகனாக அரவிந்தகோஷ் 1872-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ஆம் தேதி பிறந்தார்.

அரவிந்தகோஷிற்கு அண்ணன்கள் இருவரும், ஒரு அக்காளும் உண்டு.

தன் மகன்களை கிருஷ்ணதன்கோஷ் ஐரோப்பிய சூழ்நிலையிலேயே வளர்த்து வந்தார். அவர்களை கலெக்டராகவோ, நீதிபதியாகவோ பணியில் அமர்த்த வேண்டும் என்பது அவரது எண்ணமாக இருந்தது.

அதனால் தன் செல்லப்பிள்ளைகளை டார்ஜிலிங் கிலுள்ள செயின்ட் பால் பள்ளியில் சேர்த்தார். அப்போது அப்பள்ளியில் ஆங்கிலேயரின் குழந்தைகள் மட்டுமே படித்து வந்தனர். அங்கேயே அரவிந்தகோஷும் ஐந்து வயதில் சேர்க்கப்பட்டார்.

சில ஆண்டுகள் ஆங்கிலேயக் குழந்தைகளோடு சேர்ந்து படித்ததால் அவர்களுடைய நடவடிக்கைகளே கோஷிற்கும் படிந்துவிட்டன. அதனால் தாய்மொழிக் கல்வி என்பது அவருக்குக் கிட்டாமலேயே போய் விட்டது.

இந்த நிலையில், கிருஷ்ணதன் கோஷ் ஐரோப்பிய நாட்டிற்கு தம் குடும்பத்தோடு புறப்பட்டுச் சென்றார்.

*1879*-இல் இங்கிலாந்து சென்றபோது, அங்கே அவருக்கு எக்ரோய்டு என்ற பாதிரியார் ஒருவர் நண்பராகக் கிடைத்தார். அவரிடம் அரவிந்தகோஷை கல்வி பயில ஒப்படைத்தார். அவரும், அரவிந்தரை தன் மகனைப்போல கண்ணும் கருத்துமாக எண்ணி, போற்றி வளர்த்தார்.

ஐரோப்பாவில் இருந்தபோது மருத்துவர் கோஷிற்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. அவனுக்கு பாரீந்திரகோஷ் என்று பெரிட்டார்.

மருத்துவர் கிருஷ்ணதன்கோஷ் தன் மகன்களை பல்வேறு இடங்களில் தனித்தனியே படிக்க வைத்தார்.

அரவிந்தர் பாதிரியாரிடம் இருந்த போதும், ஆங்கில நாகரிகம் கொஞ்சமும் பதியவில்லை. அவர் ஆடம்பர வாழ்வை ஒருபோதும் விரும்பவில்லை. கேளிக்கை களிலும் ஈடுபடாமல் இருந்தார். எப்போதும் படிப்பிலேயே கவனம் செலுத்தி வந்தார்.

*1884*-ஆம் ஆண்டு மருத்துவர் கோஷ் தன் மகன் அரவிந்தரை இலண்டனுக்கு அழைத்துச் சென்று செயின்ட்பால் பள்ளியில் சேர்த்தார். அங்கே அவர் மூன்றாண்டுகள் படித்தார். பல மொழிகளைக் கற்றார்.

இளமையிலேயே கவிதை இயற்றுவதிலும் அவரது இதயம் ஈடுபட்டது.

படிக்கும் காலத்தில் பொருளாதார ரீதியாகவும் கஷ்டப்பட்டார். அதற்காக தந்தையிடம் வருத்தப் பட்டதே இல்லை. தந்தையின் நல் உள்ளத்தை நன்கு அறிந்தவர். அதனால், தன் துன்பத்தைத் தானே களைந்து கொண்டார்.

இலண்டனில் இருந்தபோது பரோடா மன்னரின் நட்பு ஏற்பட்டது. மன்னரும் அவருக்கு உதவ முன் வந்தார்.

*1893*-ஆம் ஆண்டு, அரவிந்தர் இந்தியாவுக்குப் புறப்பட்டார். தாய் தந்தையைப் பிரிந்து வாழ நேர்ந்ததால் மனம் கலங்கி, பித்துப் பிடித்தவர்போல் வாழ்ந்து கொண்டு இருந்தார். இந்த நிலையில் தாயுடன் பெரும் வேதனையோடு தங்கி இருந்தார்.

இந்த நிலையில் தன்னோடு பிறந்த சகோதரர்கள் நல்ல பணியில் இருந்தார்கள்.

தாயுடன் தங்கியிருந்த அரவிந்தருக்கு பரோடா மன்னர் அரண்மனையில் வேலை கொடுத்தார். முதலில் அங்கே சாதாரண பணியில் சேர்ந்த அவர், தன் உழைப்பால், கல்வியால் உயர் பதவிகளை பின் நாளில் பெற்றார்.

தம் வாழ்நாளில் பெரும் பகுதியை வெளிநாடு களிலேயே கழித்த அரவிந்தர், இந்திய பண்பாட் டையும், கலாச்சாரத்தையும் அறியாத நிலையிலேயே இருந்தார். அந்த அனுபவத்தை பரோடாவில்தான் பெற்றார்.

அங்கேதான் முதன் முதலாக தாய் மொழியையே கற்கத் தொடங்கினார். எழுத்தாளர் தேவேந்திர குமார் ராய் என்பவரிடம் தான் வங்காள மொழியைக் கற்றார். பின்பு படிப்படியாக இந்திய இலக்கியங்களையும், தத்துவங்களையும் அதிக அளவில் அறிந்து கொண்டார்.

அரவிந்தர் மேலை நாடுகளில் வளர்ந்துவந்த போதும், அவரது உடைகளும், பழக்க வழக்கங்களும் எளிமையாகவே எப்போதும் இருக்கும். நண்பர்கள், உறவினர்களுக்கு தன் வருவாயில் பெரும் பகுதியை செலவிட்டு மகிழ்வார். தனக்கு வேண்டிய தேவைகளை சுருக்கிக் கொள்வார்.

அரவிந்தரின் இதயத்தில் எப்போதும் விடுதலை வேட்கை நிரம்பவே நிறைந்து இருந்தது. அதை எல்லாம் மும்பையில் இருந்து வந்த 'இந்து பிரகாஷ்' என்ற பத்திரிகையில் எழுதி வந்தார்.

இவர் பரோடாவில் இருந்த சமயம் ஆன்மிகத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டார். அதனால் யோகிகளையும், சந்நியாசிகளையும் சந்திப்பதில் மகிழ்ந்தார்.

நர்மதை ஆற்றங்கரையில் இருநூற்றைம்பது வயதில் ஒரு சாது இருப்பதை அறிந்து அங்கு சென்றார். அவர் பெயர் பிரமானந்தர்.

இவரைப் பார்க்க அரவிந்தரைப் போல் பலர் அங்கு வந்திருந்தனர். அவர் பல ஆண்டுகளாக மௌனத் தோடும், யாரையும் கண்திறந்து பார்க்காமலும் இருந்தவர், அரவிந்தரைக் கண்டதும் கண் திறந்து பார்த்தார்.

கூடியிருந்த கூட்டம், அரவிந்தரிடம் ஏதோ ஓர் சக்தி இருப்பதாக உணர்ந்தார்கள்.

இந்த சாதுவைச் சந்தித்த அரவிந்தர், பிறகு எத்தனையோ சாதுக்களைச் சந்தித்தார். எவரையும் அவர் சாதுவாக ஏற்றுக் கொள்ளவில்லை.

அரவிந்தருக்கு பெண் கொடுக்க பெரும் பணக் காரர்கள் எல்லாம் விரும்பினார்கள். ஆனால், அவரோ எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த பதினான்கு வயதே நிரம்பிய சாதாரண ஒரு பெண்ணை விரும்பி திருணம் செய்து கொண்டார். வீட்டார் மகிழ்ந்தனர்.

தன் மனைவி மிருணாளினியோடு பரோடா விற்குச் சென்றார். பணியைத் தொடர்ந்தார். தொடக்கத்தில் அவர்கள் உறவு மகிழ்வாகவே இருந்தது.

அரவிந்தர் தன் மனைவியையும் ஆன்மீகத்தில் ஈடுபட மிகவும் முயற்சி செய்தார். ஆனால் அது முடியாது போயிற்று. தனது இறுதிக் காலத்தில் தனியே விரக்தியோடு இருந்து காலமானார்.

ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் நாளுக்கு நாள் இந்தியாவில் தலை தூக்க ஆரம்பித்தது. அதைக் கண்டு 'வந்தே மாதரம்' என்று பொங்கி எழுந்தனர் மக்கள்.

அப்போது அரவிந்தர், பரோடாவில் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்பணியைத் துறந்து விட்டு, கொல்கத்தாவிற்கு வந்து சேர்ந்தார். அவர் வருகையால் மக்கள் மகிழ்ந்தனர்.

தன் நாட்டு மக்களைப் பார்த்தவர், முதலில் இவர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணினார்.

அதன்படியே கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டார். அதன் விளைவாக தேசியக் கல்லூரியில் பரோடாவில் கிடைத்த அளவு பெரும் சம்பளம் கிடைக்கவில்லை. மிக குறைவாகவே கிடைத்தது. இருந்தாலும், நாட்டு மக்கள் நலன் கருதி அதை நிறைவாக ஏற்றுக் கொண்டார்.

இக்கல்லூரியில் நடந்த கருத்து வேறுபாடு காரணமாக அங்கிருந்து வெளியேறி, முழு நேர அரசியலில் ஈடுபடத் தொடங்கினார்.

இந்த நிலையில், மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் சாதனங்களுள் முதன்மையானது பத்திரிகையே என்பதை உணர்ந்த அவர், அதன் காரணமாக 'வந்தே மாதரமே' என்ற தேசிய இதழ் தொடங்கப்பட்டது. அதில் அவர் எழுதிய கட்டுரைகள் மக்களிடையே பெரும் மாறுதல்களை ஏற்படுத்தியது.

சுதந்திர வேட்கையை முதலில் தொடங்கியவர் அரவிந்தரே. அவரது கட்டுரைகளைப் படித்த லோகமான்ய பாலகங்காதர திலகர், லாலா லஜபதிராய் போன்றவர்கள் பாராட்டி, ஆதரவளித்தனர்.

இந்நிலையில், அரவிந்தரின் பெயர் பரவலாக எங்கும் தெரிய வந்தது. ஊருக்கு ஊர் அவரை பேச அழைத்தனர். அதன்படியே அவர் மும்பை, மத்தியப் பிரதேசம் போன்ற இடங்களுக்குச் சுற்றுப்பயணம் தொடங்கினார்.

அரவிந்தரின் எழுத்திலும், பேச்சிலும் ஆர்வம் கொண்ட இளைஞர் பட்டாளம், அவரையே தலைவராக ஏற்றுக் கொண்டனர். இக்கூட்டத்தில் தீவிரவாத இளைஞர்களும் இடம் பிடித்திருந்தனர்.

அவர்களுக்கு எல்லாம் பிரஞ்சு, ஜெர்மன், லத்தீன், இத்தாலி போன்ற மொழிகளை அரவிந்தர் கற்பித்தார். இதனால் அரசாங்கம், தீவிர இயக்கத்திற்குத் தலைவர் அரவிந்தர்தான் என முடிவு கட்டி, அவரை கைது செய்தது.

வழக்கு ஓர் ஆண்டு காலம் நடந்தது. அரவிந்தரும், மற்றவர்களும் அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டனர். எல்லாக் கைதிகளைப் போலவே அரவிந்தருக்கும் வேலை கொடுக்கப்பட்டது. அவரோடு சேர்ந்தவர் களை கடுமையாகத் தண்டிக்கவும் செய்தார்கள்.

சிறிது நாளில் அரவிந்தரை தனி அறையில் அடைத்தனர். சன்னல் இல்லாத அறை. அதற்குள் ளேயே சாப்பிட வேண்டும், உறங்க வேண்டும். ஏன் சிறுநீர், மலங்கழிப்பது கூட அங்கேயேதான். எல்லா வேதனைகளையும் அனுபவித்தார். மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவனை வேண்டத் தொடங்கி னார். மனதை தியானத்தில் திசை திருப்பினார். மனம் தெளிவடைந்தது. உபநிடத மந்திரங்களை உருப் போடத் தொடங்கினார். இப்போது எல்லாமே இறைவன் என்ற நிலையை அடைந்தார்.

சிறையில் இருந்த கைதிகளையும், காவலர் களையும் நாராயணனாகவே எண்ணினார். காணும் பொருள்களில் எல்லாம் கடவுளையே கண்டார். அவர் மனதில் மாற்றம் தொடங்கத் தொடங்கியது. சிறையில் இருக்கிறோம் என்பதையும் மறந்து எப்போதும் தியானத்தில் மூழ்கினார்.

நீதி விசாரணையில், முன் நடந்த வெடிகுண்டு கலவரத்தில் அரவிந்தருக்குப் பங்கு இல்லை என்ற நிலையில் அவருக்கு விடுதலை கிடைத்தது.

1909-இல் சிறையில் இருந்து ஆன்மிக ஒளி யோடு, அவதாரப் புருஷராக வெளிவந்தார்.

அப்போது நாட்டிலிருந்த வெடிகுண்டு கலாச் சாரமும், சூழ்நிலையும் அவருக்கு வேதனையைத் தந்தது. அந்த நிலையில் கொல்கத்தாவிற்கு அருகில் உள்ள உத்தர்பாராவில் அவருக்கு விழா எடுக்கப் பட்டது. அங்கு பேசும்போதுதான் சிறையில் கடவுளைக் கண்ட அனுபவத்தை விளக்கிப் பேசினார்.

முன்பே நடத்தி வந்த 'வந்தே மாதரம்' சிறை வாசத்தால் நின்றிருந்ததால், 'கர்ம யோகின்' என்ற ஆங்கிலப் பத்திரிகையையும், 'தர்ம' என்னும் பத்திரிகையையும் தொடங்கி, தேசியத்தின் வழியே ஆன்மிகத்தை வெளிப்படுத்தினார். நாம் வணங்க வேண்டியது பாரத அன்னையைத்தான் என்று வலியுறுத்தினார்.

அரசாங்கம் அவர் மீது கண் பதித்தபடியே இருந்தது. அதனால், அரசுடன் நேருக்கு நேர் எதிர்த்து நிற்பதைத் தவிர்த்தார்.

தேசியத்தைப் பற்றியும், தேசியப் பொருட்கள் வாங்குவதைப் பற்றியும் எங்கும் பேசினார். அப்போது ஒருநாள் இறைவனின் குரல் ஒலித்தது. 'நீ செய்யும் இந்த வேலை எல்லோரும் செய்யக் கூடியது. அதனால் நீ ஆழ்ந்த சிந்தனையில் மனதை பதி' என்பதாக அக்கட்டளை இருந்தது.

அன்றே அரசியலுக்கு ஒரு முழுக்குப் போட்டார். தனித்து நின்று வெற்றி பெற, 1910-ஆம் ஆண்டு புதுச்சேரிக்குப் பயணமானார். அங்கு தனிமையில் இருந்து யோகத்தில் ஈடுபட்டார். 1914-இல் புதுவையில் 'ஆரியர்' என்ற பத்திரிகையைத்

தொடங்கி, அதில் வேதங்கள், உபநிடதங்கள், யோகம் என்று எழுதி, தன் எண்ணத்தையும் இலட்சியத்தையும் விளக்கினார்.

இந்த வேளையில்தான் பிரஞ்சு பெண்மணியான மிசா ரிச்சர்டு யோகி அரவிந்தரைப் பற்றி ஆய்வு செய்யும் எண்ணத்தோடு அங்கு வந்து சேர்ந்தார். ஓராண்டு காலம் தங்கி இருந்தவர் சந்தர்ப்ப சூழ்நிலையால், கணவரோடு வந்திருந்த அப்பெண்மணி அவர்கள், தாய் நாட்டிற்குப் போக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

பின் *1920*-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் புதுவைக்கு வந்து, தன் பெயரை 'மீரா அன்னை' என்று மாற்றிக் கொண்டு நிரந்தரமாக அங்கேயே தங்கிவிட்டார். இவர் ஆசிரமத்தில் யோகி அரவிந்தரோடு தங்கியபோது முப்பது பேர் இருந்தனர். அவருக்குப்பின் அவ்வெண்ணிக்கை கூடிற்று. இவரின் வருகைக்குப் பின், யோகி அரவிந்தரின் ஆன்மிகப் பணி தொய்வின்றி சுடர்விட்டு எரிந்தது.

*1926* ஆம் ஆண்டு நவம்பர் மாதம் *24* ஆம் நாள் யோகி அரவிந்தர் சித்தி பெற்றார். அன்று முதல் ஆசிரம நடைமுறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. அவர், யாரையும் சந்திப்பதைத் தவிர்த்துக் கொண்டார். எப்போதும் யோக நிலையில் தனிமையில் இருக்கத் தொடங்கினார். அவரைப் பார்க்காமல் மக்கள் ஏங்கினர்.

மக்களின் மனம் அறிந்த அவர் ஒரு நாள்... ''அன்னையிடம் மிகுந்த சக்தி இருக்கிறது; அவர் என்னைப்போல் என்றும் உங்களுக்குத் துணை இருப்பார். என்னிடம் எதைப் பெற எண்ணுகிறீர்களோ அதை அன்னையிடமே பெறலாம்'' என்றார்.

இவ்வாறு கூறிய யோகி அவர்கள், ஆண்டுக்கு நான்கு முறை மக்களுக்கு தரிசனம் அளித்து வந்தார். அவ்வேளைகளில் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து குவிந்தனர். அப்போது ஆசிரமத்தின் முழுப் பொறுப்பையும் அன்னையே ஏற்றிருந்தார்கள்.

1950 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் நாள் காலை யோகி அரவிந்தர் இறையோடு இறையாகக் கலந்தார். அவர் விட்டுச் சென்ற பணிகளை அன்னை தொடர்ந்தார்....

யோகி அரவிந்தரின் பெயரில் ஆரோவில் என்ற ஓர் இடம் புதுவையில் அமைந்து உள்ளது.

இங்கே ஆன்மிக எண்ணம் கொண்டவர்களும், சுயநலத்தை விட்டவர்களும், சாதி, மத, இன உணர்வற்றவர்களும், பல்வேறு நாட்டினரும் அன்புடன் சேர்ந்து வாழ்கிறார்கள்.

யோகி அரவிந்தரின் ஆசிரமம் வாழ்வியல் நெறியை உலகிற்கு ஒளி காட்டும் கலங்கரை விளக்காகத் திகழ்வதை... நேரில் சென்று ஒரு முறை கண்டு களிப்பது, ஒவ்வொருவரின் கடமை ஆகும்.

அரவிந்தர் விடுதலை வேட்கை கொண்ட தேசிய வாதி மட்டுமல்ல, சிறந்த எழுத்தாளர். பொறுப்புமிக்க பத்திரிகை ஆசிரியர், அருமையான கவிஞராகவும் வாழ்ந்து, வாழ்வு நெறிமுறைகளைக் கண்ட யோகியாகி, மக்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். அதனால்தான் கல்வெட்டு சாசனம் போல் அவர் புகழ் இன்றும் நின்று நிலவுகிறது.

■

# 10. தமிழே உயிராய்...!

தமிழாய், தமிழர்தம் உணர்வாய், தமிழே உயிராய் வாழ்ந்தவர்...

பழகுதற்கு இனியவர்; எளியவர்; ஒளிமறைவு இல்லாதவர்; தயக்கமின்றி எதையும் கூறுபவர்; யார் என்றும் பாராது எதையும் கேட்பார். எத்தனை அளவு கண்டிப்பானவரோ அத்துணைக்கு அத்துணை குழந்தை மனம் கொண்டவர். தவறுகளைப் பட்டென்று எடுத்துக் கூறுபவர். இச்சகம் பேசுதலோ, முக தாட்சண்யம் காட்டுதலோ அவரிடம் எதிர்பார்க்க முடியாது. மனதில் தோன்றியபடியே நடந்து கொள்வார்.

எல்லா இனத்தாருடனும் எவ்வித வேறுபாடுமின்றி நட்பு கொள்வார். அவர்தான் கனக சுப்புரத்தினம் என்கிற பாரதிதாசனார்.

இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட பலருக்கும் புகலிடம் தந்து, தனக்கு ஒரு வரலாற்றுச் சிறப்பினைப் பெற்றுத் திகழ்ந்து இன்றும் சிறப்பாகப் பேசப்படும் புதுச்சேரியில்தான் பாவேந்தர் பிறந்தார்.

இவர், 29.04.1891 இல் தாய் இலக்குமி, தந்தை கனகசபைக்கு மகனாகப் பிறந்தார்.

இவரோடு பிறந்தவர்கள் - சுப்பராயன், சிவகாமி சுந்தரி, இராசாம்பாள் முதலியோர் ஆவர்.

புதுவையில் வாத்தியார் என்றே அன்போடு அழைக்கும் பெருமையை மக்களிடம் பெற்றவர்,

பாரதிதாசனார்தான். சுப்புரத்தின வாத்தியார் என்று அழைப்பதும் இவரையேதான்.

பாவேந்தர், திருப்புளிசாமி என்ற ஆசிரியரிடம் முறையாக பத்தாண்டுகள் அடிப்படை இலக்கிய இலக்கணங்களைப் பயின்றார்.

பின்னர் சாரம் பு.அ.பெரியசாமி, பங்காரு பத்தர் போன்றவர்களிடம் யாப்பு அணிகளைப் பயின்றார்.

இளம் வயதிலேயே பாடல்களை எழுதும் ஆற்றலைப் பெற்ற பாவேந்தர், தமிழ்ப் புலவர் தேர்வில், புதுவை கல்வே கல்லூரியிலேயே முதல் மாணவராக தேர்ச்சி பெற்றார். 16-ஆம் வயதில் பட்டம் பெற்றார்.

காரைக்காலிலுள்ள நிரவியில் 1909 ஆம் ஆண்டில் 'கையார்' என்ற கல்வி அதிகாரியின் உதவியால் தமிழாசிரியர் பணியில் சேர்ந்தார்.

பாரதியாரின் சந்திப்பு இருவருக்கும் இப்படித்தான் நிகழ்ந்தது.

புதுவையில், வேணுநாயகர் என்பவருடைய வீட்டுத் திருமண விழாவின் போதுதான் பாரதியாரை இவர் கனக சுப்புரத்தினமாக சந்தித்திருக்கிறார்.

அப்போதே மகாகவியின் எளிய தமிழும், தெளிந்த புலமையும், மிடுக்கான நடையும், நேர் நின்ற பார்வையையும் பார்த்த இவர், அவர் தாசனானார்.

காரைக்காலில் பணி செய்த பாவேந்தர், பின் புதுவையிலுள்ள அரசினர் கலைக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியேற்றார்.

பாவேந்தர், தமிழாசிரியராகப் பணியாற்றிய காலம் 37ஆண்டுகளாகும். இத்தனை ஆண்டுகள் ஆசிரியத்

தொழில் புரிந்த ஒரு கவிஞர் வேறு எவருமில்லை எனலாம்.

நாடு அன்னியரிடம் அடிமைப்பட்டுக் கிடந்த போது, ஆசிரியராக இருந்துகொண்டு இவரால் எப்படி விடுதலைக் கவியாகவும் விளங்க முடிந்தது?

அதற்குக் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வை இங்கே காண்போம்...

*1910* ஆம் ஆண்டிலேயே கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி.யால் கவரப்பட்டார், பாவேந்தர்.

விடுதலைப் போராட்டக் காலத்தில் தலை மறைவாக புதுவையில் தங்கியிருந்தபோது பாரதியார், அரவிந்தர், வ.வே.சு.க்கும் தேவையான பொருட் களைக் கொடுத்து உதவினார்.

எத்தனையோ முறைகள் உணவைத் தோள்மீது அணியும் துண்டால் மறைத்துச் சென்று வழங்கி யிருக்கிறார். தன் சம்பளப் பணத்தில் கணிசமான அளவும் கொடுத்திருக்கிறார்.

அவ்வேளையில்தான் பாரதியாரோடு நெருக்க மாகப் பழக வாய்ப்புக் கிடைத்தது. அந்த வாய்ப்பின் போதுதான், பாவேந்தர் தெய்வீகப் பாடல்களை எழுதத் தொடங்கினார்.

அதையடுத்து தேசிய பாடல்களையும் புனைய ஆரம்பித்தார்.

தொடர்ந்து பத்தாண்டு காலம் பாரதிக்கு மாணவராய் இருந்து உதவினார். கிண்டல்காரன், கிறுக்கன், புதுவை கே.எஸ்.ஆர்., கண்டெழுது வோன், கே.எஸ்.பாரதிதாசன் என்று பல புனைப் பெயர்களில் ஏராளமான கவிதைகளை எழுதினார்.

தொடக்க காலத்தில் சுதேசமித்திரன், ஆனந்த போதனி, தேசபக்தன், தேசோபகாரி, தேச சேவகன், புதுவை கலைமகள் போன்ற இதழ்களில் எழுதிக் குவித்தார்.

1920 ஆம் ஆண்டில் பாவேந்தர் புவனகிரி பெருமாத்தூர் பரதேசியார் மகள் பழநியம்மையை மணந்தார்.

அதே வேளையில் விடுதலைப் போராட்டத்திலும் குதித்தார்.

புதுவையில் கதரைச் சுமந்து வீதிகள் தோறும் - வீடுகள் தோறும் வெட்கம் ஏதும் கொள்ளாமல், தன் தோள் மீது கதர்த்துணி சுமந்து விற்றார்.

அப்போது கதர் ராட்டினப் பாடல்களையும் எழுதினார்.

நாடு சுதந்திரம் பெற்ற பின் தலைநிமிர்ந்த பாரதிதாசனார், விடுதலைக்குப் பின்னும், நாட்டில் அடிமைத்தனமும், சாதிக் கொடுமையும், மூடப் பழக்கமும் மலிந்திருந்ததைக் கண்டவர், புரட்சிப் பாடல்களையும், எழுச்சியூட்டும் கவிதைகளையும் எழுதத் தொடங்கினார்.

தமிழே உயிராக வாழ்ந்தவர், பாவேந்தர். தமிழ் என்று வரும்போது, அவர் மதங்களையும் சாதியையும் கடந்து நிற்பார்.

நாத்திகரான இவர், ஆத்திகரையும் போற்றி மகிழ்வார். அப்படிச் சில நிகழ்வுகள்...

புதுவையில் மாணிக்கக் கண்ணன் என்பவர் அரசு காவலராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். இவர் வைணவ மதத்தைச் சார்ந்தவர்.

பாவேந்தர் இல்லம் இருந்த பெருமாள் கோயில் தெருவின் கடைசியில் ஒரு பூந்தோட்டம். அதில் ஒரு சிறு குடில். அதில்தான் அவர் தங்கியிருந்தார்.

எப்போதும் நெற்றியில் திருமண் அணிந் திருப்பார். பணியிலும் நேர்மையாக இருப்பார்.

இவருக்கு மேல் வெண்மணி என்ற பெயரில் ஒருவர் பெரிய அதிகாரியாக இருந்தார். அவர் ஒரு கிறித்துவர்.

மாணிக்கத்திடம் ஒரு நாள், ''நாளையிலிருந்து நீ நெற்றியில் நாமம் இட்டுக் கொண்டு பணிக்கு வரக்கூடாது...'' என்று கட்டளையிட்டார்.

''நான் அணியும் சின்னத்தால் பணிக்கு என்ன இடையூறு...?''

கேட்டதும் சினந்தார் அதிகாரி. மாணிக்கக் கண்ணன், உயர் வெள்ளைக்காரர் அதிகாரியின் முன் நிறுத்தப்பட்டார்.

''என்ன இது...? நெற்றியில் ஏன் இப்படி பூசிக்கொண்டு பணிக்கு வருகிறாய்? நாளையிலிருந்து இப்படி வந்தால் பணி நீக்கம் பெறுவீர்...'' என்று கோபத்தோடு, எச்சரித்து அனுப்பினார்.

மறுநாள் மாணிக்கம் வழக்கத்திற்கு மாறாக, பெரிதான நெற்றியில் திருமண் அணிந்து அலுவலகத் திற்கு வந்தார்.

அவரைப் பார்த்த உயர் அதிகாரி கோபத்தின் குன்றேறி நின்று, ''இது என்ன...?'' என்று நாமத்தைச் சுட்டிக்காட்டி கேட்டார்.

பதிலுக்கு மாணிக்கம் அந்த வெள்ளைக்கார அதிகாரி அணிந்திருந்த சட்டைப் பட்டையில் அவர்

அணிந்திருந்த சிலுவையைச் சுட்டிக்காட்டி, ''இது என்ன...?'' என்று கேட்டார்.

அவ்வளவுதான். ''வேலையிலிருந்து இப்போதே உன்னை நீக்குவேன்...'' என்றார்.

''நீர் என்ன என்னை நீக்குவது...? நானே போகிறேன்...'' என்றபடியே முன்பே சட்டைப் பையில் எழுதி வைத்திருந்த ராஜினாமா கடிதத்தை அதிகாரியின் மேஜை மீது வீசியெறிந்துவிட்டு வெளியேறினார்.

பணியிலிருந்து விலகிய மாணிக்கக் கண்ணன் தன் தோட்டத்து மலர்களைப் பறித்து மாலையாக்கி, தினமும் பெருமாள் கோயிலுக்கு அளிப்பதையே கடமையாகச் செய்து வந்தார்.

காலையில் கடன் முடித்து நீராடி, உடலெங்கும் திருமண் அணிந்து, திருப்பாவை முதலிய பாசுரங் களைப் பாடிக்கொண்டு, துறவி நிலையில் தெருவில் நடப்பார்.

அப்போது ஒரு சிறு செம்பை தோளில் தொங்க விட்டுக் கொண்டு உஞ்சவிர்த்தி ஏற்க வரும் இவருக்கு அரிசி கொடுப்பார்கள். அவர் காலில் விழுந்து வணங்குவர்.

காலை நேரங்களில் எப்போதும் வீட்டின் முன்பகுதியில் பாவேந்தர் அமர்ந்திருப்பார்.

பெருமாள் கோயில் தெருவின் கோடியில் தமிழ்ப் பாசுரங்கள் கண்ணனின் வாயில் இருந்து அமுதாய் வழியும். அதை மெய்மறந்து கேட்டபடியே, தன் துணைவியாரை அழைத்து, அவருக்கு வேண்டிய

அரிசியைப் போடுவதோடு, காசும் கொடுத்தனுப்பு என்பார்.

இப்படி தினம் தினம் நடப்பதைக் கண்டுவந்த பாவேந்தரின் மீது அன்புகொண்ட அன்பர், "நீங்களோ நாத்திகர். பழுத்த பகுத்தறிவு கொள்கையாளர்; கடவுளை மறுப்பவர். அப்படியிருக்கும்போது கடவுள் பாடலைப் பாடிக்கொண்டு வருபவருக்கு அரிசி போடுவதோடு, காசையும் போடச் சொல்வது உங்கள் கொள்கைக்கு முரணாக இருக்கிறதே..." என்று கேட்டார்.

"அவர் பைந்தமிழில் பாடல்களைப் பாடி வருகிறார். மேலும் அவர் கொண்ட கொள்கையில் உறுதி தளராதவர். அவரின் மாறாத மனத்துணிவும், உறுதியும் வியக்க வைத்துவிட்டது என்னை.

"தான் ஏழையாக இருந்தும் கொண்ட கொள்கைக் காக அரசு வேலையையே துறந்து வந்த ஒரு மனிதரை இதுவரைப் பார்த்ததில்லை. இப்படிப்பட்டவர்களை நாம் போற்றியே ஆக வேண்டும்..." என்றார்.

பாவேந்தரின் மனித நேயத்தையும், தமிழ் மீது அவர் கொண்டிருந்த காதலையும் அறிந்து, அந்த அன்பர் மகிழ்ந்தார்.

*1950* ஆம் ஆண்டு பொங்கல் விழாவிற்காக வந்திருந்த பாவேந்தர், அண்ணல் தங்கோ இல்லத்தில் தங்கியிருந்தார்.

மாலைக் கூட்டம் தொடங்கும் முன் கூட்டத்தில் சொற்பொழிவாற்ற வந்திருந்த அறிஞர்கள் எல்லாம் கலந்து பேசிக் கொண்டிருந்தனர்.

பேச்சுவாக்கில் சென்னையிலிருந்து வந்திருந்த மயிலை சிவமுத்து, கடல் சார்ந்த நெய்தல் நிலம்தான் தமக்கு மிகவும் பிடித்தம் என்று கூறினார்.

தஞ்சைப் பகுதியிலிருந்து வந்திருந்த நீ.கந்தசாமி பிள்ளை, தமக்கு மருத நிலம் பிடிக்கும் என்றும், அதுதான் வாழ்க்கைக்கு மிகவும் உகந்தது - உயர்ந்தது என்றும் எடுத்துக்காட்டுகளுடன் கூறினார்.

சேலத்திலிருந்து வந்திருந்த பாவாணர், தமக்கு மலையும், காவனம் மிகுந்த குறிஞ்சி நிலம்தான் மிகவும் விருப்பமான இடம் என்றார்.

அறிஞர்கள் இதையெல்லாம் கேட்டுக்கொண்டு ஒருபுறத்தே இருந்த பாவேந்தரைப் பார்த்துத் தங்களுக்கு எந்த நிலம் பிடிக்கும் என்றார், திருக்குறள் முனுசாமி.

''எனக்குத்தானே... மிகவும் பிடித்தது 'தமிழ் நிலம்'. அதுதான் நாம் அனைவரும் வாழும் நிலம்'' என்றதும், அறிஞர்கள் அவரின் மனமறிந்து வியந்து போனார்கள்.

இப்படி பாவேந்தரின் இதயம் முழுவதும் தமிழ், தமிழ்நாடு என்றே எப்போதும் நிறைந்திருந்தது.

*1919* இல் பாவேந்தர் திருபுவனையில் ஆசிரியராக இருந்த வேளையில், பிரெஞ்சு அரசுக்கு எதிராகச் செயல்பட்டார் என்று குற்றம் சாட்டி, பதினைந்து மாதங்கள் சிறை பிடித்த அரசு, பின் தவறை உணர்ந்து விடுதலை செய்தது.

பாவேந்தர் திராவிடர் கழகத்திலிருந்து விலகி, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்.

அக்கழகத்தில் பொதுக்குழு உறுப்பினராகவும் இருந்தார்.

இவரது எழுச்சிமிக்க எழுத்தோவியங்கள், குடியரசு, பகுத்தறிவு, இன முழக்கம், தனியரசு, திராவிட நாடு, தாய் நாடு போன்ற இதழ்களில் வெளி வந்தன.

கவிதை, கட்டுரை, நாடகம் என்று பல நூல்களை பாவேந்தர் எழுதியதோடு, பாக்தாத் திருடன், கவி காளமேகம், வளையாபதி, ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி, சதி சுலோசனா போன்ற திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதியதோடு, கதை வசனமும் எழுதினார்.

திரைப்படங்களுக்கு எழுதியதோடு, முல்லை, குயில் என்ற பத்திரிகைகளையும் நடத்தி வந்தார்.

பராசக்தி, இரத்தக் கண்ணீர், திருப்பிப்பார், நானே ராஜா, நான் ஏன் பிறந்தேன், நம்ம வீட்டுத் தெய்வம், பொன்முடி, பஞ்சவர்ணக்கிளி, ரங்கோன் ராதா, சந்திரோதயம் போன்ற பல படங்களில் பாவேந்தரின் பாடல்கள் இடம்பெற்றன.

தான் எழுதிய 'பாண்டியன் பரிசு' திரைப்படமாக எடுக்க முயன்று, முடியாது போயிற்று.

பாவேந்தர் எழுதிய மொத்த நூல்கள் 66 ஆகும். பாவேந்தர் என்று தமிழ் நெஞ்சங்களால் அழைத்து மகிழ்ந்த - மகிழும் கவிப் பேரரசர், சென்னை அரசு மருத்துவமனையில், 21.04.1964 இல் இயற்கை எய்தினார்.

■

# 11. கணித மேதை

“என்னிடம் மூன்று வாழைப்பழங்கள் உள்ளன. அதை மூன்று பிள்ளைகளுக்கும் தலா ஒன்றாக நான் கொடுத்துவிட்டால் ஒவ்வொருவரின் கைகளிலும் எத்தனை பழங்கள் இருக்கும்?” கேட்டார், ஆசிரியர்.

படிக்கும் பிள்ளைகள் ஒவ்வொருவரிடமும் ஒரு பழம் இருக்கும் என்று பதில் வந்தது.

ஒரு மாணவன் மட்டும் ஆசிரியரிடம், “இல்லாத வாழப்பழங்களை, இல்லாத பேர்களிடம் கொடுத்தால் ஆளுக்கொரு பழம் எப்படி கிடைக்கும்?” என்று கேட்டான்.

மாணவர்களுக்கு அவனது கேள்வி நகைப்பினை ஏற்படுத்தியது. ஆனால், ஆசிரியர் அவர் கேட்ட கேள்வி சரியானதே என்றும், அதற்குரிய விடை யையும் சொன்னார்.

இதற்குரிய (INFINITE) என்பது அதாவது முடிவில்லாதது என்பதாகும்.

மேலே ஆசிரியர் கேட்ட கேள்விக்கு, பதிலாக இளமையிலேயே கேள்வி கேட்ட மாணவன் யார் தெரியுமா...? பிற்காலத்தில் கணித மேதை என்று உலகே போற்றிய இராமானுஜம்தான்.

இந்த கணித மேதை, ஈரோட்டில் பிறந்து கும்பகோணத்தில் வளர்ந்தவர். தந்தையாரின் பெயர் சீனிவாசய்யங்கார். தாயாரின் பெயர் சக்கட்டி கோமளத்தம்மாள். இவர் தந்தை பட்டுத்துணி கடை ஒன்றில் எழுத்தராக பணிபுரிந்தார்.

உலகம் முழுதும் உள்ள அறிஞர் பெருமக்களால் புகழ்ந்து பேசப்பட்ட இராமானுஜர், மூன்று வயது வரை பேச முடியாத ஊமை நிலையில் இருந்தார்.

ஆமாம், சிறு வயதில் இவருக்கு வந்த பெரியம்மை நோயின் காரணமாகத்தான் அந்த நிலைக்கு ஆளானார். பின், காலப்போக்கில் குணம் பெற்றார்.

எப்படி? இராமானுஜருக்குப் பேச்சு வரவேண்டும் என்பதற்காக அவர் தம் பாட்டனார் அட்சராப்பியாசம் செய்தார்... எழுத்துக்களை அரிசியில் எழுதப் பழக்கினார். அதே நிலையில் காஞ்சியில் ஒரு திண்ணைப் பள்ளியில் சேர்த்து விடப்பட்டார்.

பிறகு, ஐந்து வயதில் காஞ்சியில் இருந்து கும்பகோணம் வந்து இருந்து தன் கல்விப் பயணத்தைத் தொடர்ந்தார்.

அந்த வயதிலேயே ஆசிரியரை மிஞ்சிய மாணவராகத் திகழ்ந்தார், இராமானுஜம். ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

கணிதப் பாடத்தில் மட்டுமல்லாது அனைத்துப் பாடங்களிலும் முன் நின்றார்.

கும்பகோணத்தை அடுத்துள்ள காங்கேயம் என்ற சிற்றூரில் ஐந்தாம் வகுப்பு வரை படித்து வந்த இவர்,

பின்னர் (1898) கும்பகோணம் நகர உயர்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பில் சேர்த்துவிடப்பட்டார்.

அங்கும் கல்வியில் முதல் நிலையில் திகழ்ந்தார். அப்போதெல்லாம், ஆரம்ப கல்விக்குப் பிறகு அரசுத் தேர்வு நடைபெறும். அப்படி நடந்த தேர்வில் தஞ்சை மாவட்டத்திலேயே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார்.

இப்படி கல்வியில் உயர்ந்து கொண்டிருந்த இராமானுஜத்தின் குடும்பமோ வறுமைப் பள்ளத் தாக்கில் இறங்கிக் கொண்டிருந்தது.

குடும்பத்தில் வறுமையின் பிடியில் இறுகிக் கொண்டு வருவதைக் கண்டு மனம் கலங்கிய இராமானுஜம், ஒரு நாள் வீட்டை விட்டே வெளியேறி விட்டார்.

மகனைக் காணாது மனம் கலங்கிய பெற்றோரும், உற்றார்களும் அவரைத் தேடத் தொடங்கினார்கள்.

இப்படித் தேடத் தொடங்கியவர்களுள், அவரது நண்பன் அனந்துவும் ஒருவன். கும்பகோணம் முழுதும் கவலையோடு தேடியலைந்தார்கள். கடைசியில் சாரங்கபாணிக் கோயிலில் அவர் படுத்து இருப்பதைக் கண்டு, தூங்கிக் கொண்டிருந்த அவரை, நண்பன் அனந்து எழுப்பினான்.

தூக்கம் விட்டு எழுந்த இராமானுஜம், ''அடே அனந்து, நல்ல கனவு கண்டு கொண்டு இருந்தேன்... அதில் கணக்குத் தீர்வு வந்தது. என்னை எழுப்பிக் கெடுத்துவிட்டாயே...'' என்று வருத்தப்பட்டுக் கொண்டார்.

இப்படி தான் கண்ட கனவுகளை எல்லாம் குறித்து வைக்கின்ற பழக்கத்தை இளமையிலேயே கைக் கொண்டிருந்தார், இராமானுஜர்.

இதன் காரணமாக இவர் ஒன்பதாம் வகுப்பு படிக்கும்போதே பி.ஏ. பாடத்திற்குரிய கணக்குகளைப் போடுகின்ற ஆற்றலைப் பெற்றிருந்ததால், பள்ளியில் ஆசிரியர் பெருமக்களிடமும், பெற்றோர்களிடமும் பாராட்டையும், ஆசியையும் பெற்றார்.

இப்படி வாழ்த்தப் பெற்ற இவர், தனது பதினைந்தாவது வயதில் THEOREMS என வழங்கப் படுகின்ற தேற்றங்களில் 6000த்தை மனப்பாடம் செய்திருந்தார் என்பதோடு, புதிய தேற்றங்களை தானே உருவாக்கிக் காட்டக் கூடிய ஆற்றலையும் பெற்றிருந்தார் என்பது வியப்புக்குரிய ஒன்றாகும்.

இந்த வியப்புக்குரிய செயலில் மிகவும் போற்றத் தக்கது என்னவென்றால், அந்த வயதில் அவர் கண்டறிந்த ஜியோமிதி துணை கொண்டு பூமத்திய ரேகையின் சுற்றளவைத் தானே கண்டு கொண்டதே ஆகும்.

1903-இல் மெட்ரிகுலேஷன் தேர்வில் சிறப்பாக வெற்றி பெற்ற நிலையில் கும்பகோணம் கல்லூரியில் எம்.ஏ. படிப்பில் சேர்ந்த வேளையில் JUNIOR SUBRAMANIAM SCHOLARSHIP கிடைத்தது.

கணிதப் பாடத்தில் இருந்த விருப்பமும் ஆர்வமும் மற்ற பாடங்களில் இவருக்கு இல்லை. அதனால், கணிதத்தில் மட்டும் நூற்றுக்கு நூறு வாங்கினார். ஆங்கிலத்தில் தோல்வியே கண்டார். இதனால் உதவித்

தொகையும் தடைபட்டது. எம்.ஏ.வை கஷ்டப்பட்டு எழுதியும் தோல்வியையே தழுவினார்.

அதனால் மனம் உடைந்து போனார். இந்த நிலையில் நடப்பது நடக்கட்டும் என்றபடி இராமானுஜரின் 21 வயதில் 9 வயதே நிரம்பிய ஜானகி என்ற பெண்ணை (சிறுமியை) மணம் முடித்து வைத்தார்கள்.

இந்த நிலையில் மேலே படிக்க முடியாமல் வேலை தேட முனைந்தார், இராமானுஜம். பேராசிரியர் இராமசாமி அய்யர் மூலமாக சென்னையில் இருந்த ACCOUNTANT GENERAL அலுவலகத்தில் இவருக்குத் தற்காலிக வேலை ஒன்றும் கிடைத்தது.

குடும்ப நிலையை உணர்ந்து, அலுவலக நேரம் போக மீதி நேரத்தில் பள்ளிப் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்தும் பணம் சம்பாதித்தார்.

பின்னர், சென்னைத் துறைமுகத்தில் எழுத்தர் பணியில் 1912-இல் சேர்ந்தார். அவ்வேளையில் துறைமுகத்தின் தலைவராக இருந்த சர் பிரான்சிஸ் ஸ்பிரிஸ், இராமானுஜரின் கணித ஆற்றலைக் கண்டு, கேம்பிரிட்ஜ் டிரினிட்டி கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்த பேராசிரியர் வாக்கரிடம் அறிமுகம் செய்து வைத்தார்.

இந்த நிலையில் கேம்பிரிட்ஜ் டிரின்ட்டி கல்லூரி பேராசிரியர் ஜி.எச். ஹார்டிக்கு கணிதப் பாடம் ஒன்றில் ஐயம் ஏற்பட்டுள்ளதை அவர் பல்கலைக் கழக வெளியீட்டு பத்திரிகையில் விளம்பரப்படுத்தி யிருந்தார்.

சேது அய்யர் வழியாக அதை அறிந்த இராமானுஜம், ஹார்டியின் ஐயத்திற்கு விடை தருவதாக எழுதியதோடு, தமது தேற்றங்களையும் அத்தோடு அனுப்பி வைத்தார்.

இராமானுஜத்தின் ஆற்றலைக் கண்டு வியந்து போன ஹார்டி, அவரை இலண்டனுக்கு வருமாறு அன்போடு வேண்டி கடிதம் எழுதினார்.

அங்கு வர இயலாத தன் நிலையை எழுதி, தனது கணித ஆய்வுக்கு வேண்டிய பொருளாதார உதவி செய்தால் போதும் என்ற நிலையில், பதில் கடிதம் விடுத்தார்.

அக்கடிதத்தைக் கண்ட ஹார்டியின் மனம் மிகுந்த வேதனைப்பட்டது. அவ்வேளையில் நெவில்லி என்ற பேராசிரியர் சென்னை பல்கலைக் கழகத்திற்கு சொற்பொழிவாற்ற வந்தவரிடம், 'ஒரு முறை இராமானுஜத்தை இலண்டன் வந்து தன்னைப் பார்த்து செல்லும்படி சொல்லி அனுப்பினார்.

ஹார்டியின் விருப்பப்படியே **1914**-இல் அங்கே கிடைத்த மிகுந்த பொருளாதார உதவியினால், கவலையற்ற நிலையில் தம் ஆய்வில் ஈடுபட்டார், இராமானுஜர்.

அங்கே, இவ்ரின் கணித ஆற்றலைக் கண்டு அறிஞர் பெருமக்கள் வியந்து போனார்கள். பல பட்டங்களும், விருதுகளும் அவரைத் தேடி வந்தன. கணிதம் குறித்த பல ஆய்வுக் கட்டுரைகளை பத்திரிகையில் எழுதி வந்தார்.

**30** வயதில் F.R.S. என்கிற மிக உயர்ந்த பட்டமும் இவருக்குக் கிடைத்தது.

இதற்காக இவருக்கு வரிவிலக்கோடு 250 பவுன்கள் ஆறு ஆண்டுகளுக்கு உதவித்தொகையாக வழங்கப்பட்டது. அவர் பெற்ற இந்தப் பேரு இந்தியாவிற்கு கிடைத்த ஒன்றாகும்.

இலண்டனின் வெப்ப தட்ப நிலையும், தானே சமைத்து உண்கின்ற நிலையும் இருந்ததால், அங்கே அவர் தொடர்ந்து இருக்கின்ற நிலையை ஏற்படுத்தி விட்டது.

இந்த நிலையிலும் ஆராய்ச்சியினைத் தொடர்ந்து செய்து வந்ததோடு, தாம் உண்டாக்கிய புதிய கணிதப் புதிருக்கான விடைகளை எல்லாம் குறித்து பாதுகாத்த தோடு, பிறர் கேட்கும் கணிதம் குறித்த வினாக் களுக்கும் விடை சொல்லுவார்.

இதன் வழியே இவரது கணிதப் புலமை வெளிப்பட்டு புகழ் பெற்றார்.

இராமானுஜரின் புகழையும், கணிதத்தில் அவருக்குள்ள ஆற்றலையும் முழுமையாக உணர்ந் திருந்த பேராசிரியர் ஹார்டி, ''இந்தியா திரும்பும் இராமானுஜருக்கு, அவரின் கணித ஆய்வுக்கும், வாழ்க்கை மேம்பாட்டிற்கும் உதவும் வகையில், சென்னைப் பல்கலைக் கழகம் செயல்பட வேண்டும்' என்று கடிதம் வழியே தன் எண்ணத்தை வெளிப் படுத்தினார்.

அதன்படியே கணிதமேதை தாயகம் வந்ததும், பெருமிதத்தோடு சென்னைப் பல்கலைக் கழகம் 250 பவுன் அளிக்க முன் வந்தது. அதை அப்படியே கல்வி மேம்பாட்டிற்கு இராமானுஜர் வழங்கி மகிழ்ந்தார்.

இந்த வேளையில் இவரை காச நோய் பற்றிக் கொண்டது. இருந்த போதிலும் தமது ஆய்வினை தொய்வின்றி தொடர்ந்து செய்து வந்தார்.

1919-இல் இராமானுஜர் தாயகம் திரும்பினார். இவர், நோய் கண்டிருப்பதை அறிந்து ராவ்பகதூர் நம் பெருமாள் செட்டியார் மிகவும் கவலைப்பட்டார்.

அதோடு நில்லாமல் தமது பெரிய பங்களாவை அளித்ததோடு, மருத்துவச் செலவிற்கு வேண்டிய பணத்தேவைகளையும் ஏற்றார்.

முன்பே நோயின் தாக்கம் அதிகமாக அவரைத் தாக்கி இருந்ததால், அவர் நோயை கட்டுப்படுத்த முடியாது இருந்தது. அதனால், அவர் அடிக்கடி தன் நிலையை இழக்க வேண்டியவராக இருந்தார்.

உற்றவரும், கற்றவரும் கணித மேதையை வந்து கண்டு கொண்டும், சென்று கொண்டும் இருந்தனர்.

அவரின் அன்பு இல்லத்தரசி ஜானகி, கண்ணை இமை காப்பது போல் அவருக்குத் தேவையான எல்லாவித உதவிகளையும் இதயத்தில் கவலைகளைச் சுமந்தபடியே செய்து வந்தார்.

கணித உலகில் கணக்கற்ற சாதனைகளைச் செய்த இந்த அறிவுலக மேதை - இந்தியாவின் பெருமையை உலக அரங்கிலே பேச வைத்த பெருமகனார், 1920-இல் இயற்கை எய்தினார். அப்போது அவருக்கு வயது - 32.

■

## 12. அறிவியல் அறிஞர்

புகழ் பெற்ற அறிவியலாளர்களும், அறிஞர் பெருமக்களும் மிகுந்த ஆர்வத்தோடு கூடியிருந் தார்கள்...

எங்கே...? ஏன்...?

'மனித இனத்தைப் போன்றே, தாவர இனத்துக்கும் உணர்ச்சிகள் உண்டு' என்பதை 1901-ஆம் ஆண்டு மே மாதம் 10-ஆம் நாள் இலண்டனிலுள்ள ராயல் சொசைட்டியில் முதன் முதலாக ஓர் அறிவியல் உண்மையை அறிந்து கொள்ளத்தான் அப்படி மக்கள் குழுமியிருந்தார்கள்.

இவ்வாறு... இலண்டன் மாநகரிலே இருந்து, இந்தியாவின் பெருமையைப் பேச வைத்தவர் சர்.ஜகதீஸ் சந்திரபோஸ்தான்.

இன்று, வங்க நாட்டிலுள்ள டாக்டா (மெய் மென்சிங்) என்ற இடத்தில் 30.11.1858 அன்று பிறந்தார்.

இந்திய கலாச்சாரத்தில் இதயம் முழுதும் இணைந்து இருந்த ஒரு நல்ல குடும்பத்தில் இவர் பிறந்தார். அதில் முழு அளவில் நம்பிக்கை வைத்து இரவு பகலாக பாடுபட்டு வெற்றியைப் பெருகின்ற தன்மை கொண்டிருந்தார், போஸ்.

இவர் தொடக்கக் கல்வியை பரித்பூரிலும், பள்ளிக் கல்வி கொல்கத்தாவிலுள்ள செயின்ட் சேவியர் பள்ளியிலும் படித்தார்.

இந்தியாவில் புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களில் ஒன்றான கொல்கத்தா பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பி.ஏ.இயற்பியல் பட்டம் பெற்றார்.

பின்னர் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பி.எஸ்ஸி.பட்டம் பெற்றார்.

இலண்டனில் படித்து முடித்து இந்தியா திரும்பிய போஸிற்கு கொல்கத்தா மாநிலக் கல்லூரி மகிழ்ச்சியோடு விரிவுரையாளர் பதவியை அளித்து சிறப்பித்தது.

அக்காலத்தில் பல்கலைக் கழகங்களில் பெரும்பாலும் ஆங்கிலேயர்களே இருந்தனர். அவர்களுக்கு சம்பளமும் அதிகம் வழங்கப்பட்டது. அப்படி அவர்கள் வாங்கிய சம்பளத்திற்கும் குறைவாகவே போஸிற்கு வழங்கப்பட்டது.

அப்படி குறைவாக வழங்கப்பட்ட ஊதியத் தொகையை நாகரிகத்தோடு வாங்க மறுத்துவிட்டு, ஊதியம் கொஞ்சமும் பெறாமலேயே உழைத்து வந்தார்.

ஆங்கிலேயர்களை விட இந்தியர்களாகிய நாங்கள் ஒன்றும் அறிவில் குறைந்தவர்களில்லை என்பதை அவர்களே உணரும் நாள் வரும் என்று அமைதியாக பணியாற்றிக் கொண்டிருந்தார்.

இப்படி இவர் அமைதி காத்துப் பணிபுரிந்தது ஒரு மாதம் இரு மாதம் அல்ல... மூன்று ஆண்டுகள்.

இவரது அறிவிற்கும், அமைதிக்கும் ஒரு நாள் உயர்வு கிடைத்தது. ஆமாம், போஸின் பேராற்றலை உணர்ந்தவர்கள், மூன்று ஆண்டுகளாக கொடுக்கப் படாமல் இருந்த முழு சம்பளத்தையும் கொடுத்தனர்.

அறிவியல் அறிவுத் தேடலிற்காக பாரீஸ், பிரான்ஸ், ஜெர்மன், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து வந்தார்.

'மின்சாரக் கதிர் வீச்சு' பற்றி ஆராய்ச்சி செய்து 1896-இல் இலண்டன் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றார்.

நான்கு ஆண்டுகள் செடி, கொடிகளைப் பற்றி ஆய்வு செய்து, தனது முடிவை வெளியிட்டார்.

தாவரங்களுக்கும் உணர்ச்சி உண்டு... தாவரங் களுக்கும் மனிதரைப் போன்று களைப்பு ஏற்படுகின்றன. நஞ்சை செலுத்தினால் அதுவும் செயல் இழந்து போகும். விலங்குகளைப் போலவே செடிகளும் நடந்து கொள்கின்றன; வளர்கின்றன என்பதை எல்லாம் கண்டார்.

இந்தத் தாவரவியல் ஆய்வினை இலண்டன் மாநகரில் கற்றோர் முன்னிலையில் செய்து காட்டினார். எப்படி...?

போஸ் உயிருள்ள செடி ஒன்றினை எடுத்தார். அங்கே முன்பே 'ப்ரோமைட்' என்னும் விஷக் கலவையை ஒரு கண்ணாடிக் குடுவையில் கலந்து வைத்து இருந்தார்.

அந்த விஷக் கலவையில், தான் கையில் வைத்திருந்த செடியின் வேர்களை நனையும் படி வைத்தார்.

இச்சோதனைக்காகவே, செடிகளின் உணர்வு களை நன்கு பதிவு செய்து காட்டும் கருவி ஒன்றினை அவரே கண்டுபிடித்திருந்தார்.

இக்கருவியின் செயல்பாடுகள் என்னவெனில்... வெளிப்புறத் தூண்டுதலினால் செடி, கொடிகளுக்கு ஏற்படக் கூடிய மிகவும் துல்லியமான உணர்ச்சிகளை காட்டக்கூடிய ஒன்றாகும்.

இக்கருவிதான் தாவரங்களுக்கும் மற்ற உயிரினங் களுக்கும் உள்ள பல்வேறு ஒற்றுமைகளைக் கண்டறிய போஸிற்கு துணை நின்றது.

இக்கருவியை கண்ணாடிக் குடுவையில் வைத்திருந்த செடியுடன் இணைத்தார்.

அந்த நிலையை திரையில் விழுந்த வெளிச்சத்தை எல்லோரும் பார்த்திடச் செய்தார்.

அச்செடியின் நரம்புகள் துடித்தது. அத்துடிப்பு ஊஞ்சலைப் போல ஆடுவதைக் காட்டிற்று.

இந்த ஆட்டம் படிப்படியாக உயர்ந்து, பின் நின்றே விட்டது. விஷத்தைத் தின்ற பிராணியைப் போல செடியின் நிலையும் ஆகிப்போனது.

கண்ணாடிக் குடுவையிலிருந்த விஷம் அச்செடியை இறக்கச் செய்துவிட்டது.

அதைக் கண்டு அங்கே அரங்கிலே கூடி இருந்த அறிவியல் ஆய்வாளர்களும், அறிஞர் பெருமக்களும் மகிழ்ச்சி பொங்க குரல் எழுப்பி, கை தட்டி ஆரவாரம் செய்தனர்.

இவரின் புகழை அன்றே உலகம் உணரத் தொடங்கிவிட்டது.

*1900*-இல் பாரீஸில் நடந்த அறிவியல் பேரவையில், இவரது கண்டுபிடிப்பான 'க்ரெஸ்கோக்ராப்'-ஐ அறிவியல் மேதைகள் வியந்து பாராட்டினார்கள்.

*1902*-இல் உயிருள்ள, உயிரற்றவைகளில் எதிர் உணர்ச்சி' என்னும் நூலையும்,

*1911*-ஆம் ஆண்டிலிருந்து இவர் பல பட்டங்களையும், பதவிகளையும் பெற்றார்.

இந்த ஆண்டில் சி.எஸ்.ஐ.பட்டத்தை இந்திய அரசு தந்து சிறப்பித்ததோடு - *1917*-இல் 'சர்' பட்டமும் அளித்து பெருமைப்படுத்தியது.

*1920*-ஆம் ஆண்டு இலண்டனில் உள்ள ராயல் அறிவியல் கழகம், போஸை உறுப்பினராகச் சேர்த்து அவருக்குப் புகழைத் தந்தது.

*1926*-இல் 'தாவரங்களின் நரம்பு மண்டல இயக்கம்' என்ற நூலையும் வெளியிட்டார்.

*1927*-இல் அறிவியல் காங்கிரஸிற்கு தலைமை ஏற்று சிறப்பிக்கும் வகையிலே... அவரது அறிவியல் தேடலும் கண்டுபிடிப்புகளும் அவரை உயர்த்தி வைத்தது.

பின்னர், தமது வாழ்நாளில் தன் பெயரிலேயே ஓர் ஆய்வு நிறுவனத்தை கொல்கத்தாவில் நிறுவினார். இந்நிறுவனம் இன்று உலகப் புகழ் பெற்ற ஒன்றாகக் கருதப்படுகிறது.

இந்த அறிவியல் மேதை *1937*-ஆம் ஆண்டு நவம்பர் *23*-இல் இயற்கை எய்தினார்.

■

## 13. கல்விக் கண் தந்தவர்...!

எட்டையபுரத்தில் இலவச மதிய உணவுத் திட்டத் தொடக்க விழா. எட்டையபுரம் அரசர் முன்னிலையில் 'அந்த'த் தலைவர் பார் போற்றும் அத்திட்டத்தைத் துவக்கப் போய்க் கொண்டிருந்தார்.

அப்போது அவருடன் சென்றவர்களில் ஒருவர், "மதிய உணவுத் திட்டத்திற்கு நம் நிதிநிலை சரியாக வருமா? பல இலட்சம் குழந்தைகளுக்கு சோறு போட முடியுமா?" என்று கேட்டார்.

அதற்கு அன்றைய முதலமைச்சராக இருந்த 'அவர்' பதில், அங்கு கூடியிருந்த அரசு அதிகாரிகளை வியப்பில் ஆழ்த்திவிட்டது.

'அவர்' அப்படி என்ன சொன்னார்? 'அவர்' சொன்னது இதுதான்...

"பிள்ளைப்பசி கொள்ளித்தேள்" என்பார்கள். தேளை வயித்திலே வைத்துக் கொண்டு எப்படிப் படிப்பது? சோறு போடு, கல்வி தானாக வரும். இலவச மதிய உணவுத் திட்டமே காந்தி கண்ட வழி.

"நம் ஏழைப் பிள்ளைகள் இலவச ஏணியில் ஏற நாம் கை கொடுக்க வேண்டும். இத்திட்டம் தேவையா, இதற்கு பணம் இருக்கிறதா என மேட்டுக்குடி மக்கள் நிச்சயம் கேட்பார்கள். அவர்களுக்குச் சொல்லிக்

கொள்ள விரும்புகிறேன். நான் இத்திட்டத்தை யார் எதைச் சொன்னாலும் கைவிடப் போவதில்லை.

‘‘நாட்டு மக்களிடம் வீடு வீடாகச் சென்று கையேந்தி பிச்சை கேட்டாவது நிதி பெற்று இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி, ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு தந்தே தீருவேன்...’’ என்றார்.

யார் அந்தத் தலைவர்? கர்மவீரர் காமராஜ் அவர்கள்தான்!

இவர் சிந்தனையும் செயலும் எப்போதுமே ஏழைகளிடம்தான் இருந்தது என்பதற்கு எடுத்துக் காட்டாக இரண்டு நிகழ்வுகளை இங்கே காண்பது சிறப்பு.

வானம் பார்த்த பூமியென்றும், தண்ணீரில்லா தரிசு நிலம் என்றும் பேசப்படும் இராமநாதபுரம் மாவட்டத்தில் 1955 ஆம் ஆண்டு அடை மழையாய் பேய் மழை பெய்து வெள்ளக்காடாய் போனது ஊர். ஆயிரக்கணக்கான குடிசைகள் வெள்ளத்தில் மிதந்து போயின; சில மூழ்கிப் போயின.

அந்த நேரத்தில் தமிழக முதல்வராக இருந்தவர் காமராஜர்தான்.

வீடிழந்து, ஒன்றிரண்டு இருந்த பொருள்களையும் இழந்து, நாதியற்ற நிலையில் மரத்தடியிலும், மண் மேடுகளிலும் பசி பட்டினியோடு பாட்டாளி மக்கள் அவதிப்பட்ட நிலையில் தள்ளப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டு ஏழைகளின் தலைவராய் இருந்து வந்த காமராஜர் அங்கே விரைந்தார்.

மறுகணமே வெள்ள நிவாரணப் பணிகளைத் தீவிரப்படுத்திவிட்டு, ஏழை பாட்டாளிகளையெல்லாம் நேரில் பார்த்து ஆறுதல் கூறிட முடிவு செய்தார். அதன்படியே அரசு அதிகாரிகளோடு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார்.

லாரிகளிலும், ஜீப்புகளிலும் பாதிக்கப்பட்ட பாட்டாளி மக்களுக்கு உணவுப் பொருள்களையும், துணிமணிகளையும் எடுத்துக்கொண்டு, பாதிக்கப் பட்ட எல்லா கிராமங்களுக்கும் நேரடியாகச் சென்று மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறிவந்தார்.

அப்போது ஓர் ஊரின் பெயரைச் சொல்லி, அந்த கிராமம் எல்லாப் பகுதிகளிலும் தண்ணீரால் சூழப் பட்டு, ஒரு தீவைப்போல் இருக்கிறது. வெளியாட் களும் அங்கு போக முடியவில்லை; அங்கிருப்பவர் களும் வெளியேற முடியாத நிலையில் இருப்பதால், அக்கிராம மக்கள் மிகவும் கொடுமையான நிலையில் குழந்தை, குட்டிகளோடும், பசியோடும் அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை ஒருவர் சொன்னதுதான் தாமதம்.

அடுத்த நொடியே, அந்த ஊருக்குச் சென்று மக்களுக்கு உதவ வேண்டும் என்று விரும்பிய காமராஜர், அங்கே புறப்பட்டார்.

அந்த ஊரின் எல்லையை நெருங்கும்போது, இருந்த ஒரு பாலமும் இடிந்து, யாரும் ஊருக்குள் செல்ல முடியாது வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதைக் கண்ட அதிகாரிகள் எல்லோரும் திகைத்து நின்று போனார்கள்.

ஓர் அதிகாரி காமராஜரை நெருங்கி, ‘‘ஐயா, இனிமேல் கார் செல்ல முடியாது...’’ என்று தயங்கியபடியே சொன்னார்.

‘‘அதனால் என்ன...?’’ என்று திருப்பிக் கேட்டார்.

‘‘ஒண்ணுமில்லேங்க ஐயா... இந்த ஊர் மக்களுக்கு வேண்டிய உதவிகளை செய்ய நாங்க ஏற்பாடு செய்கிறோம். நீங்க இன்னும் நிறைய கிராமங்களைப் பார்க்க வேண்டியிருக்கே...’’

அந்த அதிகாரி சொல்ல வந்ததை சொல்லி முடிப்பதற்குள், காமராஜருக்கு கோபம் வந்துவிட்டது. ‘‘உங்க மேலே எனக்கு நம்பிக்கையுண்டு. நீங்களும் செய்வீர்கள். அது எனக்குத் தெரியும். கோட்டைலே இருந்து உத்தரவு போட்டுவிட்டு, அங்கேயே உட்கார்ந்து கொள்ளாமல் நான் இங்கே எதற்காக ஓடி வரணும்...?

‘‘கஷ்டப்படுற மக்கள்கிட்டே நேர்ல வந்தா அவங்களுக்கு ஓர் ஆறுதல்... நம்ம கஷ்டங்களைத் தெரிஞ்சு நமக்கு ஆறுதல் சொல்ல ஆட்கள் இருக்கிறார்கள் என்று அவங்களுக்கு ஒரு தைரியம் பிறக்கும்; நிம்மதி கிடைக்கும்.

‘‘அதுக்காகத்தானே நான் நேர்லயே வந்தேன். இப்போ கார் போகாதுன்னு தெரிஞ்சதும் உடனே இந்த மக்களைப் பார்த்து ஆறுதல் சொல்லாமல் திரும்பிப் போயிடறதா...?

‘‘இந்த ஊருக்குள்ளே வெள்ளம் புகுந்து, எவ்வளவு மக்கள் கஷ்டப்பட்டுக்கிட்டு இருக்காங்க... அவங்க கஷ்டத்துல நாமலும் கொஞ்சம் பங்கு

எடுத்துக்கிட்டா என்ன கஷ்டம் வந்திடப் போவுது? வாங்க... வாங்க... போகலாம்...'' என்று கோபத்தோடு அதிகாரிகளைப் பார்த்து கூறிக்கொண்டே, தோளில் கிடந்த துண்டை எடுத்து தலையில் முண்டாசாகக் கட்டிக் கொண்டு, வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு நடக்கத் தொடங்கினார், காமராஜர்.

பிறகு என்ன? அதிகாரிகளும் அவரது செயலைக் கண்டு அதிர்ச்சியோடு பின் தொடர்ந்து நடக்கத் தொடங்கினார்கள்.

அங்கிருந்த மக்கள் அனைவருக்கும் நேரில் ஆறுதல் கூறினார். அவர்களுக்கு வேண்டிய உதவிகளை உடனடியாக செய்து முடித்தார்.

காமராஜர், ஏழை மக்களின் மீது கொண்டுள்ள அன்பும், பாசமும் அளவிட முடியாத ஒன்றாக இருந்தது.

அவரது எளிமையையும், பண்பையும் கண்டு வியக்காதவர்களே இல்லை என்று கூறலாம்.

உதாரணத்திற்கு இந்த நிகழ்ச்சியைக் கூறலாம்.

∴ ∴ ∴

**தூ**த்துக்குடி சட்டசபைத் தொகுதியில் இடைத் தேர்தல் நடைபெற்றபோது, தேர்தல் பிரச்சாரத்திற்காகச் சென்றிருந்தார், காமராஜர்.

அப்போது காங்கிரசுக்கும், தி.மு.க.விற்கும் இடையே கடுமையான போட்டி நிலவிய நேரம் அது.

அதனால், காமராஜர் வழக்கம் போல் ஒவ்வொரு கிராமமாகச் சென்று மக்களை நேரில் சந்தித்து ஓட்டு சேகரித்தார்.

ஒரு கிராமத்திற்குச் சென்றபோது, பகல் ஒரு மணி ஆகிவிட்டது. கொளுத்தும் வெய்யில் வேறு.

சற்று நேரம் ஓய்வு எடுக்க விரும்பிய காமராஜர், ஒரு குடிசை வீட்டின் முன்புறம் இருந்த திண்ணையில் உட்கார்ந்தார்.

அதைக்கண்டு, அவ்வூரில் இருந்த ஏழைப் பெண்கள் எல்லாம் கூடி வந்து, கும்பிட்டார்கள். அவரும் கும்பிட்டுவிட்டு, ''காங்கிரசுக்கு ஓட்டு போடுங்கள்...'' என்று கேட்டுக் கொண்ட காமராஜர், ஓர் ஏழைப் பெண்ணைப் பார்த்து, ''நீச்சத்தண்ணி இருந்தா கொஞ்சம் கொண்டாம்மா...'' என்று கேட்டார்.

அந்தப் பெண் ''மோர் வாங்கித் தருகிறேன்...'' என்றாள்.

''வேண்டாம்மா... உங்க வீட்டுல இருக்கிற நீச்சத்தண்ணியைக் கொண்டாம்மா. அது எனக்குப் போதும்...!'' என்று சொல்லி, ஒரு தம்ளர் வாங்கிக் குடித்துவிட்டு, தமது பிரச்சாரத்தைத் தொடர்ந்தார்.

இதைக்கண்ட கிராம மக்கள் அனைவரும் அப்படியே மலைத்துப் போய்விட்டனர்.

தன்னலம் கருதாத பெரும் தலைவராகவும், தேசப்பற்று மிகுந்தவராகவும், செயல்திறம் மிக்கவராகவும், ஏழைகளின் இதயம் கவர்ந்தவராகவும் வாழ்ந்த காமராஜரைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாக இங்கே காண்போம்.

காமராஜர், குமாரசாமி - சிவகாமி தம்பதியர்களின் மகனாக 15-07-1903 அன்று பிறந்தார். விருதுநகரில் பிறந்த இவர், வாணிப சமூகத்தைச் சார்ந்தவர்.

ஆறு வயதில் தந்தையை இழந்த இவரை, தாய் சிவகாமி அவர்களே கண்ணைப்போல் பாதுகாத்து போற்றி வளர்த்து வந்தார்.

ஆறாவது வரை விருதுநகரில் இருந்த தொடக்கப் பள்ளியில் படித்து வந்தார். படிப்பு அத்தோடு முடிந்தது. தொழிலைக் கற்றுக் கொள்ள திருவனந்த புரம், போடி நாயக்கனூர் போன்ற ஊர்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டார்.

தொழிலை ஓரளவு கற்றுக்கொண்டு திரும்பி வந்த காமராஜரை உள்ளூரிலேயே பணியமர்த்தினார்கள்.

அந்த வேளையில், அங்கு நடக்கும் காங்கிரஸ் கூட்டங்களுக்கெல்லாம் தவறாமல் சென்று வந்தார்.

தமிழ்ப் பெரியார் திரு.வி.கல்யாணசுந்தரனார், இராஜாஜி, வ.உ.சிதம்பரனார், தீரர் சத்தியமூர்த்தி போன்றோருடைய சொற்பொழிவுகளைக் கேட்டு, அரசியல், விடுதலை உணர்வை தம்முள் வளர்த்துக் கொண்டார்.

*1919*இல் காந்திஜி தொடங்கவிருந்த சத்தியாக் கிரகத்திற்காக பாடுபடத் தொடங்கினார், காமராஜர்.

அடுத்து, காந்திஜி தொடங்கிய சட்ட மறுப்பு இயக்கத்தில் முழு மூச்சாக ஈடுபட்டு, இளைய அரசியல்வாதியாகத் தம்மை ஆக்கிக் கொண்டார்.

அடுத்து, உப்பு சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று, இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனையை பெல்லாரி சிறையில் கழித்தார்.

காங்கிரசில் இராஜாஜி கோஷ்டி என்றும், தீரர் சத்தியமூர்த்தி கோஷ்டி என்றும் இரண்டு அணி இருந்தன.

செயல் தீரமிக்க இளைஞர்களையும், தன்னலம் கருதாத தொண்டர்களையும், பாட்டாளித் தோழர் களையும் பெற்றிருந்த சத்தியமூர்த்தியின் அணியில் காமராஜர் இணைந்து கொண்டு, அரசியல் பணிகளைச் செய்யத் தொடங்கினார்.

ஜாமீன் வழக்கொன்று 1931 இல் காமராஜர் மீது தொடரப்பட்டது. இவ்வழக்கில் ஓராண்டு சிறை தண்டனை அளிக்கப்பட்டு, வேலூர், திருச்சி சிறைகளில் தண்டனை காலத்தைக் கழித்தார்.

ஸ்ரீவில்லிபுத்தூர் காவல்நிலைய வெடிகுண்டு வழக்கு ஒன்றும் ஜோடிக்கப்பட்டு போடப்பட்டது.

இப்படி அடிக்கடி வேண்டாத வழக்குகளில் எல்லாம் காமராஜரை ஈடுபடுத்திய காரணத்தால், அவருடைய குடும்பச் சொத்தில் பெரும்பகுதி கரைந்தே போய் விட்டது.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக 1936இல் சத்தியமூர்த்தி தேர்ந்தெடுக்கப்பட்டார். காமராஜர் காரியதரிசி பொறுப்பேற்றார். அரசியலிலும் அமோகமாக வெற்றி பெறத் தொடங்கினார் என்றே சொல்ல வேண்டும்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக சத்தியமூர்த்தியும், காரியதரிசியாக காமராஜரும் தங்கள் பணியைத் தொடங்கினர்.

காமராஜரின் நாட்டுப்பற்றையும், மக்களிடம் அவர் கொண்ட அன்பையும், தூய செயல்திறனையும் கண்டு வந்திருந்த சத்தியமூர்த்தி, அடுத்து வரவிருந்த தலைவர் தேர்தலில், அவரை நிறுத்த முடிவு செய்தார். அதன்படியே செய்யவும் செய்தார்.

ஒரு சாதாரண தொண்டர் இந்தப் பதவிக்கு நிறுத்தியதைக் கண்ட பலர் வியப்படைந்தனர்.

இராஜாஜியோ, காமராஜருக்கு எதிராக தமக்கு வேண்டிய சீடர் சுப்பையாவை நிறுத்தினார்.

அப்போது தமிழக முதலமைச்சராக இராஜாஜி இருந்து வந்தார். அந்த காலகட்டத்தில் காந்திஜிக்கு அடுத்த நிலையில் இராஜாஜியைத்தான் தென்னாட்டுக் காந்தி என்று புகழ்ந்து வந்தனர்.

இருந்தாலும், பெரும் வெற்றியை காமராஜரே பெற்றார்.

இது தமிழக சரித்திர நிகழ்வாகும். காரணம், ஒரு தலைவர் தமது சீடருக்கே பதவி அளித்து, சீடரின் கீழே இருந்து காரியதரிசியாக பணியாற்றியதுதான்!

காமராஜர் பெற்ற இந்த வெற்றியைக் கண்டு அதிர்ச்சியடைந்தார், இராஜாஜி.

காமராஜரின் வெற்றியை இராஜாஜியின் உள்ளம் ஏனோ ஏற்க மறுத்தது.

காமராஜர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்தபோது, மாளிகையில் அவர் தங்கவில்லை; குளிர்சாதன அறையில் இருந்து அவர் அரசியல் பணிகளைப் பார்க்கவில்லை.

பல ஆண்டுகள் எவரெஸ்ட் ஹோட்டல் லாட்ஜில் உள்ள ஒரு சிறு அறையில்தான் தங்கியிருந்தார். அறை வாடகை இரண்டு ரூபாய்தான். தான் பெரும் பதவிகளை ஏற்கும் வரை அதே அறையில்தான் தங்கியிருந்தார்.

காமராஜர், விருதுநகர் நகராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்படித் தேர்ந்தெடுக்கப் பட்டவர் நேராக நகர சபைக் கூட்டத்திற்குச் சென்றார். தன் இருக்கையில் அமர்ந்து ஒரு நாள் மட்டுமே பதவியை வகித்து, அன்றே இராஜினாமா செய்து விட்டார். காரணம்...

பதவியில் இருந்தால் நாட்டு மக்களுக்கு செய்ய வேண்டிய நல்ல செயல்களையெல்லாம் செய்ய இயலாது என்பதால்தான்.

பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் கூடியது. அதில் முக்கிய முடிவுகள் எடுப்பதாக இருந்தது; முடிவும் எடுக்கப்பட்டது.

அன்றிரவே காந்திஜி, நேரு போன்ற முக்கியத் தலைவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகக் கலந்துகொண்ட காமராஜர் மட்டும் பம்பாயிலிருந்து தப்பி வந்து விட்டார்.

தலைமறைவாகவே அரக்கோணம் வந்தார். பிறகு அங்கிருந்து இராணிப்பேட்டையிலுள்ள ஒரு தியாகி வீட்டிற்குச் சென்று தங்கி, அங்கிருந்து தஞ்சைக்குச் சென்றார்.

மும்பையில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டிருந்த காமராஜர், ''நான் இன்னும் சில நாள்களில் கைது செய்யப் படுவேன். மும்பையில் எடுக்கப்பட்டுள்ள முடிவு களுக்கான போராட்டத்தில் அடக்குமுறை மிகக்

கொடியதாக இருக்கும். சிறையில் அடைபடப்போகும் நம்மவர்கள் என்று வெளியில் வருவார்கள் என்றே சொல்ல இயலாது.

“ஆகையால், என் அம்மாவை விருதுநகர் சென்று பார்த்துவிட்டு, அதன்பின் கைது ஆகலாம் என்று எண்ணுகிறேன்...'' என்றார், காமராசர்.

அன்றிரவே தஞ்சையிலுள்ள காங்கிரஸ்காரர்களை யெல்லாம் சந்தித்து போராட்டங்கள் குறித்து பேச விரும்பினார்.

அதன்படியே பூண்டி கிருஷ்ணசாமி வாண்டை யார், டாக்டர் கோபு போன்றவர்களைச் சந்தித்தார்.

பிறகு நண்பர்கள், காமராஜர் தலையில் முக்காடு போட்டு அழைத்துச் சென்று, இரயிலேற்றி, விருதுநகருக்கு அனுப்பி வைத்தனர்.

நீண்ட காலத்திற்குப்பின் தாயை கண் குளிர கண்டு தரிசித்த சில மணி நேரத்திலேயே கைது செய்யப் பட்டார், காமராஜர்.

காமராஜர், தாம் அமைத்த அமைச்சரவையில் தமக்கு எதிராக தலைவர் தேர்தலில் போட்டியிட்ட சுப்பிர மணியத்தையும் இணைத்துக் கொண்டார்; பக்தவத் சலத்தையும் சேர்த்துக் கொண்டார்.

தான் முன்னிலையில் இருந்தபோதும், யார் மீதும் பழைய வெறுப்புணர்ச்சியை அவர் காட்டியதில்லை.

அவர், ஒரு காலத்தில் நம்மை எதிர்த்து நின்றவராயிற்றே, ஒரு காலத்தில் எதிரிகளுடன் இணைந்து தேவையற்ற வார்த்தைகளைப் பேசிய வராயிற்றே என்பதையெல்லாம் பார்க்கவில்லை.

அவர் யார்...? அவரிடமுள்ள திறமைகள் என்ன? இவரைக் கொண்டு இந்தத் திட்டத்தை எப்படி செயல்படுத்த முடியும்? அதன்வழியே நாட்டு மக்களுக்கு நன்மைகளை எப்படிச் செய்ய முடியும் என்ற எண்ணம் மட்டுமே அவர் இதயத்தில் என்றும் இருந்தது.

இப்படி ஒரு பெருந்தன்மையான அரசியல் வாதியை பார்ப்பது இனி முடியுமா? என்று தோன்றுகிறது.

காமராஜர் ஆட்சியில் தமிழகம் மின்சாரம், தொழில் துறையில் இந்தியாவிலேயே முன்னிலையில் இருந்தது. கிராமங்களுக்கெல்லாம் மின்சாரம் வழங்கப்பட்டது.

கல்வியில் பல மாற்றங்களை தமிழகம் கண்டதும் காமராஜர் ஆட்சியில்தான்.

இரண்டாம் முறையாக இராஜாஜி 1952இல் முதல்வராகப் பொறுப்பேற்ற பின், குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்து, 6000 ஆரம்பப் பள்ளிகளை மூடினார்.

இவரை அடுத்து தமிழக முதல்வராக வந்த காமராஜர், மூடப்பட்ட 6000 பள்ளிகளை மீண்டும் திறந்ததுடன், மேலும் 14000 புதிய பள்ளிகளையும் திறக்க உத்தரவிட்டார்.

இப்படி கல்வித் திட்டங்கள் தொடர்ந்தபோது, ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கை 21,500 ஆக உயர்ந்து, 30,000-ஐயும் தாண்டியது. இது ஒரு மாபெரும் சாதனை என்றே சொல்லலாம்.

எல்லோரும் கல்வி கற்க வேண்டும் என்று விரும்பிய காமராஜர், ஏழைகளின் வாழ்வும் உயர்ந்திட வேண்டும் என்று விரும்பினார். அதனால், கிராமக் குழந்தைகளின் நலன் கருதி கட்டாய ஆரம்பக்கல்வித் திட்டத்தை உருவாக்கினார்.

பெரும்பாலான ஏழைக் குழந்தைகள் பசியோடும், பட்டினியோடும் இருப்பதால்தான் பள்ளிக்கு வர முடியாது இருக்கிறது என்பதை உணர்ந்த காமராஜர், மதிய இலவச சத்துணவு வழங்க ஏற்பாடு செய்தார்.

ஆடு, மாடு மேய்த்துக் கொண்டு இருந்த சிறுவர்கள் முதலில் சாப்பிடுவதற்காக பள்ளிக்கு வந்தவர்கள், பின் கொஞ்சம் கொஞ்சமாக பள்ளி வந்து படிக்கவும் செய்தார்கள்.

இன்று நம் நாட்டின் கல்வித்தரம் உயர்ந்து இருப்பதற்கு அவரிட்ட அடிக்கல்தான் இன்று உயர்ந்து பரந்து வளரக் காரணமாக இருந்தது என்பதை அறிய முடிகிறது. மகிழ முடிகிறது.

அதனால்தான், “வெள்ளைக்காரன் ஆட்சியில் 100-க்கு 7 பேர்தான் படித்தார்கள். இப்போது காமராஜ் ஆட்சியில் 100-க்கு 37 பேர் படிக்கிறார்கள். இராஜாஜி ஆட்சியில் 27 பள்ளிகள் இருந்தன. காமராஜ் ஆட்சியில் 27 ஆயிரம் பள்ளிகள் உள்ளன. கிராமங்கள் தோறும் மின்சாரம், தொழில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்தில் ஏற்படாத மறுமலர்ச்சியும், விழிப்பும் இன்று ஏற்பட்டுள்ளது. இதற்கெல்லாம் காரணம் காமராஜர்தான். மூவேந்தர் காலத்தில் கூட நடக்காத இங்க அதிசயத்தையும் காமராஜ்

செய்து காட்டினார்...'' என்று மனம் திறந்து பெரியார் புகழ்ந்து பாராட்டினார்.

இப்படி பலரும் காமராஜரின் ஆட்சித் திறனைப் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

ஆட்சித் திறனில் மட்டும் காமராஜர் சிறந்து விளங்கவில்லை. தான் ஒரு பெரும் தலைவராக இருந்தபோதும், சட்டத்தை மீறி ஒருபோதும் அவர் நடந்ததில்லை...

சட்டம் என்பது குடிமக்கள் யாவருக்கும் பொதுவானது. ஏழை, பணக்காரன், உயர்ந்தவன்; தாழ்ந்தவன் என்று வேறுபாடு கிடையாது...

சட்டத்தை மீறி யார் நடந்தாலும், தன் கட்சித் தொண்டர்கள் நடந்தாலும் அவர் பொறுக்கமாட்டார். தானும் அதுபோல் நடந்து கொள்வார்.

ஆனால், இன்று நாட்டில் நடப்பதை, அரசியல் வாதிகள் செயல்படுத்துவதை நடந்து கொள்வதைப் பார்க்குபோது, காமராஜரின் கண்ணியமும், கட்டுப்பாடும் நம்மை வியக்க வைக்கின்றன...

பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்த போது நடந்தது இது...

இரவு பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு விட்டு, தனது இல்லம் திரும்பிக் கொண்டிருந்தார்.

அவர் வந்த கார், வால்டாக்ஸ் ரோட்டிலிருந்து வந்து சென்ட்ரல் ரெயில்வே ஸ்டேஷனை அடைந்ததும் வலது புறமாகத் திரும்பியது. அது ஒரு வழிப்பாதை.

போக்குவரத்து சட்டவிதிப்படி அந்த வழியாகத் திரும்பக் கூடாது. இடது புறமாகச் சென்று, அரசு பொது மருத்துவமனை அருகில்தான் வலதுபுறம் திரும்பிச் செல்ல வேண்டும்.

அப்போது நள்ளிரவு நேரம் என்பதாலும் அதிக போக்குவரத்து இல்லாமலிருந்ததாலும், கார் ஓட்டுநர் போக்குவரத்து விதிகளை மீறி வலதுபுறமாகக் காரைத் திருப்பிவிட்டார்.

அதை கவனித்த தலைவர், ஓட்டுநர் முதுகில் அடித்து, ''ஏய் எப்படிப் போற நீ... இப்படியா போறது.... காரை நிறுத்துன்னே...இடது பக்கமாத் திரும்பி நேராப் போயி... ஆஸ்பத்திரிக்கிட்ட போயி திரும்புன்னே...'' என்று கோபத்தோடு ஓட்டுநருக்குக் கட்டளையிட்டார்.

இப்படி தலைவர் மிகுந்த கண்டிப்புடன் பேசியதும், காரில் இருந்த கட்சிப் பிரமுகர் ஒருவர், ''இல்லீங்க ஐயா.... இப்போ இரவு நேரம்தானே... போக்குவரத்தும் அதிகம் இல்லிங்களே... சீக்கிரமாய் போயிரலாமில்லையா...?'' என்று சொல்லிக்கொண்டு இருக்கும் போதே காமராஜர் இடைமறித்து....

''ராத்திரி நேரம்னா எப்படி வேணும்னாலும் போயிடுறதா...? அப்படின்னா எதுக்குச் சட்டம் போடனும்ன்னேன்....? இப்ப கூட்டம் இல்லேன்னு போயிடுவோம்.... இந்தப் பழக்கம் தானே எப்பவும் வரும்... சட்டத்தைப் போடுற நாமே சட்டத்தைக் கடைபிடிக்கலேன்னா... மத்தவங்ககிட்டே எப்படி எதிர்பார்க்கலாம்ன்னேன்....? சீப் மினிஸ்டர் கார்ன்னா

எப்படி வேணும்ன்னாலும் போயிடுறதா...?'' என்று அவரைக் கடிந்து கொண்டார்.

அவர் சென்ற கார் மீண்டும் பின்னால் வந்து, ஒழுங்கான பாதையில் உருளத் தொடங்கியது.

சட்டம் அனைவருக்கும் பொது என்பதில் தன் வாழ்நாள் இறுதிவரை உறுதியாக இருந்தவர், காமராஜர்.

சட்டங்களை இப்படி மதித்த பெருந்தலைவர் தனக்கு வேண்டியவர். வேண்டாதவர் என்று பார்க்காமல் எல்லோரையும் ஒன்றாகவே, சமமாகவே நடத்தி வந்தார்.

யார் தவறு செய்தாலும் அதைத் தட்டிக் கேட்கும் உள்ள உறுதி கொண்ட ஒரே தலைவர் காமராஜர் மட்டுமே என்று நாம் உறுதியாகச் சொல்லிக் கொள்ளலாம்.

நமது தேசத்தந்தை அண்ணல் காந்தியடிகளின் செயலுக்கே கண்டனம் தெரிவித்த துணிவு, காமராஜருக்கு மட்டுமே உண்டு என்பர்.

அதுபோல் கணக்கு வழக்குகளில் மிகவும் கண்டிப்பாகவும், கறாராகவும் நடந்து கொள்வார்.

அரசுப் பணமானாலும், பொது மக்கள் பணமானாலும் அவை முறையாகச் செலவிடப்பட வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாகச் செயல்படுவார்.

தன்னை ஈன்ற தாயாருக்குக் கூட மாதம் இவ்வளவுதான் என் சம்பளத்தில் இருந்து கொடுக்க முடியும் என்று உறுதியாகச் சொன்ன உத்தமரல்லவா, பெருந்தலைவர்...?

*1935*-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ஆம் தேதி இந்தியா முழுதும் காங்கிரஸ் கட்சியின் பொன் விழாக் கொண்டாட்டங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

விருதுநகரிலும் காமராஜரின் நேர் பார்வையில் பொன் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காமராஜருடன் உறுதுணையாக இருந்து வந்த முருக தனுஷ்கோடி, விழாக்குழு அமைப்பாளராகச் செயல்பட்டு வந்ததால், பணப் பொறுப்பு முழுவதும் முருக தனுஷ்கோடியிடமே இருந்தது.

விழாச் செலவுக்கு ஆயிரக்கணக்கில் பணம் வசூல் செய்ய காமராஜர் பெரிதும் உதவி செய்தார்.

பொன் விழாவைக் கோலாகலமாக நடத்திய பிறகு, ஒரு வாரம் கழித்து வரவு, செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டன.

அப்போது வரவுக்கும், செலவுக்கும் 69 ரூபாய் வித்தியாசம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

முருக தனுஷ்கோடி ஏதோ ஒரு கணக்கினை எழுத மறந்துவிட்டார் போலும். வித்தியாசத்திற்கு விபரம் கேட்டார், காமராஜர்.

''செய்த செலவில் ஏதோ ஒன்றினை எழுத மறந்துவிட்டேன். என்மேல் நம்பிக்கை வைத்து, வித்தியாசத் தொகையைத் தள்ளுபடி செய்யுங்கள்'' என்று தலைவரிடம் தனுஷ்கோடி வேண்டிக் கேட்டுக் கொண்டார்.

ஆனால், அதற்குக் காமராஜர் ஒப்புக் கொள்ள வில்லை. ''அரை மணி நேரம் அவகாசம் கொடுக்கிறேன். அதற்குள் கணக்கைச் சரியாக எழுதிக்

கொடு. இல்லையானால் வித்தியாசத் தொகையைக் கட்டிவிடு'' என்று மிகவும் கண்டிப்புடன் பெருந் தலைவர் சொல்லிவிட்டார்.

வேறு வழி இல்லாமல் தனுஷ்கோடி பணத்தைக் கட்டினார். பொதுக் கணக்குகள் விஷயத்தில் காமராஜர் மிகவும் கவனத்துடனும், கண்டிப்புடனும் செயல் பட்டதால்தான் அவரை எந்தக் காலத்திலும், எவரும் குறை சொல்ல இயலவில்லை.

இதனால்தான், தென்னாட்டு கறுப்புக் காந்தி என்று எல்லோராலும் புகழப்பட்டார்.

காமராஜர் படித்ததோ ஆறாம் வகுப்பு மட்டுமே என்பதை நாம் அறிவோம்.

இருந்தாலும் அவர் தமிழ் மொழியில் மட்டுமல்ல மலையாளம், கன்னடம், தெலுங்கு, இந்தி மற்றும் ஆங்கில மொழிகளிலும் சரளமாக பேசுகின்ற ஆற்றலையும், பிறர் பேசுவதைப் புரிந்து கொள்ளும் திறமையையும் நன்கு வளர்த்துக் கொண்டவர்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக காமராஜர் இருந்தபோது, ஒரு முறை ஊட்டியில் தங்கியிருந்தார்.

அப்போது காமராஜரின் பாதுகாப்பாளர் ஒருவர் அவரிடம் வந்து, அமெரிக்கத் தூதரகத்தில் இருந்து சில தூதுவர்கள் அவரைக் காண வந்திருப்பதாகச் தெரிவித்தார்.

காமராஜரும் அவர்களை உடனே, 'வரச் சொல்லு...' என்று சொல்லியனுப்பினார்.

வந்த பிரதிநிதிகள் காமராஜருடன் சுமார் மூன்று மணி நேரம் சரளமாக உரையாடினர். அவர்களுக்கு இணையாக காமராஜரும் அவர்களுடன் ஆங்கிலத்தில் சரளமாக உரையாடிக் கொண்டிருந்தார்.

அப்போது காமராஜருடன் அங்கு வந்திருந்த பத்திரிகை நிருபர்கள் மிகுந்த வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

உரையாடி விட்டு, விடை பெற்று வெளியே வந்த அந்த அமெரிக்கப் பிரதிநிதிகள், இவர் ஒரு மாபெரும் தலைவர் என்று காமராஜரைப் புகழ்ந்த படியே சென்றனர்.

இவர்கள் சந்திப்பு நடந்து கொண்டு இருக்கும் போதே டில்லியிலிருந்து தொலைபேசியில் பேசிய பிரதமர் இந்திரா காந்தியிடம், ஆங்கிலத்திலும் இந்தியிலும் மாறி மாறி உரையாடிக் கொண்டிருந் ததையும் நிருபர்கள் வியப்பு மேலிட பார்த்து வியந்து கொண்டிருந்தனர்.

பல மொழிகளை அறிந்தவர் காமராஜர் என்பது சிலருக்குத் தெரியும். ஆனால், அவர் என்னென்ன நூல்களை படிப்பார் என்பதும், என்னென்ன பத்திரிகை களைப் படிப்பார் என்பதும் எவரும் அறிந்து கொள்ள முடியாமலேயே இருந்து வந்தது எனலாம்.

புத்தகம் படிப்பதை தன் கடமைகளில் ஒன்றாகவே வாழ்நாள் முழுதும் கைக்கொண்டிருந்தார் என்பதை அறிய முடிகிறது.

இரவு தூங்குவதற்குமுன் ஒரு மணி நேரமாவது படிக்கின்ற பழக்கத்தைக் கொண்டிருந்தார், காமராஜர்.

எழுத்தாளர் 'சாவி' பெருந்தலைவர் காமராஜருடன் நெருக்கமான நட்புக் கொண்டவர். இவர் தலைவருடன் ஒருநாள் முழுதும் உடனிருந்து, அவரது பழக்க வழக்கங்களை அறிய விரும்பினார்.

அதனால், டில்லி சென்று தமிழ்நாடு இல்லத்தில் அவரைச் சந்தித்தார்.

அப்போது பெருந்தலைவரின் வரவேற்பு அதிகாரி ஒருவரை சந்தித்த சாவி, ''தலைவர் என்னென்ன புத்தகங்கள் படிக்கிறார்'' என்று கேட்டார்.

தமிழ், ஆங்கிலப் புத்தகங்கள் படிப்பதைப் பார்த்திருக்கிறேன். ஆனால், அவை என்னென்ன என்பது எனக்கு தெரியாது. அவர் பெட்டிக்குள் நிறைய புத்தகங்கள் வைத்திருப்பார். அவ்வளவுதான் தெரியும்...'' என்றார்.

'அவை என்ன புத்தகங்கள் என்பதை அறிய வேண்டும்' என்ற எண்ணத்தில், அடுத்த நாள் காலையில் அவர் அறையை எட்டிப் பார்த்தார்.

தலைவர் சோபா ஒன்றில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தார். அவர் முன்னிருந்த மேஜையின் மீது, இந்து, டைம்ஸ் ஆப் இந்தியா, ஹிந்துஸ்தான் டைம்ஸ், இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற ஆங்கிலத் தினசரிப் பத்திரிகைகள் இருந்தன.

அறைக்குள் நுழைந்த சாவி, காமராஜரைப் பார்த்து, பத்திரிகைகளில் அரசியல் செய்திகள் மட்டும் படிப்பீர்களா...? அல்லது...'' என்று தனது ஐயத்தைப் போக்கிக் கொள்ள கேள்வியைக் கேட்டு வைத்தார்.

''எல்லாம்தான்... எந்த ஊரில் என்ன பிரச்னை என்பது படிப்பேன். ஒரு ஊரில் தண்ணீர் இல்லை என்ற செய்தி இருந்தால் அதையும்தான் படிப்பேன். தண்ணீர் இல்லை என்பதும் அரசியல் சம்பந்தப் பட்டதுதானே...?'' என்று சொல்லிக் கொண்டே அடுத்த அறைக்குள் நுழைந்தார். அது அவரது படுக்கை அறை.

சாவியின் கண்கள் அறையை நோட்டமிட்டன. அதைக் கண்ட தலைவர், ''என்ன பார்க்கிறீங்க?'' சிரித்துக் கொண்டே கேட்டார்.

''ஒன்றுமில்லை... தங்களைக் கூடவே இருந்து இன்று கவனிக்கப் போகிறேன். இது என்னுடைய நீண்ட நாள் ஆசை'' என்றார், சாவி.

''அப்படியா, வாங்க... இப்படி உட்காருங்க...'' என்று கூறிக் கொண்டே, தமது பெட்டியில் இருந்த சலவைத் துணிகளை ஒவ்வொன்றாக எடுத்து கீழே வைத்துக் கொண்டிருந்தார்.

பெட்டிக்குள் துணிகளோடு என்னென்ன இருக்கின்றன என்பதறிய சாவி, தமது விழிகளை அதனுள் பதித்தார்....

அவரின் பார்வையில்... இன்சைட் ஆப்பிரிக்கா, 'எண்ட்ஸ் அண்ட் மீன்ஸ்', டைமாகஸின், 'நியூஸ் வீக்' போன்ற ஆங்கிலப் பத்திரிகைகள், புத்தகங்கள் பட்டன.

இந்திய நாட்டின் அரசியல்வாதிகளை மட்டும் தெரிந்து வைத்துக் கொண்டு காமராஜர் அரசியல் நடத்தவில்லை.

ஆப்பிரிக்காவில் என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்வதிலும் அவர் ஆர்வம் கொண்டிருந்தார்.

அதனால்தான் ஒவ்வொரு நாட்டின் அரசியலையும், ஆட்சியையும் தெரிந்து வைத்துக் கொண்டு, இந்தியாவில் ஜனநாயக சோசலிசத்தை உருவாக்குவதில் தீவிர கவனம் செலுத்தி வந்தார்.

நம் தாய் நாட்டு விடுதலைப் போராட்டத்தில் சிறு வயதிலேயே தன்னை முழுமையாக அர்ப் பணித்துக் கொண்டவர், காமராஜர்.

கர்மவீரர் என்றும், படிக்காத மேதை என்றும், ஏழைப் பங்காளர் என்றும், பச்சைத் தமிழரென்றும், கல்விக் கண் கொடுத்தவர் என்றும், பெருந்தலைவர் என்றும் நாட்டு மக்களால் போற்றப்பட்டவர் காமராஜர்.

இந்தப் புகழும், போற்றுதலும் அவருக்கு ஒரு நாளில், ஒரு மாதத்தில், ஓர் ஆண்டில் வந்ததில்லை.

ஒன்பது ஆண்டு சிறைவாசம், ஐந்து முறை சட்டமன்ற உறுப்பினர், நான்கு முறை நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்பது ஆண்டுகள் தமிழக முதல்வர், ஐந்து ஆண்டுகள் அகில இந்திய காங்கிரஸ் தலைவர், இரண்டு முறை இந்திய பிரதமர்களை உருவாக்கிய ஒரே தமிழர்! இதன் மூலம் புகழும் போற்றுதலும் வந்தன.

■



இந்நூலாசிரியர் பாபநாசம் குறள்பித்தன் 19.07.1946 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர். இவரது பெற்றோர் தனம்-வெங்கடாசலம் தம்பதியர். தஞ்சை கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் புலவர் பட்டம் பெற்றவர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நடத்தி வந்த தாய் வார இதழில் துணையாசிரியராகப் பத்து ஆண்டுகள் பணியாற்றியவர். சிறுவர், ஆன்மிகம், நாடகம், கவிதை என பன்முகத் துறைகளில் ஆர்வம் கொண்டு 75க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கிறார்.

வி.ஜி.பி. விருது (1984),
மனித நேய அறக்கட்டளை விருது(2001),
திருப்பூர் தமிழ்ச் சங்க விருது (2002),
காஞ்சி தமிழ்வளர்ச்சி சங்க விருது (2008),
மதுராந்தகம் மகாகவி பாரதி
நற்பணி மன்ற விருது (2008),
ஸ்ரீ வைணவ மகா சங்க விருது (2008) என
பல்வேறு அமைப்புகளின் பாராட்டுதல்களைப் பெற்றவர்.

1965 ல் சுதேசமித்திரனில் எழுதத் தொடங்கிய இவர் தொடர்ந்து இன்று வரை எழுதி வருகிறார்.

தமிழன் பதிப்பகம்